

கல்கி
KALKI 27.8.89 ரூ. 2.50
காஷ்மீரைக்
காப்பாற்ற முடியுமா?

புலி-புல்லெட்-பிரபாகரன்!

ஜி. ஹெச். எமர்ஜென்ஸி பகுதியில் இரண்டாம் நெம்பர் வார்டு. போலீஸ் கான்ஸ்டபிள் பிரபாகரன் படுத்துக் கொண்டிருக்கும் கட்டில், அவரது கால்மாட்டுப் பக்கத்தில் தரையிலிருந்து ஓர் அடி இருக்கும்படி கட்டைகளால் தூக்கி நிறுத்தப்பட்டுள்ளது. இடதுகால் சாய்வான ஒரு பலகை மேல் தூக்கி வைக்கப்பட்டுள்ளது. கால் முழுக்கக் கட்டு. ஸ்டாண்டு ஒன்றில் அமைக்கப்பட்ட ஜக்கடைச் சக்கரம் வழியே செல்லும் பிளாஸ்டிக் கயிற்றின் ஒரு முனை பிரபாகரன் காலில் கட்டப்பட்டிருக்க, மறுமுனையில் 'எடைக் கற்கள்.'

பிரபாகரன் விருத்தாசலம் பக்கத்தில் உள்ள ஸ்ரீமுஷ்ணம் காவல் நிலையத்தில் கான்ஸ்டபிள். கடந்த ஆகஸ்ட் ஆறாம் தேதி, நாகம்பந்தல் என்கிற கிராமத்தைச் சேர்ந்த சிலர் வந்து, ''எங்கள் ஊரில் புலி நடமாடுகிறது. இரண்டு மூன்று பேரை அடித்து விட்டது,'' என்றார்கள். ஸ்ரீமுஷ்ணம் சப்—இன்ஸ்பெக்டர் பஷீர், பிரபாகரன், மற்றும் இரு ஆயுதப்படை போலீஸார் ஆக நான்கு பேரும் நாகம்பந்தல் கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தனர். அப்போது மாலை சுமார் ஆறு மணி இருக்கும். ஆண்டிமடம் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து சப் – இன்ஸ்பெக்டர் விஜயகுமாரும் மற்றும் சில போலீஸாரும் இவர்களுடன் சேர்ந்து கொண்டனர். ஊர் மக்கள் சிலர் உதவியுடன், புலி பதுங்கியிருந்த புதர் பகுதியைக் கண்டுபிடித்தனர். இதன் பிறகு நடந்ததைப் பிரபாகரனே விவரிக்கிறார்:

''சப் – இன்ஸ்பெக்டருக்கு நான், புலி பதுங்கியுள்ள புதரைக் காட்டி, பேசிக் கொண்டிருந்த போதுதான் திடீரென அது நிகழ்ந்தது. நாலடி உயரம்; நல்ல நீளம். புலி என் மீது புதர் மறைவிலிருந்து பாய்ந்தது. ஓங்கி ஓர் அடி என் இடது தோளில் வைத்தது. அடுத்த அடி என் இடது தொடையில். நான் அதைத் தள்ளிவிட முயற்சி செய்த போது, என் முதுகிலே பிராண்டியது. அப்போது டுமீல், டுமீல் என்று சப்தம் கேட்டது. என் இடது தொடையில் கொள்ளிக் கட்டையைச் செருகியது போல் ஏதோ தாக்கியது. மயக்கமாய் வந்தது.

''என்ன நடந்தது என்பதைப் பின்னால் தான் தெரிந்து கொண்டேன். புலியின் திடீர்த் தாக்குதலைச் சமாளிக்க இன்ஸ்பெக்டர் விஜயகுமார், தமது துப்பாக்கியால் புலியைச் சுட, அது துரதிர்ஷ்டவசமாய் என் தொடையில் பாய்ந்து விட்டது. புலி தப்பித்து ஓடிவிட்டது.''

உடனடியாய் முதலுதவி தரப்பட்டு, பிறகு கடலூர் அரசு ஆஸ்பத்திரி டாக்டர்களின் அறிவுரைப்படி சென்னைப் பொது மருத்துவமனைக்குத் தனி போலீஸ் வேனில் கொண்டுவரப்பட்டார் பிரபாகரன்.

''எக்ஸ்ரேக்கள் எடுக்கப்பட்டுள்ளன. உள்ளே புல்லட் இருக்கிறதா இல்லையா என்று நிச்சயிக்க முடியவில்லை. அதைக் கண்டுபிடித்தபின், புல்லட்டை வெளியே எடுக்க ஆபரேஷன் செய்வோம். எலும்பு முறிவும் ஏற்பட்டுள்ளது. அதற்கும் உரிய சிகிச்சை அளிப்போம்'' என்றார் ஒரு மருத்துவ அதிகாரி.

''சுட்ட சப் – இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?''

''புலியைக் கொல்லவும், கான்ஸ்டபிளைக் காப்பாற்றவும் வேண்டும் என்கிற ஒரே காரணத்துக்காகத்தான் சப் – இன்ஸ்பெக்டர் சுட்டிருக்கிறார். எனவே, இதைக் குற்றம் என்று சொல்ல முடியாது. ஆனாலும் ஸ்டேஷனில் கேஸ் பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடத்தப்படும்'' என்றார் டி. ஐ. ஜி. ரஞ்சித்சிங்.

— எஸ். சந்திரமௌலி.





கண்ணீர் கசியும்

புகையிலை, சிகரெட், மது, கஞ்சா என்ற லாகிரி வஸ்துக்கள் வரிசையில்தான் சினிமாவையும் சேர்த்துக் கொள்ளணுமோ! பார்ப்பவர்களுக்கு மட்டுமில்லை, நடிப்பவர்களுக்கும்கூட அது லாகிரிப் பொருள்தான். அதற்கு அடிமையாகித் தன்னை அழித்துக் கொண்ட ஒரு குருத்தின் உண்மைக் கதை* இது:

சரஸ்வதியம்மாளைக் கோடம்பாக்கத்தில் மிகக் குறுகலான சந்தில் இரண்டாவது மாடியில் ஓர் அறையில் சந்தித்தேன். கூனிப் போய் உட்கார்ந்திருந்தார். தலைக்கு மேல், சுவரில் 'விரைவில் இளம் கதாநாயகி சுபிதா நடிக்கும்...' என்று புதுசு புதுசாய்ப் பத்துப் பதினைந்து சினிமாப் படங்களின் பெயர்களைக் கரியில் எழுதியிருந்தது.

''யாருப்பா நீ? என்ன வேணும்?'' என்றவரிடம்,

''சுபிதாவைப்பற்றிக் கேள்விப்பட்டோம். பத்திரிகையில எழுதலாம்னு இருக்கோம். கொஞ்சம் சொன்னீங்கன்னா...'' என்றேன்.

''முதலெ இந்தக் காகிதத்தைப் படி...'' என்று பழுப்பு நிறத்தில் ஒரு காகிதத்தை நீட்டினார். நான்காய் மடித்து இருந்தது. பிரித்துப் படிப்பதற்குள் பழைய நினைவுகளைக் கிளற ஆரம்பித்தார். பேசாமல் காகிதத்தை மடித்து வைத்து விட்டுக் கேட்கலானேன். அவர் சொன்ன கதை:

சுபிதாவை நீங்கள் பார்த்திருப்பீர்கள். பல வண்ண உடைகளில், இடுப்பு வளைத்து ஒயிலாக ஆடும் டான்ஸராய்.. பிரபல கதாநாயகிகளின் புஜத்தில் கை ஊன்றிக் காதில் ரகசியம் பேசும் ஸ்நேகிதியாய்.. ரஜினிகாந்தின் மீசையைச் செல்லமாகத் திருகி ''என்னா லேட்டு?'' என்று கோபிக்கும் தங்கையாய்.. இப்படிப் பல தினுசாய்த் தமிழ்ச் சினிமாவில் சுபிதாவைப் பார்த்திருப்பீர்கள்.

ஆனால் சுபிதாவின் நோக்கமெல்லாம் எப்படியாவது திரை முழுவதிலும் க்ளோஸ்–அப்பில் பளிச்சென்று சிரிக்கின்ற கதாநாயகியாக வேண்டும் என்பதுதான். ஒரே ஒரு படம் மட்டுமாவது நாயகியாக நடித்து விட வேண்டும். ''சினிமாக்காரன் பின்னாடி தறிகெட்டுப் போயிருக்காளே – சீரழிஞ்சு குட்டிச்சுவராப் போவப் போறா பாரு...'' என்று நான்கு வருஷமாய்ப் பேசும் ஊரின் வாயடைக்க, ஒரே ஒரு படம் பண்ணினால் போதும்! இதற்குத்தானே இத்தனை காலமாய்த் துக்கம் மென்று விழுங்கி, வேதனை மறைத்துப் பொய்யாய்ச் சிரித்து, வளைய வந்து கொண்டிருக்கின்றாள்.

அன்றொரு நாள் ''இந்தாம்மா மல்லிகா! (அதுதான் அவள் இயற்பெயர்) மகாபலிபுரம் பக்கம் ஷூட்டிங் வர்றியாம்மா? நல்ல வேஷம். ரெண்டு மூணு க்ளோஸ்–அப் இருக்குன்னு சொன்னாங்க.. ரொம்ப நாளா கேட்டுக்கினு இருந்தியேன்னுதான் உன்னை இட்டுக்கினு போவலாம்னு வந்தேன்...'' – பீடிப் புகையைக் கக்கிக் கொண்டே ஏஜெண்ட் கேட்க, சுபிதாவுக்குச் சந்தோஷமாயிற்று. சரசு அக்காவிடம் சொல்லி விட்டுக் கிளம்பினாள்.

சுபிதாவிற்குச் சரசு அக்காதான் ஸ்நேகம். முப்பது வருட சினிமா முதிர்ச்சி! க்ரூப் டான்ஸில் ஆடிக் கொண்டிருந்து டான்ஸ் மாஸ்டராய் உயர்ந்தவள். கோபி செட்டிப் பாளையம் சென்ற அவுட் டோர் யூனிட் ஒன்று, இரண்டு சீனுக்கு உள்ளூரில் ஆள் தேடிய போது, மல்லிகா சிக்கினாள். சீன் பிரமாதமாய் அமைந்து போயிற்று! 'ஃபஸ்ட் க்ளாஸ் பர்ஸனாலிடி. நீ நினைத்தால் சினிமாவில் ஓகோவென்று வரலாம்' என்று ஆளாளுக்குப் பேச, மல்லிகா கிறங்கிப் போனாள். குடும்பம் முறித்துச் சென்னைக்குக் கிளம்பினாள். கோடம்பாக்கம் வந்து திசை தெரியாது தவித்த மல்லிகாவைச் சுபிதாவாக மாற்றிச் சினிமாவில் சின்னதாய் அடையாளம் காட்டினாள் சரசு! வாய்ப்புத் தேடிப் போய் ரணமாய்த் திரும்பும் சுபிதாவின் மனசுக்கு இதமாய் மருந்து தடவி விட்டாள். இருவரும் ஒன்றாய்ச் சமைத்துச் சாப்பிட்டு, ஒன்றாய்த் தங்கினார்கள்.

மகாபலிபுரத்தில் சுபிதாவுக்குக் காட்சி விளக்கினார்கள். அவள் தலைமுடியைக் கொத்தாய்ப் பிடித்து வீதியில் தள்ளிப் பரபரவென்று இழுத்துக் கொண்டு போவான் வில்லன். உடம்பில் துளி பாதிப்பு இன்றி முகத்தில் மட்டும் பாவம் காட்ட வேண்டும். அற்புதமாய்ச் செய்தாள். ஒரே டேக்கில் ஓ.கே. ஆயிற்று! மெல்லிய

* பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.

கனவுத் தொழிற்சாலை

தாய்த் தோல் சிராய்ந்து, ரத்தம் கசிய, ஏற்பட்ட எரிச்சலை உதடு கடித்து விழுங்கினாள்.

''சரசக்கா! இன்னைக்குப் பண்ணின ரோல் நிச்சயம் கிளாப் வாங்கும். நாலு க்ளோஸ்—அப் ஷாட்டு எடுத்தாங்க. எனக்கே ஆச்சரியமாப் போச்சு.. மகமாயி இப்பவாவது கண் தொறந்தாளே. இனி கவலை இல்லே சரசக்கா; ரூட் பிடிச்சிடலாம்...'' என்றாள் அன்று இரவு சரஸ்வதியிடம்.


சுபிதா குரூப் டான்ஸுக்காக அவுட்டோர் போயிருந்த போது அந்தப் படத்தின் 'பிரிவியூ' பார்த்தாள் சரசு. எடிட்டிங்கில் சுத்தமாய் வெட்டிப் போட்டு விட்டார்கள் அந்தக் காட்சியை. சுபிதா பார்த்தால் அப்படியே துடிதுடித்துப் போவாள். இரவு முழுவதுவும் சரசுவிற்குத் தூக்கமே பிடிக்கவில்லை. சுபிதா பூஞ்சை மனசுக்காரி பட்டென்று முறிந்து போவாள்.

அவுட்டோர் போன வேன் இரவு மூன்று மணிக்குத் திரும்பி வந்தது. தெருக் கோடியில் வண்டி நிற்க, சரசு படியிறங்கி வந்தாள். தெரு முழுக்க ஒரே இரைச்சல்! அவுட்டோர் போனவர்கள் மரத்திலிருந்து கீழே விழுந்து விட்டார்களாம். ஆறு பெண்கள் இடுப்பு முறிந்து பின்னங்கை சதை தொங்கிக் கிடந்தார்கள். சுபிதாவுக்கு முதுகில் அடி. அடிபட்டவர்களுக்குத் தலைக்கு இரு நூறு ரூபாய் சேர்த்துக் கொடுத்தார்களாம்.

''அட துப்புக் கெட்ட சனியன்களா உசுரு போயிருந்தா? இப்படிச் சதை கிழிய வந்து கிடக்கீங்களே.. பாவி மக்கா...'' இரைந்தாள் சரஸ்வதி.

மறுநாள், எழ முடிந்தவர்களை அழைத்துக் கொண்டு, அடிபட்ட பெண்களுக்கு நிவாரணம் வேண்டும் என்று புரொடியூசர் வீட்டில் போய் நின்றாள் சரசு. அந்த மனுஷன் மிரட்டுகின்ற விதமாய்ப் பேச ஆரம்பித்தார்.

''இது என்னப்பா நியாயம்... உங்க இஷ்டத்துக்கு உச்சி மரத்தைக் கை காட்டுவீங்க. அது மேலெ ஏறி இதுக ஆடணும்! எங்கடா விழுந்து சாவப் போறோமோ என்ற பயத்துலெ மலரச் சிரிக்கணும்! நடு ஆத்துத் தண்ணியிலெ வழுக்கற பாறையிலெ உட்காந்து காலாட்டிப் பாடணும். பிசகினால் எலும்பு தேட முடியாது. சில குளத்துலெ இறக்குவீங்க பாரு — நாற்றம் குடலைப் புரட்டும். அதுலெ மணிக்கணக்கிலே கெடக்கணும். எங்களோட ரணத்தை ரசிக்க விட்டுக் கோடி கோடியா வாரிக் கொட்டிக்கிறீங்களே சாமிகளா... நாங்க வயித்துப் பாட்டுக்கே தவிக்கிறோம்...''



சரசு மூச்சிறைக்கப் பேசினாள். புரடியூசர் வெளியே பிடித்துத் தள்ள எல்லோரும் வெளியேறினார்கள்.

சினிமாத் துறையில் ஐம்பத்தி இரண்டு அஸோசியேஷன்கள் இருக்கின்றன. என்ன செய்ய? அவதிப்படுகின்ற ஜனங்கள் அவதிப்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றனர். புரட்யூசர் வீட்டிலிருந்து கும்பலாய்த் திரும்புகையில் சுபிதா மௌனமாய் வீதியில் நடந்தாள். கொத்துக் கொத்தாய் வேலைக்குப் போய்த் திரும்பும் பெண்களைப் பார்க்க மனசு கிளர்ச்சி அடைந்தது. கனவுகளை எல்லாம் பொசுக்கி விட்டு வேலை தேடிப் போகலாமா? போனாள்! பாண்டிபஜாரில் ஒரு ஜவுளிக் கடைக்கு — ஆறு நூறுக்கு சேல்ஸ் வுமனாய்ப் போனாள். முடியவில்லை. ஒரு மாசத்திற்கு மேல் இருக்க முடியவில்லை! ஜவுளிக் கடையிலும் சினிமா நடிகை பற்றிப் பேச, சினிமாத் தவிப்பு துரத்திற்று!

மீண்டும் சரசுவிடம் போய் வாய்ப்புத் தேடினாள். சரசுவுக்குத் தெரியும்! சினிமா ஆள் இதை விட்டு வெளியே போக முடியாது. எவ்வளவு கஷ்டப்பட்டாலும், ஊர் தூற்றினாலும் திரும்பத் திரும்ப புத்தி இங்கேயே அலைபடும். சினிமா மிகப் பெரிய போதை வஸ்து. அத்தனைச் சுலபமாய் மீள முடியாது. எழுந்தாலும் மீண்டும் உள்ளேதான் விழச் சொல்லும். 'தப்பிக்க முடியும் என்றால் நான் ஏன் நாற்பது வருஷமாய் நாயாய் அலைபடுறேன்?' — சரசுவின் பேச்சைச் சுபிதா கன்னத்தில் கைஊன்றி வியப்புடன் கேட்டாள்.

சுபிதா மீண்டும் ஒவ்வொரு கம்பெனியாய் ஏறி சான்ஸ் கேட்டாள். எல்லோரும் பார்ப்போம் என்ற பதிலையே சொன்னார்கள். சின்ன இடைவெளியானாலும் மீண்டும் இடம் பிடிப்பது கஷ்டமாய் இருந்தது. ஒவ்வொரு நாளும் நம்பிக்கையோடு விடிந்து, வேதனையில் முடிந்தது. எக்ஸ்ட்ரா நடிகையாய் நடிக்கப் போகத் துணிந்தாள். என்ன செய்வது! மூன்று வேளையும் வயிற்றைக் கழுவ வேண்டுமே! துணை நடிகர்கள் சங்கத்தில் மெம்பரானாள். 'ஏ கிரேட்' லேபில் ஒட்டினார்கள். நூறு ஐம்பது என்று வரும்படி வந்து கொண்டிருந்தது. ஆனால் மனசுக்குள் அரிப்பு அடங்கவில்லை.

அன்று ஊட்டியில் ஷூட்டிங் முடிந்ததும் திடுமென கோபிச் செட்டிப்பாளையம் சென்று ஒரு பாடல் ஷூட் பண்ணி விடலாம் என்று திட்டம் திசைமாறியது. சுபிதாவுக்கு ஹிருதயத்தைக் கிள்ளி எரிகின்ற வலி. சொந்த ஊரில் கதாநாயகியாய்க் கால் வைக்க வேண்டும் என்று எத்தனைக் கனவுகளை முந்தானையில் முடிந்து வைத்திருந்தாள்! போகட்டும் நல்ல ரோல் பண்ணினாலும் பரவாயில்லை! இப்படிக் கதாநாயகிக்குப் பின் நின்று கொண்டு கலர் ரிப்பன் ஆட்டினால்...! ஊர் கை கொட்டிச் சிரிக்காதா? கான்ட்ராக்டிலிருந்து கழன்றுச் சென்னை திரும்பவும் முடியாது. கண நேரத்தில் மனத்தில் சில மாற்றங்கள் நிகழ்ந்தன. கையில் போட்டிருந்த கண்ணாடி வளையலைக் கழற்றித் தட்டி நொறுக்கிப் பாலில் கலந்து குடித்தாள். எந்த மண்ணில் கதாநாயகியாகக் கால் வைக்க வேண்டும் என்று கனவுடன் இருந்தாளோ அந்த மண்ணில் பிணமாய் வந்து சேர்ந்தாள்.

சரஸ்வதி சொன்ன கதை இத்துடன் முடிந்தது. நிகழ்ச்சியின் அதிர்ச்சியிலிருந்து அவர் இன்னும் மீளவில்லை என்பதை அவர் பேச்சு உணர்த்தியது. கோர்வையற்ற பேச்சு... அவர் கொடுத்த பழுப்பு நிறக் காகிதத்தைப் பிரித்துப் படித்தேன். சுபிதா சாவதற்கு முதல் நாள் வந்த கடிதமாம்.

''திருமதி சரஸ்வதி அவர்களுக்கு, தாங்கள் அறிமுகப்படுத்திய சுபிதா என்ற ஆர்டிஸ்ட் எங்கள் கதைக்குப் பொருந்தி வருகின்றாள். மேக்—அப் டெஸ்ட் கூட ஓ.கே. இப்படி ஒரு புதுமுகத்தை அறிமுகப்படுத்துவதில் எங்கள் கம்பெனி பெருமைப் படுகின்றது. நேரில் வந்தால் மற்ற விஷயங்களைப் பேசலாம்'' என்று எழுதியிருந்தது.

— பாலசுப்பிரமணியன்

படம்: யோகா

நடிப்பு: விஜயா, கீர்த்தி.

கலர் டி. வி. பரிசு பெற...

இன்னும் இரண்டு வாரங்களே உள்ளன.! சீக்கிரம் உங்கள் டி. வி. வீடியோ அனுபவங்களைக் கல்கிக்கு எழுதி அனுப்புங்கள். விமர்சனங்களும் எழுதலாம். சிரிக்க வைக்கும் வகையில் இருப்பதோடு, உங்கள் துணுக்குடன் அண்மையில் வெளியான கல்கியின் தலையங்கப் பக்கத்திலுள்ள தேதிப் பகுதி (மூன்று வரிகள்) இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பிரசுரமாகும் துணுக்குகளுக்கு ரூ. 25 பரிசு. தவிர, குலுக்கல் முறையில் ஒருவருக்குக் கலர் டி. வி!

— ஆசிரியர்.



உங்கள் குடும்ப ஆரோக்கியத்திற்கான டின்
1கிலோ சாக்கலேட் காம்ப்ளான்
Complan
COMPLETE PLANNED FOOD
CHOCOLATE FLAVOUR
No need to add milk
FREE!
Collect a ceramic mug with this pack.
இலவசம்!
Complan
இரண்டு 500 கிராம் டின்களுக்குப் பதில், வாங்குங்கள் 1 கிலோ சாக்கலேட் காம்ப்ளான் டின், மிச்சமாக்கிடுங்கள் 4 ரூபாய். அத்துடன் ஒரு பீங்கான் குவளை இலவசம். உங்கள் குடும்பத்தினருக்கு அன்றாடம் தேவைப்படும் மூலாதார சத்துணவுகள் கொண்டதாகும், காம்ப்ளான்.
வாங்குங்கள் இன்றே.
23
மூலாதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்
காம்ப்ளான்

GX/58/213 TML

காஷ்மீரைக் காப்பாற்ற முடியுமா?

அமைதிச் சூழலாக இருந்த காஷ்மீர் பள்ளத்தாக்கில் இன்று, கொலை, குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு என்பன தொடர்கதையாகி வருகின்றன. காரணம் என்ன?

பாகிஸ்தான் பல காஷ்மீர இளைஞர்களுக்குப் பயங்கரவாதத்தில் பயிற்சி அளித்து அனுப்பி வைப்பதுதான். இதற்குக் காஷ்மீரில் உள்ள சில பிரிவினைவாதிகளே உதவுகிறார்கள். வேலையில்லா இளைஞர்கள் இவர்களின் ஏமாற்று வார்த்தைகளுக்குப் பலியாகிறார்கள்.

எனவே, காஷ்மீரைக் காப்பாற்றுவது என்பது அரசியல் மட்டுமல்ல. தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியை உள்ளடக்கிய திட்டமாக அது அமைய வேண்டும்.

இந்தியாவின் அண்டை நாடுகளில் தூதராகப் பணியாற்றி, வெளியுறவுத் துறைச் செயலாளராகவும் விளங்கி ஓய்வு பெற்ற கே. பி. எஸ். மேனன், கவலை தரும் காஷ்மீர் பிரச்னையைப் பற்றி மேலும் விரிவாகச் சொல்கிறார்:

"காஷ்மீர் பிரச்னையைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், சுதந்திரம் வாங்கிய காலகட்டத்துக்குக் கொஞ்சம் பின்நோக்கிச் செல்ல வேண்டும். இந்தியாவும் பாகிஸ்தானும் தனித்தனியாகப் பிரிந்த பிறகு, எல்லைகளையொட்டிய சுதேச சமஸ்தானங்கள் அவரவர் இஷ்டப்படி யாருடன் வேண்டுமானாலும் இணைந்து கொள்ளலாம் என்று பிரிட்டிஷ் அரசு கூறிவிட்டது. அப்போது காஷ்மீர் சமஸ்தானத்தை ஆண்டு கொண்டிருந்தவர் மகாராஜா ஹரிசிங். ஹரிசிங், முடிவு எடுப்பதைத் தாமதித்துக் கொண்டே வந்தார். காரணம், காஷ்மீர் பள்ளத்தாக்கில் ஸ்ரீநகர் பகுதியில் முஸ்லிம்கள் அதிக எண்ணிக்கையிலும், ஜம்மு பகுதியில் இந்துக்கள் அதிக அளவிலும் வாழ்ந்து வந்தனர். இரு பிரிவினரும் பாராட்டும்படியான ஒரு முடிவை எடுக்கத்தான் தாமதம். இதற்கிடையில் பாகிஸ்தான், மலைவாசிகளின் உடையில் ஸ்ரீநகரைக் கைப்பற்ற ஒரு படையை (Raiders) அனுப்பியது. கிட்டத்தட்ட ஸ்ரீநகர் வரை வந்து விட்டார்கள், இந்த ஆக்கிரமிப்பாளர்கள். உடனே ஹரிசிங் இந்தியாவின் உதவியை நாடினார். நமது படை அனுப்பப்பட்டது. அவர்கள் பாகிஸ்தானின் படையைத் துரத்தியடித்தார்கள். இந்தச் சூழ்நிலையில் ஐ. நா. வின் உதவியை இந்தியா நாடியது.



• பேநசிர் புட்டோ: நம்பிக்கை அளிக்கிறார்.



* ஷேக் அப்துல்லா: ''காஷ்மீர் இந்தியாவுடன்தான் இருக்கும்.''



* புட்டோ: ''ஸிம்லா ஒப்பந்தம் - பிரச்னைக்குப் பேச்சு வார்த்தை.''

'''இந்தியா ஐ. நா. வின் உதவியை ஏன் நாட வேண்டும்?' என்று பலர் கேட்டார்கள். அதில் நியாயம் இருக்கிறது. அந்தச் சண்டையை இந்தியா ஆரம்பிக்கவில்லை. மேலும் இந்தியா படையைத் தானாக அனுப்பவில்லை. ஒரு மகாராஜாவின் வேண்டுகோளுக்கு இணங்கியே நமது படை சென்றது. ஐ. நா. சபை, ஆக்கிரமிப்பாளர்களை 'முற்றிலும் வெளியேற வேண்டும்' என்று சொன்னாலும், போர் நிறுத்தம் செய்து எல்லைகளைப் பிரித்த போது, பல காஷ்மீர் பகுதிகள் ஏற்கெனவே ஆக்கிரமிப்பாளர்கள் ஆளுகையில் இருந்தன. அந்த நிலையே இன்று வரை நீடிக்கிறது. பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதி ''ஆசாத் காஷ்மீர்'' என்று அழைக்கப்படுகிறது.

* ஜியா: பழைய பாக் தலைவர்கள் காஷ்மீரில் கலவரச் சூழலுக்கே உதவினார்கள்.



''காஷ்மீரின் தன்னிகரில்லாத் தலைவராக விளங்கிய ஷேக் அப்துல்லா, ''காஷ்மீர் இந்தியாவுடன்தான் இருக்கும்; இருக்க வேண்டும்'' என்பதை மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். ஆனால் காஷ்மீர் மீது பாகிஸ்தான் கொண்டுள்ள பேராசை முற்றிலும் நீங்கிவிடவில்லை. மத உணர்வுகளைத் தூண்டி விடுகிறது. ஆயுதப் பயிற்சி கொடுத்து ஆட்களை அனுப்பிக் குழப்பத்தை உண்டு பண்ணுகிறது.

''காஷ்மீரில் பாகிஸ்தான் பிடித்து வைத்துள்ள பகுதிகளை நாம் மீட்க வேண்டும் என்றால் போர்தான் நடத்த வேண்டும். மூன்று முறை போர் மூண்டும் விட்டது. 'போர்' என்பது சுலபமான விஷயம் அல்ல; என்றும் அமைதியை விரும்புகிறது இந்தியா. அதனால் 1972 – இல் சிம்லா ஒப்பந்தம் ஏற்பட்ட போது இரு நாடுகளுக்கும் ஏற்படும் பிரச்னைகளைப் பேச்சு வார்த்தை நடத்தியே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

''காஷ்மீரில் பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள பகுதிகளை விட்டு அது முற்றிலும் விலக வேண்டும் என்பதுதான் இந்தியாவின் நிலை. ஆனால் பாகிஸ்தான் சாமர்த்தியமாக நழுவி வருகிறது. பாகிஸ்தானின் பழைய ஆட்சியாளர்கள், காஷ்மீரில் கலவரச் சூழ்நிலையை உண்டு பண்ண உதவினார்கள். ஆனால் பேநசீர் அவ்வாறு இருக்க மாட்டார் என்று நம்புகிறேன். மேலும் தற்போது மிக உயர்ந்த பனிமலையில் நடக்கும் சியாசின் சண்டை, இந்தியா – பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே விரோதப் போக்கை வளர்க்கும் முக்கிய பிரச்னை. நல்ல வேளை



• கே. பி. எஸ். மேனன்: "சராசரி பாகிஸ்தானி அமைதியையே விரும்புகிறான்."

யாக இதனைத் தீர்க்கும் விதமாகப் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது.

"நான் பாகிஸ்தானில் பணிபுரிந்த போது பல நடுநிலையாளர்களைச் சந்தித்து இருக்கிறேன். ஒரு சராசரி பாகிஸ்தானி, அமைதியை விரும்புகிறவர்தான். ஆனாலும், தொடர்ந்து வந்த ராணுவ ஆட்சியாளர்கள் இந்தியாவைப் பற்றிய துவேஷ எண்ணத்தை வளர்த்து வந்திருக்கிறார்கள்.

"பல இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்து அனுப்புவதன் மூலம் இந்திய ஒருமைப்பாட்டுக்கு உலை வைத்து விடலாம் என்ற பாகிஸ்தானின் கனவு நனவாகப் போவதில்லை. பஞ்சாப் தீவிரவாதிகளுக்குப் பாகிஸ்தான் பயிற்சி கொடுத்து வருவதாக ஏற்கெனவே பல ஆதாரங்கள் இருக்கின்றன. இருந்த போதிலும், பஞ்சாப் மக்கள், விவசாயத்திலும் சரி, தொழிற் துறையிலும் சரி, இன்னும் சாதனைகள் புரிந்து கொண்டு தான் இருக்கிறார்கள். அதே போல் காஷ்மீர் மக்களும் வன்முறைச் சக்திகளுக்கு இடம் கொடுக்காமல், உறுதியாக இருந்து, பாகிஸ்தான் கைக்கூலிகளுக்குப் பாடம் கற்பிப்பார்கள் என்பது நிச்சயம்!"

கருத்துத் தொகுப்பு: **ப்ரியன்.**

மேலட்டையில் ஃபாரூக் அப்துல்லா வண்ணப்படம்: **சுபா**


கே. பி. எஸ். மேனன் படம்: **ஸ்ரீஹரி**

டெல்லி டீ.வி.யில் பாலுமகேந்திராவின் தமிழ்ப் படம்!

டைரக்டர். கே. சுப்ரமணியத்தின் தலைமையில் தமிழ் நாட்டில் கொஞ்சகாலம் செயல்பட்டது இப்டா என்ற அமைப்பு.

இந்திய மக்கள் நாடக மன்றம் என்பதன் சுருக்கம் இப்டா (**IPTA — Indian People's Theatre Association**) சுதந்திரப் போராட்ட காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. என்ன காரணத்தினாலோ காணாமல் போய் விட்ட இந்த அமைப்பைத் தேடிப் பிடித்துப் புத்துயிர் தந்திருக்கிறார் கோமல் சுவாமிநாதன்.

சமீபத்தில் இப்டா நடத்திய தேசிய ஒருமைப்பாட்டுக் கலை விழாவில் எஸ். வி. சகஸ்ரநாமத்தின் உருவப் படத்தைத் திறந்து வைத்தார் கே. பாலச்சந்தர். "அந்தக் காலத்தில் என் நாடகங்களுக்குச் சகஸ்ரநாமத்தை அழைத்துப் பார்க்கச் சொல்வேன். சிறப்பாக வந்திருக்கிறதென்று நான் நம்புகிற காட்சிகள் வரும் போது, திரை மறைவில் நின்று கொண்டு இடுக்கு வழியே சகஸ்ரநாமத்தைத்தான் பார்ப்பேன். அவர் எப்படி ரசிக்கிறார் என்பதை ஆர்வத்தோடு கவனிப்பேன். அவருடைய 'வடிவேலு வாத்யார்' போன்ற நாடகங்களெல்லாம் இப்போது எங்கே வருகின்றன?" என்று ஆதங்கப்பட்டார் கே.பி.



• இன்னொரு 'வீடு'...?

பாலுமகேந்திரா, சென்னை தொலைக்காட்சி தமது மூன்று ஸ்கிரிப்ட்டுகளை நிராகரித்து விட்டதை வருத்தத்துடன் குறிப்பிட்டார். டெல்லி தொலைக்காட்சிக்காகத் தமிழ்ப் படம் ஒன்றைத் தயாரித்திருக்கிறாராம். 'சந்தியா காலம்' என்கிற தலைப்பில் வயோதிகத்தின் பிரச்னையை மையமாகக் கொண்ட படம். வீடு படத்தில் அற்புதமாக நடித்த பொன்னப்ப பாகவதர்தான் கதாநாயகர்.

ஓவியக் கண்காட்சி ஒன்றைத் திறந்து வைத்த நடிகர் சிவகுமார், தொடக்க விழாவிலும் கலந்து கொண்டு பேசினார். சகஸ்ரநாமத்தின் நேரஞ்சானான உருவப் படம் எல்லோரையுமே உறுத்திக் கொண்டிருந்தது. சிவகுமாரின் ஓவியப் பார்வையிலிருந்தும் அது தப்பவில்லை. "சகஸ்ரநாமம் சாகும் வரையில் நல்ல திடகாத்திரமாய் இருந்தவர். அவரை இப்படி வரைந்த ஓவியரை நான் குறை சொல்ல விரும்பவில்லை. அவருக்குத் தரப்பட்ட மாதிரி படம் சரியானதாக இருந்திருக்காது. இது ஒரு பக்கம் இருக்கட்டும். நல்ல முறையில் அவரது படத்தை நானே வரைந்து இப்டாவுக்கு வழங்குகிறேன்" என்றார்.

— **பாரதி**

அஷ்டலக்ஷ்மி-5



சிறுகச் சேமித்துப் பெருக வாழ்வீர்— சிட்டி யூனியன் வங்கியில்!

உங்கள் குழந்தைச் செல்வங்களுக்கு வளமிக்க வாழ்வமைப்பீர்! பெற்றோர் அன்பிற்கு இதைவிட வேறு சான்று உண்டோ? வருங்காலத்தில் அவர்களுக்கு உயர்கல்வியும், அனைத்துத் தேவைகளையும் அளித்திட உதவுகிறது சிட்டி யூனியன் வங்கி.

உங்களுக்கெனவே பல சேமிப்புத் திட்டங்கள்:

- சேமிப்புக் கணக்கு
- மாதாந்திர சேமிப்புத் திட்டங்கள்
- ரொக்கப் பத்திரங்கள்
- வாமன விஸ்வரூப வைப்புத் தொகை
- கால வரை வைப்புத் தொகை
- வெளிநாட்டில் வாழ்வோர் சேமிப்புக் கணக்கு

நாடுவீர் எம்மை —
பெறுவீர் நன்மை!


CUB

சிட்டி யூனியன் பாங்க் லிட்.,

பதிவு அலுவலகம்: கும்பகோணம்–612 001.

CUB— உங்கள் வளர்ச்சிக்கேற்ற வங்கி.

MCS/CUB/300


நான் தயார்!.. எங்கே ராஜீவ்!
போஃபர்ஸ் விவகாரம்
ஐயோ!.. எந்தத் தீயைத் தான் அணைப்பேன்!
காஷ்மீர் முதல்வர்
பிரிவினைச் சக்திகள், பயங்கர வாதம்
தமிழக முன்னேற்ற முன்னணி
ஐயையா! குடை கெடச்சுடுச்சு!



கல்கி

1989 ஆகஸ்ட் 27
மலர் 48 இதழ் 4
சுக்ல ஆவணி 11

சுதந்திரதினச் சொற்பொழிவுகள்: வெற்றுச் சடங்குகள்!

சுதந்திர தினத்துக்கு முதல் நாள் குடியரசுத் தலைவர் பேசும் போது தேர்தலைப் பற்றியே அதிகமாகச் சொன்னதால் நாடாளுமன்றத் தேர்தல் குறித்த காலத்தில் நடக்கும் என்றும் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி ஒத்திப் போடப்படாது என்றும் நம்பிக்கை பிறந்திருக்கிறது. ஆனால் தேர்தல் எப்படி நடக்க வேண்டும், தேர்தலின் போது கட்சித் தலைவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் ஆர். வி. ஆசையோடு விவரித்திருப்பதைப் படிக்க நமக்குப் பரிதாபமாக இருக்கிறது. 'அவர் என்ன, இந்தியாவில் தான் இருக்கிறாரா?' அல்லது ஏதேனும் ஒரு லட்சிய உலகில் கற்பனைச் சஞ்சாரம் பண்ணிக் கொண்டிருக்கிறாரா?' என்று சந்தேகப்பட வைக்கிறது!

'ஜாதி மத வேறுபாடுகளைத் தேர்தல் அரங்குக்குள் கொண்டு வராதீர்கள்' என்றார் ஆர். வி.! நடக்கிற காரியமா? 'எதிராளியின் கருத்துக்கும் மதிப்பளிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்' என்றார்! 'ஓகோ! அதனால்தான் ஒரு மாநில முதல்வரான என். டி. ஆரின் பேச்சை தூர்தர்ஷன் சென்ஸார் செய்ததோ?' என்று நமக்குக் கேட்கத் தோன்றுகிறது. வெட்டுதலுக்கு உள்ளான என். டி. ஆரின் பேச்சு சரியா, தவறா என்பதல்ல பிரச்னை. குற்றமானால் அதனைச் சுட்டிக்காட்ட மத்தியில் ஆளும் கட்சிக்கு எத்தனையோ விதங்களில் வாய்ப்பிருக்கிறது. மக்கள் எது சரி, எது தவறு என்று எடை போட்டுப் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் என். டி. ஆர். பேச்சு சென்ஸார் செய்யப்பட்டதால் அப்பகுதிக்கு முக்கியத்துவம் அதிகரித்து விட்டது. சாதாரணமாக அதை அலட்சியப்படுத்தி விட்டுப் போயிருக்கக் கூடியவர்கள் கூட, 'அதில் ஏதேனும் உண்மை இருக்குமோ?' என்று யோசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்!

'உணர்ச்சி வசப்பட்டு ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ள வேண்டாம்; தேர்தல் கண்ணியமான முறையில் நடந்தேறட்டும்' என்றார் குடியரசுத் தலைவர். மறுநாளே செங்கோட்டையில் சுதந்திர தினச் சொற்பொழிவு நிகழ்த்திய பிரதமர், 'எதிர்க்கட்சியினர் தேசத்துரோகிகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றனர்' என்று கூறி, கண்ணியம் காத்தார்! 'தேசத் துரோகிகள் சுதந்திரமாக வளைய வருகிறார்களே' என்றும், 'நாடாளுமன்றத்துக்குள்ளேயே உட்கார்ந்திருக்கிறார்களே' என்றும் அங்கலாய்த்தார்! 'நீர்தானே ஐயா, பிரதமர்! எதற்காகத் தேசத் துரோகிகளைக் கம்பி எண்ண வைக்காமல் சுதந்திரமாக உலவ அனுமதிக்கிறீர்கள்?' என்று ராஜீவை யார் திருப்பிக் கேட்பது? 'மக்களுக்கு நாங்கள் அதிகாரங்களை வழங்கப் போனால் எதிர்க்கட்சியினர் குறுக்கே நிற்கிறார்கள்' என்றும், 'ஜாதிப் பித்து கொண்ட சிலர், பெண் உரிமைகளைப் பறிக்கிறார்கள்' என்றும், 'வேறு சிலர் பாட்டு — நடனம் என்று கேளிக்கைகளில் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள்' என்றும் எதிர்க்கட்சியினரைப் பற்றிப் பிரதமர் கண்ணியத்துடன் பேசியதை ஆர். விதான் மெச்சிக்கொள்ள வேண்டும்!

'தேர்தலில் பணபலம் புகுந்து விளையாட அனுமதிக்கக் கூடாது' என்றும், 'குண்டர்களின் துணையை யாரும் நாடக் கூடாது' என்றும் பாவம், ஆர். வி. நல்லெண்ணத்துடன்தான் ஆலோசனை வழங்கியிருக்கிறார். ஆனால் நடப்பது என்ன? போஃபோர்ஸ் ஊழலில் கோடி கோடியாகப் பணம் போன இடம் தெரியவில்லை என்பது ஒருபுறமிருக்க, பெரிய பெரிய தொழில் வர்த்தக நிறுவனங்கள், 'தேர்தலின் போது நாம் கசக்கிப் பிழியப்படுவோம்' என்பதை உணர்ந்து, இப்போதே அதற்காகப் பணம் ''சம்பாதிக்க''த் தொடங்கிவிட்டன. கோடிக் கணக்கில் கடன் பெறவும், கடன் தரவும் சில நிறுவனங்கள் தங்கள் பங்குதாரர்களின் அங்கீகாரத்தைக் கோரிப் பெற முற்பட்டுள்ளன! இந்தச் சூழலில், 'கறுப்புப் பணத்தை ஒழிப்போம்' என்று நமது மாநில முதல்வர், தமது சுதந்திர தினப் பேச்சின் இடையில் கூறியிருப்பது பலவீனமாக ஒலிக்கிறது.

என். டி. ஆர்., மத்திய அரசைத் தாக்க; பிரதமர் ஆந்திர முதல்வரை ஏச, சுதந்திர தினத்தன்று தலைவர்கள் பேசுவது என்பது ஒரு வெற்றுச் சடங்காகவும், வேடிக்கைக் கூத்தாகவும் ஆகிவிட்டது. மக்களுக்கு நம்பிக்கை அளிக்கவோ, அவர்களைக் கடமையில் ஊக்குவிக்கவோ அவற்றில் ஒன்றுமே இல்லை. ஒரே ஓர் ஆறுதல்:

அது, விற்பனைக்காகக் கூண்டில் அடைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான பறவைகளை விலைக்கு வாங்கிய சில பொது நலத் தொண்டர்கள், சுதந்திர தினத்தன்று மேனகா காந்தி தலைமையில் அவற்றை விடுவிக்க, அவை ஆனந்தமாகச் சிறகடித்து வானில் பறந்ததுதான்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

யூரேகா ஃபோர்ப்ஸ் நிறுவனத்திலிருந்து வரும் நண்பர், உங்கள் வீட்டிலுள்ள தூசையும் அழுக்கையும் மிக எளிதாக அகற்றும் வழியை செய்து காட்டப் போகிறார்.

வரும் நாட்கள் ஏதேனும் ஒன்றில் யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டி, அடையாளச் சீட்டுடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வார்

அவர் பேச்சில் தன்னம்பிக்கை தொனிக்கும்—இதில் வியப்பேதும் இல்லை. ஏனெனில், இவர் இந்தியாவிலேயே இது போன்ற நிறுவனங்களில் மிகப் பெரியதும் வெற்றிவாகை சூடியதுமாகிய விற்பனை நிறுவனத்தின் அங்கத்தினர் ஆவார். இந்நிறுவனம் விற்பனைக்குப்பின் நம்பகமான சேவை புரியும் பின்னணி கொண்டது.

தூசு, சூழ்நிலை அசுத்தம், அசுத்தமான நீர் மற்றும் வீட்டு வேலைகளில் உதவியின்மை போன்ற இன்றைய பிரச்சினைகளை சமாளிப்பதற்கென நவீன வீட்டுபயோக சாதனங்களை அவர் உங்களுக்கு அறிமுகப்படுத்துவார்.



செயல்முறை விளக்கத்திற்கு இவரிடம் இரண்டு இணையற்ற தயாரிப்புகள் உள்ளன. யூரோக்ளீன்: அனைத்துபயோக சுத்தம் செய்யும் சாதனம். இது வேக்வம் கிளீனரை விடச் சிறந்தது. மற்றும் அக்வாகார்ட்: நீர் பைப்பில் பொருத்தக்கூடிய வாட்டர் ஃபில்டர் கம்-ப்யூரிஃபையர்.

யூரோக்ளீன்: உங்கள் வீட்டில் உள்ள தூசு மற்றும் சிறு துரும்புகளையும்கூட சிரமமின்றி எளிதில் அகற்றுகிறது. கண்ணிற்கு புலப்படாத தூசுகள்கூட அகன்றுவிடும்.

அக்வாகார்ட்: ஒரு ஸ்விட்சை இயக்கி, குழாயைத் திறந்தால் கிருமிகள் அற்ற, பாதுகாப்பான சுத்தமான குடிநீரை உங்கள் குழாயிலேயே நீங்கள் பெறலாம்.

உங்கள் குடும்பத்திற்கு சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கான நவீன முறைகளை இத்தயாரிப்புகள் எவ்விதம் வழங்குகின்றன என்பதை யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டிலேயே உபயோகித்து விளக்குவார். அதன் மூலம் உங்களைச் சுற்றிலும் சுத்தமும், சுகாதாரமும் நிறைந்த உலகம் உருவாகும்.

அவர் உங்கள் வீட்டிற்கு வரும் நாள்வரை நீங்கள் காத்திருக்க வேண்டாம். விரைவில் வருகை புரிய கீழ்க்காணும் யூரேகா ஃபோர்ப்ஸ் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றில் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது இம்முகவரிக்கு எழுதுங்கள்: யூரேகா ஃபோர்ப்ஸ் லிமிடெட், பி.ஓ. பாக்ஸ் 936, ஜி.பி.ஓ. பம்பாய்-400 001.


யூரோக்ளீன் அக்வாகார்ட்
யூரேகா ஃபோர்ப்ஸ் லிமிடெட்
everest/89/EFL/188 R1 tm



அடுத்த நூற்றாண்டு...

4


காகிதச் செலவைக் குறைக்கும் கம்ப்யூட்டர்

சென்ற வார இறுதிக் கேள்விக்கு விடை.........................: 'ஈ மெய்ல்' என்பது: கம்ப்யூட்டர் மூலம் கடிதங்கள், குறிப்புக்கள், இவற்றை அனுப்புவது:


இது புதுசாக, அலுவலகங்களில் காகிதத்தின் ஆக்கிரமிப்பைக் குறைக்க, வந்திருக்கும் யுக்தி. ஓர் அலுவலகத்தில் ஒருவர் மற்றொருவருக்கு எழுதிக் கொள்ளும் கடிதங்கள் அனேகம். நான் பணிபுரியும் பாரத் எலக்ட்ரானிக்ஸ் அலுவலகத்தில் என் மேசையிலிருந்து அம்பது அடி தள்ளியிருக்கும் அக்கவுண்ட்ஸ் அல்லது பர்ஸனல் அலுவலகங்களுக்கு என்னால் உள் தொடர்பு டெலிபோன் மூலம் பேச முடியும். இருப்பினும் சில காரியங்களுக்காக அந்த அலுவலகங்களுக்கு நான் கடிதங்கள் எழுத வேண்டி வருகிறது. குறிப்பாகப் பண சம்பந்தமான எதுவும் எழுத்தில் ஸாங்ஷன் இல்லாமல் யாரும் சம்மதிக்க மாட்டார்கள். இதனால் ஓர் ஆபீஸில் உள்ளுக்குள்ளேயே ஏகப்பட்ட கடிதப் பரிமாறல்கள்; இதற்கு ஃபாக்டரிக்குள்ளேயே தபால் வண்டி கூட இருக்கிறது. அது போதாதென்று எங்கள் தலைமையகத்துக்கும் எங்களுக்கும், டில்லி, பம்பாய் போன்ற இடங்களில் இருக்கும் எங்கள் மற்ற தொழிற்சாலைகளுக்கும் எங்களுக்கும், என்று ஒட்டுமொத்தமான தபால் சாம்ராஜ்யமே இருக்கிறது. இதற்காக வருஷத்திற்குக் கோடிக்கணக்கில காகிதத்துக்கே செலவழிக்கிறோம்! பச்சைக் காகிதம், வெள்ளைக் காகிதம், கோப்புக் காகிதம், அட்டைகள், பேனாக்கள், க்ளிப்புகள் என்று ஸ்டேஷனரி அயிட்டங்கள்...

இவை அத்தனையையும் ஒரே வீச்சில் 'ஈமெய்ல் மூலம்' ஒழித்துக் கட்டி விட முடியும்! ''பேப்பர்லஸ் ஆஃபீஸ்'' — காகிதமற்ற அலுவலகம் கொண்டு வர முடியும். இதற்காக ஓர் அலுவலகத்தில் உள்ள குட்டி குட்டி கம்ப்யூட்டர்களை, பீ.ஸி. என்று சொல்வார்கள். அவற்றை ஒன்றுக்கொன்று இணைக்க வேண்டும். அதை நெட்வர்க்கிங் என்பர். இணைக்கும் விதத்தை 'லோக்கல் ஏரியா நெட்வொர்க்' (local area network) என்பார்கள். 'லான்' (LAN) என்று இப்போது நம்மிடையே மெல்ல மெல்ல பிரசித்தமாகி வருகிறது. கல்லூரிகளிலும் அலுவலகங்களிலும் தனித் தனியாகக் கட்டடங்களில் இருக்கும் கம்ப்யூட்டர்களை ஒன்றுக்கொன்று கேபிள் மூலம் இணைக்கிறார்கள். இதற்காக, நாம் முன் சொன்ன, ஆப்டிகல் ஃபைபர் (Optical Fibre) நூல்களையும் ஒரு சிலர் பயன்படுத்தத் துவங்கியிருக்கிறார்கள்.

தபால் பெட்டி போல உங்கள் சொந்தக் கம்ப்யூட்டரிலோ அல்லது அலுவலக கம்ப்யூட்டரிலோ அதன் ஞாபகத்தில் ஒரு பகுதி,




''என்யா போன் சரியா இல்லைன்னா இப்படியா சமாளிக்கிறது?''



ஓர் அறை — ஒதுக்கப்பட்டிருக்கும். உங்களுக்கு ஓர் அட்ரஸ் — முகவரி உண்டு. அந்த அட்ரஸுக்கு வளாகத்தில் எங்கிருந்தாலும் மெஸேஜ் அவரவர் கம்ப்யூட்டர் மூலம் அனுப்பலாம். நீங்கள் சீட்டிலிருந்தாலும் இல்லா விட்டாலும் சரி, திரும்ப வந்த உடன் உங்கள் கம்ப்யூட்டரே ஓர் ஓரத்தில் ஞாபகப்படுத்தும், உங்கள் மெய்லில் 'கடிதம்' இருப்பதாக. அதை வாசித்து உங்களுக்குச் சம்பள உயர்வோ வார்னிங் நோட்டீஸோ என்னவென்று தெரிந்து கொள்ளலாம். இது மட்டும் அல்ல, பழைய 'கடிதங்'களைப் பத்திரப்படுத்துவதும், கேட்ட போது கொடுப்பதும் எல்லா காரியங்களையும் இந்த ஈமெய்ல் அமைப்பு செய்கிறது. காகிதமே வேண்டாம்.

காகிதம் என்பது அடுத்த நூற்றாண்டை நெருங்க நெருங்க அரிதாகிக் கொண்டே வரப் போகிறது. இப்போதே பாருங்கள் பத்திரிகைக்காரர்கள் புதுசாகத் தொடர்கதை ஆரம்பிப்பதற்கு முன் ந்யூஸ் பிரிண்ட் காகித விலையேற்றத்தினால் என்று ஆரம்பித்துக் கெஞ்சுவது வருடாந்திர சகஜமாகி விட்டது. காகிதம் என்பது நம் காடுகளை அழித்துச் செய்ய வேண்டிய காரியம். ஸின்த்தெட்டிக் காகிதம் செய்வதால் பிரச்னை தீராது. காடுகளை அழிப்பதால் நம் சூழ்நிலையைப் பொறுப்பற்று மாற்றிக் கொண்டிருக்கிறோம். இதனால் நம் காற்றில் கார்பண்டையாக்ஸைடு அளவு அதிகரித்து என்ன என்னவோ சாவெல்லாம் வரப் போகிறது என்று விஞ்ஞானிகள் எச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதெல்லாம் நமக்கல்ல, அடுத்த தலைமுறைகளுக்குத்தானே என்று பொறுப்பில்லாமல் சும்மா இருக்கலாமா? அதனால் முதல் தேவை காகிதத்தின் தேவையைக் குறைப்பது. செய்தித் தேவை அதிகரித்துக் கொண்டிருக்க, காகிதத் தேவையைக் குறைப்பதற்கு வரப்பிரசாதமாகக் கம்ப்யூட்டர் வந்திருக்கிறது.

ஈ மெய்ல் என்பதெல்லாம் ஒரு வளாகத்துக்குள்தான். ஆனால் வளாகத்துக்கு வெளியே செய்தித் தொடர்பு வேண்டுமென்றால் அரசாங்க டெலிகாம் டிபார்ட்மெண்டுக்காரர்களைத்தான் அணுக வேண்டும். கம்ப்யூட்டர் செய்திகளைச் சாதாரண ஃபோன் கம்பிகளின் மூலம் அனுப்ப முடியும் என்று சொன்னோம். எல்லாம் டிஜிட்டல் சாகசம் என்றும் சொன்னோம். டெலிபோன் கம்பிகள் மூலம் இவ்வாறு செய்தி அனுப்புவதில் சில சிரமங்கள் இருக்கின்றன. முதன் முதலில் டெலிஃபோன் இணைப்பு கிடைக்க வேண்டும்!



சுஜாதா

வெய்ட்டிங் லிஸ்டே ஒண்ணரைக் கோடி இருக்கிறதே! இந்த வெய்ட்டிங் லிஸ்ட்டின் எண்ணிக்கை பற்றி அரசாங்கத் தகவல்கள் குழப்பமாக இருக்கின்றன. வெய்ட்டிங் லிஸ்ட் என்று ஒன்று சொல்கிறார்கள். 'ரிஜிஸ்டர்ட் டிமாண்ட்' என்று ஒரு நாலே முக்கால் கோடி சொல்கிறார்கள்! ஆதாரம் டி.ஓ.டி. (DOT)யின் வருஷாந்தர அறிக்கை 1986—87. தொல்காப்பியம் இரண்டாம் நூற்றாண்டாக இருந்தால் என்ன மூன்றாம் நூற்றாண்டாக இருந்தால் என்ன? தொல்காப்பியம் பழசு! அதுபோல் வெய்ட்டிங் லிஸ்ட் நாலு கோடியோ ஒரு கோடியோ, எப்படியிருந்தாலும் கேட்டால் உடனே டெலிபோன் கிடைக்கப் போவதில்லை என்பதுதான் சத்தியம்.

இத்தனை தேவை இருந்தும் மக்கள் ஒரு 'ஓ.ஒய்.டி.' டெலிபோனுக்கு எட்டாயிரம் ரூபாய் கொடுக்கத் தயாராக இருக்கும் போது டெலிபோன் காரர்களுக்கு என்ன கஷ்டம்? பணம்தான்! உங்களுக்கு எட்டாயிரம் ரூபாய் தொடர்பு கொடுக்க அரசு சுமார் நாற்பதாயிரத்திலிருந்து ஐம்பதாயிரம் வரை செலவழிக்க வேண்டியிருக்கிறது! கேபிள் தொடர்பு, அதை அடைக்கக் குழாய்கள், நகரங்களில் இந்தக் குழாய்களில் ஈரம் புகாமல் ஜெல்லியெல்லாம் நிரப்ப வேண்டும். அந்த மாதிரி சமாசாரங்களுக்காக அரை லட்சம் ஆகி விடுகிறது!

இந்தப் பணம் எங்கிருந்து வர வேண்டும்? அரசாங்க பட்ஜெட்டிலிருந்துதான். பட்ஜெட் இதுவரை இந்த டிபார்ட்மெண்டை அலட்சியப்படுத்தி வந்ததால் இந்த மாதிரி அபத்தமான வெய்டிங் லிஸ்ட்டும் வருஷக் கணக்கான காத்திருத்தல்களும்!

இதை அடுத்த நூற்றாண்டின் விளிம்பில் நிவாரணம் செய்ய எட்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் பதினைந்தாயிரம் கோடி ரூபாயும் ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் முப்பத்து நாலாயிரம் கோடி ரூபாயும் தேவைப்படுகிறது! அரசாங்கத்திடம் அத்தனை பணம் இல்லை. இதனால்தான் பொது மக்களிடம் கடன் வாங்கி எப்படியாவது நிதி எழுப்ப அவர்களால் முடிந்தால்தான் அடுத்த நூற்றாண்டின் டெலிபோன் கனவுகள் பலிக்கும்.

அக் கனவுகளைச் சென்ற வாரம் கோடி காட்டினோம். இந்த வாரம் கொஞ்சம் உன்னிப்பாகப் பார்க்கலாம்.

1. ஆயிரம் பேருக்கு இருபது டெலிபோன்.

2. ஆயிரம் பேருக்கு நாலு பப்ளிக் டெலிபோன்கள் (நகரத்தில்)

3. ஆறு லட்சம் கிராம டெலிபோன்கள்.

4. உலகத்தில் எந்த நாட்டுக்கும் எஸ்.டி.டி.

5. எட்டு லட்சம் பிஸினஸ் டெர்மினல்கள் — கம்ப்யூட்டர் சமாசாரங்களை இணைப்பதற்கு.

6. ஒரு டெலிபோனுக்கு ஒரு வருஷத்துக்கு ஒரு பழுது மட்டும்தான் அனுமதி.

7. லோக்கல் கால் 100 முயற்சிகளுக்கு 99 முறை வெற்றி. (ட்ரங்க் கால்களுக்குத் தொண்ணூறு).

8. கொடுத்த தந்தி பன்னிரண்டு மணி நேரத்தில் உலகில் எங்கும் போய்ச் சேர வேண்டும்.

நம் டெலிகாம் நண்பர்களுக்கு பெஸ்ட் ஆஃப் லக் சொல்லி, அடுத்த முறை அவர்கள் கடன் கேட்கும் போது கொடுக்கலாம்.

அடுத்த நூற்றாண்டில் இதெல்லாம் சாத்தியமாக, நிறைய எதிர்பார்ப்பு உள்ளது. அதைப் பிடித்துக் கொண்டு மேலே கொஞ்சம் சாத்தியங்களை நோக்கலாம்.

நூற்றாண்டின் ஆரம்பத்தில் நம் நாடெங்கும் பரவிய டிஜிட்டல் டெலிபோன் இணைப்புக்களில் கம்ப்யூட்டர் செய்திகளை அனுப்ப முடியும் என எதிர்பார்க்கலாம்.

கம்ப்யூட்டர்களில் அடுத்த நூற்றாண்டில் என்ன என்ன அதிசயங்கள் நிகழப் போகின்றன? அவற்றுள் எவ்வெவை நம் நாட்டுக்கு வர சாத்தியக்கூறுகள் அதிகம்? என்பதை உங்களுக்குச் சொல்லு முன், கம்ப்யூட்டரின் இந்திய சரித்திரத்தைப் பற்றிச் சுருக்க நோக்கம்! அதற்கு முன் வழக்கம் போல் கேள்வி: இந்தியாவுக்கு முதன் முதல் கம்ப்யூட்டர் வந்தது எப்போ?

1948
1955
1960
1970?

சரியான விடைக்குக் குலுக்கலில் பரிசு உண்டு. முடிவு தேதி: 28.8.89

(தொடரும்)

டெலிஃபோனில் லேட்டஸ்ட்:

கல்கி 6.8.89 இதழில் சுஜாதா கேட்டிருந்த கேள்விக்குச் சரியான விடை: **I.S.D.N.**

இரண்டு மூன்று கார்டுகளில் இரண்டு மூன்று விடைகளை எழுதி அனுப்பிய நபர்கள் சிலர். இந்தக் கார்டுகள் நீக்கப் பட்டன. பின்னர் பார்த்த போது சரியான விடையை 177 பேர் எழுதியிருந்தனர்.


குலுக்கல் முறையில் சுஜாதாவின் புத்தகத்தை இரு மாதங்கள் காத்திருந்து பெறப் போகிறவர்:

வி. மீனாட்சி,
C—4/8, Housing Unit,
அறந்தாங்கி.

புத்தகம் அச்சில் இருக்கிறது. தயாரானதும் முதல் பிரதி மீனாட்சிக்கு அனுப்பி வைக்கப்படும்.

— ஆசிரியர்.

அவளுக்கு எல்லாம் தெரியும்..!




மலர் என்பார்,
மதி என்பார்,
மயில் என்பார்.
எப்படி
அழைப்பினும்
கண்ணே,
ஈடில்லை எதுவும்
உனக்கு !
யங்
ஸென்ஸேஷன்ஸ்
ஸாரிகள் மற்றும் டிரெஸ் மெட்டீரியல்ஸ்
ம:.பத்லால்
—நம்பிக்கைக்குப் பெயர் பெற்றது
ம:.பத்லால்
:.பேப்ரிக்ஸ்
ம:.பத்லால் இண்டஸ்ட்ரீஸ் லிட். (நியூ ஷொர்ராக் மில்ஸ்) மற்றும் ம:.பத்லால் :.பைன் ஸ்பின்னிங் & மேன்யு:.பேக்சரிங் கம். லிமிடெடின் ரெஜிஸ்டெர்டு ட்ரேட் மார்க்.
Location Courtesy: The Taj Mahal Hotel, Bombay.
MF 635 D TAM

‘கேடு’

ஏழரை மணிக்கு ஜி. எச். சுக்குள் நுழைந்து விட்டேன். என் இடது கையில் வெள்ளைக் கோட்டு. வலது கையில் ஸ்டெத். என் மாதிரியே என் கிளாஸ்மேட்ஸ் பலர் வந்திருந்தனர்.

நான் உள்ளே வரும் நேரத்துக்கு முன்பாகவே சில நோயாளிகள் மற்றும் நோயாளிகளின் உடனிருந்தவர்கள் பல் துலக்கி முடித்திருந்தனர். எட்டூருக்கு 'வாசம்' காட்டும் பாத்ரூம், லெட்ரீனைக் கண்டு கொள்ளாமல் உபயோகித்தனர். ஒரு பெண் 'இட்லீ... இட்லீ...' எனக் கூவிக் கொண்டு சென்றாள். இரவு டியூட்டி நர்ஸ்கள் சென்று, பகல் டியூட்டி நர்ஸ்கள் வந்திருந்தனர். மதுரை மெடிக்கல் காலேஜ் ஹாஸ்பிடல் அந்த அதிகாலையிலேயே களை கட்டியிருந்தது.

ஒவ்வொரு வார்டாகப் பார்த்துக் கொண்டே வந்தேன்.

ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு விதமான கஷ்டம். இவர்களில் தினம்தினம் என் கண் முன்னாலேயே சிலர் சாகும் போது எனக்கு நெஞ்சைப் பிழியும். இவர்களெல்லாம் பாவம்செய்தவர்களா? அல்லது கஷ்டம் என்றால் என்னவென்று தெரிந்து கொள் எனக் கடவுளால் பணிக்கப்பட்டவர்களா?

மெதுவாக நடந்து சென்று அந்த வார்டை அடைந்தேன். அந்த அம்மாள் படுத்திருந்தாள். பேர் என்ன சொன்னாள்? ம்... மகமாயி!

நெஞ்சுக் கூடு மூச்சுக்காகப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தது. உடல் நலிந்திருந்தது.

என்னதான் உடல் சிரமமிருந்தாலும் அந்த அதிகாலையிலேயே (தானாகவே) எழுந்து சென்று பல்துலக்கி, காலைக் கடன்களை முடித்திருந்தாள் என்பது தெரிந்தது.

நான் மகமாயி பக்கம் வந்த போது என் கிளாஸ்மேட்ஸ் வேறு சிலரும் அவளருகே வந்தனர். மகமாயியை — இல்லை — அவளுக்கு வந்திருக்கும் நோயைப் பார்ப்பதற்கு! நாங்கள் ஃபர்ஸ்ட் கிளினிகல் மாணவர்கள். தினமும் காலையில் ஜி. எச். சுக்குள் வந்து நோயாளிகளைச் சந்திக்க வேண்டும் — குணப்படுத்த அல்ல, தெரிந்து கொள்ள!

எங்களின் வருகையைக் கண்டு மகமாயி பயந்தாள். அவள் பயப்படுவதற்கான காரணம் எனக்குப் புரிந்தது.

நாங்கள் பதினோரு பேர் சுற்றி நிற்க, ஒருவன் மட்டும் பாக்கெட் சைஸ் நோட்டையும், பேனாவையும் எடுத்துக் கொண்டு அவளைக் கேள்வி கேட்க ஆரம்பித்தான்.

''உன் பேர் என்ன?''

''மகமாயிங்க'' என்றாள் அவள்.

''வயசு?''

''நாப்பது.''

''எந்த ஊர்?''

''தெக்குப் பட்டிங்க.''

''தெற்குப்பட்டியா? எந்த ஊருக்குப் பக்கத்தில இருக்கு?''



கன்சவாணி

''இருக்கங்குடி மாரியம்மா கோயிலுக்குப் பக்கத்திலேங்க.''

''உடம்புக்கு இப்ப என்ன செய்யிது?''

''வவுத்து வலிங்க.''

''எவ்வளவு நாளா வலிக்குது?''

''ஆறு மாசமாங்க.''

''தொடர்ந்து வலிக்குதா? அல்லது விட்டு விட்டு வலிக்குதா?''

''நாள் முழுக்கத் தொடர்ந்தாப்பல வலிக்குது!...''

கேள்வி கேட்டுக் கொண்டிருந்தவன் கேள்வியை நிறுத்திவிட்டுத் திடீரென,

''டேய் வாத்து வருதுடா'' என்றான்.

மற்றவர்கள் திரும்பிப் பார்க்க, ஒரு பயிற்சி நர்ஸ் மூன்று வாழைப்பழங்களையும், ஒரு காய்ந்த ரொட்டியையும் கொண்டு வந்து. இவர்களைக் கண்டு தயங்கியபடியே மகமாயியிடம் கொடுத்தாள்.

''ஆறிப் போன பால் கொடுத்தாச்சா?'' ஒருவன் கேட்க, அந்த பயிற்சி நர்ஸ் மீண்டும் தயக்கத்துடன் தலையாட்டி விட்டுத் திரும்பி நடக்க ஆரம்பித்தாள்.

''அவ காலைப் பாருடா'' என்றவன் மீண்டும் மகமாயி பக்கம் திரும்பி, ''எங்கே வலிக்குது?'' என்றான்.

மகமாயி இடது மார்புக் கூட்டுக்குக் கீழே காண்பித்தாள்.

கேட்டவன், வலது கையால் மெல்ல அழுத்திப் பார்த்து 'வலிக்குதா?' என்று கேட்டுக் கொண்டே தன் சகாக்களிடம்,

''டேய் கட்டி இங்கே இருக்குடா'' என்றான்.

என்ன கட்டி என்று எனக்குத் தெரியும். 'Ca Stomach' எனப்படும் வயிற்றுப் புற்று நோய்.

கட்டியைத் தொட்டுப் பார்க்கும் ஆவலில் ஆளாளுக்கு 'வலிக்குதா, வலிக்குதா?' எனக் கேட்டவாறு தொட்டு அழுக்கிப் பார்க்க ஆரம்பித்தனர்.

மகமாயி நெளிய ஆரம்பித்தாள். என்ன வேதனையோ?

''ஐயோ வலிக்குதுங்க சாமி'' என்றாள்.

உடனே ஒரு மாணவனுக்கு ஆத்திரம்

நியாயத்

அவள் ஒரு கொலைகாரி. நியாயத்துக்காகப் போராடி, அக்கிரமக்காரனின் உயிர் குடித்த கொலைகாரி. கண்ணைக் கட்டிக் கொண்டிருக்கும் நீதி தேவதை விட்டு வைக்குமா? ஆயுள் தண்டனை பெற்றவள், சாகக் கிடக்கும் தாயைத் தரிசிக்கும் சாக்கில் பதினைந்து நாள் பரோலில் வெளிவருகிறாள். அந்த இடைவேளையில் அவளுக்கு ஏற்படும் சோதனைகள்தான் நியாயத் தராசு.

ராதா, ஜிவ்வென்று எழுந்து ஒரு ராக்கெட் பிரமிப்புக் காட்டியிருக்கிறார். ஜெயிலுக்குப் போய் வந்தவளுக்கு ஊருக்குள் உறவுக்குள் இப்படியொரு 'மரியாதை' இருக்கக்கூடும் என்று ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்பாராமல் சந்தித்து அவர் விதவிதமாய் அதிர்ச்சி காட்டும் வேதனையாகட்டும்; தன்னிடம் ஆழ்ந்த அனுதாபமும் அக்கறையும் காட்டும் அந்த ரவியே கல்யாணக் கட்டத்தில் தன்னைக் கைவிட்டு விட்டதாய் நம்பி முகத்தில் தேக்கும் அந்த ஏமாற்ற விரக்தியாகட்டும்; அது வெறும் பாவனைதான், உண்மையில் அவர் தன்னைக் கைவிடவில்லை என்று அறிந்ததும் பரவசப்பட்டு நன்றி கூறும் நெகிழ்ச்சியாகட்டும்; அனைத்துக்கும் மேல் பெண்மையைச் சூறையாடும் வெறியரிடம் வெறிகாட்டி வெடி எழுப்பும் ஆவேசமாகட்டும்; அடேயப்பா, எத்தனை பண்பட்ட நடிப்பு! முத்திரை பதித்து விட்டார் ராதா.

கதாநாயக ரவிக்குச் சொதப்பலில்லாத கண்ணியமான பாத்திரம்தான். ஆனால் கூட்டணி நாஸராக வாய்த்து விட்டதால் — என்ன சார் பண்ணுவது — அவருடைய பரிவும், பாசமும் மெய்யா, பொய்யா என்ற தடுமாற்றத்திலேயே பாதிக்கு மேல் ஓடிப் போய் விடுகிறது. ராதா தற்கொலை செய்து கொள்ளப் போக, தற்செயலாக அவரைச் சந்தித்து, 'பாரதி, எனக்கு எல்லாமே நீதான். என்னை விட்டுப் போயிடாதே!' என்று கண் கலங்குவது உருக்கம் என்றால், ராதாவை உதாசீனப்படுத்தியவர்களின் மத்தியில் நின்று எந்தெந்த விதத்தில் ராதா அவர்களுக்காகத் தியாகம் செய்தார் என்பதை உணர்ச்சி பூர்வமாய்ச் சுட்டிக் காட்டிப் பேசுவது நெகிழ்ச்சி. இது ஹீரோயின் சப்ஜெக்ட் என்பதால் ரவி பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். பாவம் என்ற அனுதாபம் பெறுகிறார்.

நெற்றியில் விபூதியும் குதர்க்க வாதமுமாய் இவர் எந்த ரகம் என்று புரியாத விசித்திர காரெக்டரில் நாஸர். ரவிக்கு வேறு பெண் பேசுவது போல் காட்டி, அதைக் கதாநாயகியுடன் பார்வையாளரையும் நம்ப வைத்து, பிறகு பெண் பேசியது நாஸருக்குத்தான் என்று முடித்தது ஒரு மகிழ்ச்சித் திருப்பம் தர உதவும் என்பதற்காக இருக்கலாமோ? இருந்தாலும் கொஞ்சம் நாசூக்கான பொருத்தம் வேண்டாமா?

ஓரளவு யதார்த்தத்தை எட்டும் இந்தப் படத்தில் சார்லி நடுரோடில் டிஸ்கோ க்ரூப் டான்ஸில் இறங்குகிறாரே அது கவர்ச்சிக்கு என்றாலும் அதிர்ச்சி.

தோழி குட்டி பத்மினி அவர் கணவன் லிவிங்ஸ்டன் உறவு கொச்சையான கொஞ்சம் பச்சையான குரூரம். முடிவில் ஒரு திருப்

வந்தது. "சும்மா பேசாம இரும்மா. ஓசி ஆஸ்பத்திரிக்கு வந்தா எல்லாருந்தான் பார்ப்போம். இல்லைன்னா வேறே எங்கேயாவது போய்ப் பார்க்கிறதுதானே?" என்றான். பின் மகமாயி வார்த்தையை வெளியே விடாமல் வலியை முனகலில் வெளிப்படுத்தினாள்.

நான் அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். நானும் 'கட்டி'யைத் தொட்டுப் பார்க்க வேண்டும். இவள் ஏற்கெனவே வலியால் துடித்துக் கொண்டிருக்கிறாள்!

மகமாயியைக் கடிந்து பேசியவன் சிறிது தூரத்தில் நின்ற (அழகுள்ள) பெண் சகாவிடம்.

"சுமதி, நீ கேஸ் பார்க்கலையா? 'ஸி. ஏ. ஸ்டமக்' இந்த ஒரு கேஸ்தான் இருக்குன்னு சீஃப் எல்லோரையும் பார்க்கச் சொன்னார்" என்றான்.

சுமதியும் தன் பங்குக்கு இம்சை செய்ய, நான், "மெதுவா வலிக்காம தொட்டுப் பாரு சுமதி" என்றேன்.

சுமதி என்ன நினைத்தாளோ தெரியவில்லை. உடனே விலகிவிட்டாள்.

அனைவரும் மகமாயியை விட்டு விலகி, கூட்டம், கூட்டமாய் நின்று கொண்டு கமல் குள்ளமாய் நடித்ததையும், கிளாஸ்மேட் ரவிச்சந்திரனின் காதலியைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தனர்.

இறுதியாக நான் மட்டும் தனியே மகமாயி அருகில் சென்றேன். பயந்தாள்.

"பயப்படாதீங்கம்மா, ஒண்ணும் செய்ய மாட்டேன். உங்க கூட யாரும் வரலையா?" என்று கேட்டேன்.

"இல்லீங்க சாமி. நான் மட்டும் தனியாத்தான் வந்தேன்" என்றாள். இப்போது மகமாயி கண்களில் 'பயம்' குறைந்திருந்தது. மகமாயியைப் பார்த்தபோது கேன்ஸர் வந்து இறந்துபோன என் அம்மாவின் ஞாபகம் எனக்குள் எழுந்தது.

"ஏம்மா, உங்க வீட்டுக்காரர் எங்கே? கூட வரலியா?" நான் கேட்கவும், அது வரை அடக்கி வைத்திருந்த துக்கத்தைப் பிரவாகமாகக் கொட்ட ஆரம்பித்தாள்.

"எனக்கு ஏது சாமி புருஷன்? என்னை

தராசு

பம் தருவதற்கு உதவுவதற்காகவே தொங்க விடப்பட்ட பாத்திரங்கள். அதற்காகப் பொறுத்துக் கொள்க.

அற்புதமான காமெரா. ஒளி விளையாட்டில் ஏதோ ஒரு புதுமையான கற்பனை. மயக்கம் தருகிறது.

சண்டைக் காட்சிகளில் இத்தனை யதார்த்தமா? ஸ்டண்ட் ரசிகர்களுக்கு ஏமாற்றமாய்க் கூட இருக்கலாம்.

திரைக்கதை வசனம் கலைஞரா? அந்த முன்னுரை இல்லாதிருந்தால் யாரும் நம்பியிருக்க மாட்டார்கள். அவர் குறிப்பிடுகிறார்...! எழுத்துத் துறையில் எனக்கு இது ஒரு புதுத் திருப்பம். எனக்குப் பிடித்த படம்! கலைஞர் சொன்னது சரிதான் என்று தோன்றுகிறது.

— பி. எஸ். எஸ்.



விட்டுட்டு எப்பவோ செத்துப் போயிட்டாரு. சும்மா போகாம மனுஷன் ஒரு பொம்பளைப் புள்ளைய வேற கொடுத்திட்டுப் போயிட்டாருங்க. பதினாறு வயசாவுது. இஸ்கோலுக்குப் போவுதுங்க. எங்க பரம்பரையிலேயே அதுதான் படிக்கிதுங்க. நல்லா படிக்கும் சாமி.

"ஏதோ நான் அங்க, இங்க காட்டு வேலையும், வீட்டு வேலையும் செஞ்சு அரை வயித்துக் கஞ்சியைக் குடிச்சுப் படிக்க வைக்கிறேங்க. எனக்குச் சாவு வர்றதுக்குள்ள, அதுக்கு ஒரு கண்ணாலத்தைப் பண்ணிப் பேரனைப் பார்த்துட்டுத்தான் சாவணும் சாமி!

"இவளுக்கு ஒரு குடிகாரத் தாய்மாமன் இருக்கான் — அதான் எந்தம்பி சாமி! இவளை ரெண்டாந்தாரமாக் கட்டணும்னு ஒத்தக்கால்ல நிக்கிறான். வேறொருத்தனுக்குப் பொண்ணைப் பேச, அவங்க அஞ்சாயிரம் கேட்கிறாங்க. நான் இது வரைக்கும் என்னால முடிஞ்ச பணம் ரெண்டாயிரம் சேர்த்து வச்சிருக்கேன். அஞ்சாயிரத்துக்கு நான் எங்கே போவேன் சாமி?

"அதுக்குள்ள இந்த வவுத்துவலி வேற மனுஷியைக் கொல்லுது. வேலையும் சரியாப் பார்க்க முடியலே. இன்னிக்கி வர்றேன்னு எம் பொண்ணு கடுதாசி போட்டிருக்கு சாமி. ஏன் சாமி. எனக்கு ஏதோ பெரியநோயின்னுபேசிக்கிறாங்க.பொழைச்சுக்கிடுவேனா சாமி? நான் செத்துட்டா எம்புள்ளை அனாதையாயிரும் சாமி. எந்தம்பி எம்மகளை அழிச்சிருவான் சாமி..." மெல்ல அழ ஆரம்பித்தாள். கேட்கக் கேட்க எனக்குள் என்னவோ செய்தது. நெஞ்சு கனத்தது.

சிறிது நேரத்தில் 'சீஃப்' வந்தார். எல்லோரும் மகமாயி கட்டிலைச் சுற்றி நின்று கொண்டோம்.

சீஃப் மகமாயியைச் சோதித்துப் பார்த்துவிட்டு, கொடுக்கப்பட்டிருந்த ரிப்போர்ட்களைப் படித்துவிட்டு, எடுக்கப்பட்ட டெஸ்ட்களைப் பார்த்துவிட்டு,

'ஸி. ஏ. ஸ்டமக்' என்பது பற்றியும், மகமாயிக்கு வந்திருக்கும் கேன்ஸர் பற்றியும், அவளுடைய முற்றிய நோய் நிலைமை பற்றியும் கூறிவிட்டு, இறுதியாக ஆனால் உறுதியாக, "ஷி வில் டை நெக்ஸ்ட் வீக்" என்றார்.

மற்றவர்களுக்கு எப்படியோ, எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. எல்லோரும் அவளை ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டுக் கலைந்தார்கள்.

நடந்து சென்ற சீஃபை மெதுவாக அணுகி நான், "பிழைக்க வைக்க முடியாதா சார்?" என்று கேட்டேன். என்னைப்பற்றி அவருக்கு நன்றாகத் தெரியும்.

"நோ சான்ஸ்" என்றபடி சென்று விட்டார்.

எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. என்ன பாவம் செய்தாள் இந்த மகமாயி? புருஷன் இல்லை. கழுகுக் கண்களோடு குடிகாரத் தாய்மாமன் காத்திருக்க, பதினாறு வயதில் ஒரு மகள்!

நினைத்த படியே திரும்பி நடக்க முற்பட்ட போது, "டாக்டர்" என்று ஒரு மெல்லிய குரல் என்னைக் கூப்பிட்டது. திரும்பிப் பார்த்தேன்.

அழகான சின்னப் பெண் ஒருத்தி கையில் மஞ்சள் பை சகிதம் நின்றாள். என்னிடம், "எங்கம்மாவை எப்ப வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகலாம்?" என்று கேட்டாள்.

"உங்கம்மா பேரென்ன?"

"மகமாயி."

திக்கென்றது எனக்கு. இவள்தானா மகமாயியின் மகள்? இவளிடம் நான் எதைச் சொல்ல? யோசித்தேன். மெதுவாக அவளிடம்,

"அடுத்த வாரம்" என்று சொல்லி விட்டு வேகமாக வார்டைவிட்டு வெளியேறினேன்.



அப்பா: நீ ஒழுங்காகப் படிக்காததற்காக, நானும் உன் அம்மாவும், உன்னை உதைப்பது என்று முடிவு செய்திருக்கிறோம்!


மகன்: இந்த ஒரு விஷயத்திலாவது ரெண்டு பேரும் ஒத்துப் போனீர்களே, சந்தோஷம்!

— அதிரை புகாரி.

"அவன் எதையுமே வித்தியாசமாகத்தான் செய்வான்!"

"அதுக்காகக் கல்யாணப் பத்திரிகையின் அடியிலே, 'மாமியார்-மருமகள் ச ண் டை — குடும்ப நலத்துக்குக் கேடு'ன்னா அச்சடிக்கணும்?"

— பி. ஜி. பி. இசக்கி.



சபதம் செய்யாது

மகாமானியான பெரியாச்சியின் குடும்பத்துக்கு இப்படி ஒரு தலைகுனிவா? அவமானமென்றாலும் லேசு பாசானதா? கடவுளே... இதை எப்படி அவள் தாங்கப் போகிறாள்? இரவு நடந்தவை —

எப்படியோ கிராமம் முழுவதும் பரவி — மிக அதிகாலையிலேயே எழுந்து கலைந்து, கூறுகட்டிய வேர்க்கடலைகள் போல் அங்கங்கே சிறுசிறு கும்பலாக நின்று, கிசுகிசுத்த குரலில் ஆத்திரத்துடனும், ஆதங்கத்துடனும் பேசிக் கொண்டிருந்தது.

விடியாத அந்தக் குருட்டு இருட்டிலேயே, தண்ணீர் இறைக்கும் சாக்கில் பொதுக் கிணற்றடியில் ஊர்ப் பெண்கள் கூடி, இத்தனை வருடம் பெரியாச்சி வாழ்ந்த கௌரவத்தையும், இப்பொழுது மருமகளால், மூன்றே மாதங்களில், யாவும் தரைமட்டமானதையும் வாய்க்கு வந்தபடி விமர்சித்துக் கொண்டிருந்தார்கள்.

''டவுனுல போயி பெண் எடுக்கறப்பவே... எனக்குத் தெரியும்... இதே பெரியாச்சி எம் பொண்ணை வேணானாளே... இப்ப என்ன ஆச்சி?''

''பொண்ணுமேல் தப்பு என்ன ஆயா?''

''சும்மா இரும... குதிரையாட்டம் ஒடம்பும், குங்குவம் மாதிரி நெறமும் இருந்தா, சும்மா போறவனைக் கூட கண்டித்தான் இழுக்கும். தடிப்பப் பொண்ணுக்கு பயாஸ்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப்
போட்டியில் ரூ.375/-
பரிசு பெற்ற கதை-2

பாஞ்சாலிகள்

எஸ். பட்டம்மா


கோப்புக்காரி மாதிரி அழகு என்ன வேண்டிக் கிடக்கு! இந்தப் பெரியாச்சி எம் பேத்தியைக் கட்டாம... அது கெடக்கு... இந்தக் கேடு கெட்ட மூதிக்கு, ராத்திரி ரெண்டாவது ஆட்டம் அதுவும் டவுனுல சினிமா என்னமா வேண்டிக் கிடக்கு...?''

''அட, நீ ஒண்ணு! புருஷன் கூப்பிட்டான்... அவனோடதானே போனாள்? அது ஒரு தப்பா? கல்யாணமாகி மூணு மாசம் தானே ஆவுது? ஆசையிருக்காதா? சின்னஞ் சிறுசுங்க...''

''எடு தொடப்பக்கட்டையை! அவன் கூப்பிட்டா இவளுக்கு எங்கேடி போச்சு புத்தி? கூப்பிட்டானாம்... போனாளாம்... இப்ப கண்டவனும் கூப்டாச்சே! இப்ப குத்துது குடையுதுன்னா எப்படி? இம்புட்டு வருஷமா நெருப்பாப் பேரெடுத்த பெரியாச்சி ஆட்டுல சாக்கடை கலந்ததுதான் மிச்சம்... எம் பேத்தியை வேணாம்னுட்டு...''

''அதை வுடு ஆயா... என்னதான் நடந்தது வெவரமாச் சொல்லேன்...?''

''என்ன நடக்கலே? எல்லாம்தான் நடந்தாச்சே'' — விகாரமாகச் சிரித்த கிழவி தொடர்ந்தாள். ''பயாஸ்கோப்பு பார்க்கப் புதுப் பொண்டாட்டியைக் கூட்டிக்கிட்டுப் பெரியாச்சி மவன் சரவணன் டவுனுக்குப் போயிருக்கான். இரண்டாம் ஆட்டம் முடிஞ்சதும், சைக்கிள்ல ரெண்டும், குறுக்கு வழியா



வேலங்காட்டு ஓடையில் இறங்கி வந்திருக் குதுக. ஆள் அரவமத்த எடம். இருட்டுக் காலம் வேற... எவனோ ரெண்டு ரவுடிங்க வழிய மறிச்சி, சைக்கிளைப் புடுங்கிக்கிட்டு, 'பொண்டாட்டியை வுட்டுட்டுப் போடா'ன்னு பிச்சுவாவைக் காட்டி மெரட்டி இருக்கானுவ... இவன் ஒத்தை ஆளு... என்ன செய்வான் பாவம்! ஓடியாந்து போலீசு டேசன்லே சொல்லி, ஆளைக்கூட்டிக்கிட்டுப் போறதுக்குள்ளார... அவனுவ பொண்ணைச் சக்கையாக்கிக் கெடாசிட்டுப் போயிட்டானுவ...'

''ஐயையோ! அப்ப பொண்ணு செத்துடுச்சா?''

''அடச்சீ... அவ ஏண்டி சாவுறா? கிராமத்துப் பொண்ணாயிருந்தா இந்நேரம் நாக்கைப்புடுங்கிக்கிட்டுச் செத்திருப்பா! டவுனுக் காரியில்ல... ஆச்சு போச்சுன்னுதான் கெடந்தாளாம். டாக்டரு கிட்ட கூட்டிக்கிட்டுப் போயிருக்காம். செக்அப்போ என்ன சுண்ணாவியோ — அதெல்லாம் முடிஞ்சு போலீசு கொண்டு வந்துவிடுமாம். அவனுகளையும் தேடப் போலீசு போயிருக்காம்...''

''தூத்தேறி, அவ, போலீசுக்காரவுகளோட எப்படி இந்தக் கிராமத்துக்குள்ளே மறுபடி நொளய்வா? வெக்கமாயிருக்காது? இன்னமும் உயிரோட இருக்கணுமா! கெணத்துலே விழுந்து சாவக் கூடாதா? பேரைப் பாரு பேரை... ராசாத்தி — துடைப் பக்கட்டைக்குப் பட்டுக் குஞ்சலம்! அதுசரி... இந்தப் பெரியாச்சி இவளை எப்பிடி வூட்டுக் குள்ளார சேப்பா? ஆச்சிக்கி மானத்துக் கப்புறம்தான் மனுஷா, உசுரு எல்லாம்...''

''நல்லா கேட்டியே! பெரியாச்சியாவது... இந்தக் கசுமாலத்தை உள்ளே சேர்க்கிறதாவது! அவ பொறந்த வூட்டுக்கு ஆள் போயிருக்காம்... வாசலோட அனுப்பி விட்டுடும், கழுத்தைப் புடுச்சித் தள்ளி! இல்லேன்னா கண்டதுண்டமா வெட்டிப் போட்டுட்டுத் தானும் நாண்டுக்கிட்டுச் சாவும்...''

''பின்னேயில்லியா... புள்ளையைப் பெத்த மூணாம் நாளே புருசன் 'பொசுக்'குன்னு மண்டையைப் போட, ஒண்டிக் கட்டையா பால் வியாபாரம் செஞ்சு, வெறகு சுமந்து, பீடி சுத்தி... இந்தப் பய சரவணனை ஆளாக்கி பி.ஏ. படிக்க வச்சு, ஆபீசு வேலையில் அமர்த்தி, கல்யாணமும் செஞ்சு வக்கிறதுக்குள்ள பட்டபாடு கொஞ்சமா...? இத்தனைக்கும், ஒரு பய நாக்கு மேல பல்லு போட்டு ஒரு சொல் சொல்ல முடியுமா? அந்த ஆத்தாளுக்குப் போயி இப்பிடி ஒரு ஓடுகாலி வாச்சாளே! நாண்டுக்கத்தான் வேணும் — பேசாம எம் பேத்தியைக் கட்டியி....''

''போதும் ஆயா, போலீசு ஜீப்பு வருது...''

எங்கே.. எங்கே... என்றபடி —

குடங்களை அப்படியப்படியே போட்டுவிட்டு, பெரியாச்சியின் வீட்டை நோக்கி அரக்கப் பரக்கச் சிதறி ஓடினார்கள் பெண்களும் ஆண்களும்! கலைந்து வரும் பெண்ணைப் பார்ப்பது சுவாரஸ்யமென்றால்...

அதை விட —

அவள் பெரியாச்சியிடம் படப்போகும் அவஸ்தையைப் பார்ப்பது மிக மிக சுவாரஸ்யமில்லையா?

பெரியாச்சியின் வீடு கிராமத்து ஊர்க் கோடியில், சற்றே உள்ளடங்கிய ஓட்டு வீடு. வாசலில் நிற்கும் ஒற்றைத் தென்னை மரத்தடியில் நின்று பார்த்தால், மெழுகிக் கோலம் போட்ட வாசல் திண்ணையிலிருந்து, கொல்லையில் கொட்டிலில் கட்டியிருக்கும் பசுக்கள் வரை தெரியும். முற்றத்தில் சிந்திக் கிடந்த கேழ்வரகைக் கொத்திக் கொண்டிருந்த கோழிகளை அடுத்து அடுக்கியிருந்த தவிடு, பருத்திக் கொட்டை சாக்குகளின் நடுவே —

பெரியாச்சி! நெடு நெடு என்ற கரிய உருவம். உருவத்திற்கேற்ற கனத்த சரீரம். ஆனாலும் உழைத்து உழைத்து 'திண்'ணென்று உரமேறிய உடம்பு.. அள்ளிச் செருகிய, கறுப்பும் வெளுப்பும் சமமாக இருந்த, கலைந்த தலைமுடியும்.. அழுது சிவந்த கண்களின் நிறத்திலேயே சிவப்புக் கல் தோடும், வெள்ளிக் கம்பியில் கட்டிய சுண்டைக்காயளவு நாட்டுப் பவளமாலையுமாக... நீலமும் மஞ்சளுமாகப் பெரிய பெரிய கட்டம் போட்ட முரட்டுக் கைத்தறிப் புடைவையைப் பின்கொசுவம் வைத்துக் கட்டியிருந்தாள்.

அந்த ஆஜானுபாகுவான பெண்ணுருவம் — பார்த்த மாத்திரத்திலேயே ஒரு பயத்தையும் மரியாதையையும் தோற்றுவிக்கிற அந்த உருவம்... ஐம்புலனும் அவமானத்

தால் அடங்கி ஒடுங்கி, கூசிக் குறுகி, அமர்ந்து தலைகுனிந்த நிலையில் கிடந்தது.

ஜீப்பின் சப்தம் கேட்டு ஏறெடுத்து நோக்கியது.

கும்பலைப் போலீஸ் விலக்க... ஜீப்பிலிருந்து — புடைவையின் கிழியாத பகுதிகளால் உடம்பை இழுத்து மூடியபடி அழுதழுது வீங்கிய முகமும் கண்ணுமாக இறங்கிய ராசாத்தி —

எருமை மிதித்த தாமரையாக உருக்குலைந்து, முகத்தை மூடிக் குமுறியபடி வீட்டுக்குள் பாய்ந்தோடி மறைய முயன்ற போது —

"நில்... உள்ளே நுழையாதே!" என்ற கர்ஜனை கேட்டு வெலவெலத்துப் போய் நின்றாள் ராசாத்தி. நேற்று இரவு சினிமா விட்டு வரும் போது சிரிக்கச் சிரிக்கப் பேசிய கணவனா இவன்...? நம்ப முடியாதவளாக... "நீங்களா இப்படி பேசறீங்க... நான் எங்கே போவேன்...?" என்று கேட்டாள்.

"சாவுறது! இதுக்கு மேல உயிரோட இருக்கணுமா? அப்டில்லீனா இதோ ஒங்காப்பாரு வந்திருக்காரு. பொறந்த வூட்டுக்கே போய்ச் சேர். சீர்வரிசையெல்லாம் திருப்பியனுப்பிடறேன். அவமானத்திலே குனிஞ்ச தலை நிமிராமயே எங்கம்மா செத்துடுவா. அவ கண்ணுலே படாமே ஒங்கப்பாரோட ஊர்ப் போய்ச் சேரு..."

— பொறி பறக்கச் சரவணன் வார்த்தைகளைக் கொட்ட — அதுவரை துண்டால் வாயைப் பொத்தி அழுது கொண்டிருந்த ராசாத்தியின் அப்பா, துண்டை உதறித் தோளில் போட்டபடி கத்தினார்.

"நல்லாயிருக்கே நாயம்! நான் ஏன் கூட்டிக்கிட்டுப் போகணும். சீர்வரிசை திரும்ப வருமாமில்ல...? அரிசியை வாங்கிக்கிட்டு வந்து, சோறு பொங்கிட்டு, தின்ன மீதியைத் திருப்பிக் கொடுத்தா சோத்தை எந்த அரிசிக்காரனும் திருப்பி வாங்க மாட்டான். முடிஞ்சா வச்சக்குங்க. இல்லாட்டா அவளைக் கொன்னு போடுங்க. நான் போறேன்..." — வேகமாகப் படியிறங்கினார்.

"நில்லுங்க சம்பந்தி!" என்ற அதட்டலைக் கேட்டு அவர் மட்டுமல்ல; கூட்டமே அதிர்ந்தது. பெரியாச்சி! அதுவரை தலை குனிந்திருந்த பெரியாச்சி! ஆவேசமாகக் கத்தினாள்!

"பொண்ணைப் பெத்தவரா இல்லாம, ஏதோ முதுகெலும்போட பேசறீகளேன்னு நினைச்சா... கடோசியில 'அவளைக் கொன்னு போடு'ன்னு சொல்றீகளே.. மூணு மாசம் உருப்படியா வச்சுக் காப்பாத்த வக்கில்லாத, இந்தப் பய யாரு அவளைக் கொன்னு போடறதுக்கு...? 'பொண்ணை ஒழுங்கா காப்பாத்தாட்டா.. போலீசுல கம்ப்ளெயிண்டு கொடுப்பேன்'னு சொல்லிட்டுப் போங்க..."

கூட்டமே பிரமித்து நிற்க — தாயின் பேச்சு புரியாமல்,

"அம்மா... அம்மா... நீ என்னம்மா சொல்றே?" எனப் பதறினான் சரவணன்.

"அம்மான்னு இனிமே கூப்புட்டியானா நாக்கை வெட்டிருவேன்... பேடிப்பயலே! நாந் தலைகுனிஞ்சு கெடந்தது அவ சீரழிஞ்சதுக்காக இல்லேடா... அவளைச் சீரழிய விட்டுட்டு ஓடிவந்த கோழைப்பய ஒன்னைப் பெத்ததுக்காகத்தான் தலைகுனிஞ்சேன். ஆம்புளென்னு நெனச்சு உன்னை ஆளாக்குன பாவத்துக்கு என் உடம்பையே கொளுத்திக்கணும்... ஆனா... இந்தப் பொண்ணு நாதியத்துப் போகுமேன்னுதான்..."

"நீ என்னம்மா புரியாம ஏதேதோ பேசிக்கிட்டு... அவனுக ரெண்டு பேர் பிச்சுவாவைக் காட்டறப்ப... நான் ஒருத்தன் என்ன செய்ய முடியும்...?" என்றான் எரிச்சலுடன்.

"ஒன்னாலேயே முடியாதப்ப... பொம்பளை அவ என்னடா செய்வா?" ஒண்ணு அவளை நீ காப்பாத்தி இருக்கணும்... இல்லே... அவ, மானம் போறதுக்கு முந்தி உன்னோட உயிர் போயிருக்கணும்... அப்ப... நான் ஒரு ஆம்பளையெப் பெத்தேன்னு தலைநிமிர்ந்து நின்னிருப்பேன். அட... ஒண்ணுமே முடியாட்டி, சும்மாவாவது கெட... அதெ வுட்டுட்டுப் 'பொறந்த வூட்டுக்குப் போ'ன்னு சொல்ல ஒனக்கேது மூஞ்சி!"

"என்னாம்மா... பேசிக்கிட்டே போறே?"





● நீங்களும் காளான் வளர்க்கலாம்

● மாஜிக் கற்றுக் கொள்ளுங்கள்

● பக்த நந்தனார்

— 16 பக்க வண்ணப் படக்கதை

என்றபடி கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னால் வந்தான் நாட்டாண்மைக்காரர் மகன் மைனர் சிங்காரவேலு, மீசையை முறுக்கியபடி.

"நான்தான் கேக்கறேன். இன்னொருத்தன் தொட்ட பொண்ணை... ஒரு நல்ல ஆம்புளெ வச்சிக் குடுத்தனம் பண்ணுவானா? புரியாம பேசறியே!" என பந்தாவாக அவன் கேட்க, கும்பல் 'கொல்' எனச் சிரித்தது!

பெரியாச்சி பத்ரகாளியானாள்!

"எவண்டா அவன்? சின்ன நாட்டாமையா? முன்னால வா! கோயில்ல குடியிருக்கிற ராமரு இவரு, நியாயம் சொல்ல வந்துட்டாரு! மூஞ்சியைப் பாரு! ஏண்டா... மாசம் முப்பது நாளும் நீ டவுனுல கண்ட சிறுக்கிகளோட லாட்ஜுகள்லே அடிக்கிற கூத்தை, ஒம் பொஞ்சாதி தினமும் கிணத்தங்கரையில் சொல்லிச் சொல்லி அழுவுறா... அவளுக எல்லாம் யாருமே தொடாதவளுகளா...? இன்னொருத்தன் தொட்டாக் கேவலம்தான்... அதே மாதிரி இன்னொருத்தி, ஒருத்தி என்ன, கண்டவளுங்க எல்லாம் தொட்ட நீ கேவலம் இல்லையா? ஒன்னெ எப்பிடி ஒம் பொஞ்சாதி சேர்த்துக்கறா? குடித்தனம் பண்றா? ஆம்பளெக்கி ஒரு நியாயம்... பொம்பளெக்கி ஒரு நியாயமா! டேய் சொல்லுடா!"

சிங்காரவேலு கூட்டத்தில் காணாமல் போனான்! கூட்டம் மறுபடி 'கொல்'லெனச் சிரிக்க, கொதித்துப் போனாள் பெரியாச்சி!


"எப்பிடி உங்களால சிரிக்க முடியுது? ஒங்களெ மாதிரி ஒருத்தன் செஞ்ச தப்புனால, ஒரு பொண்ணு அலமந்து நிக்குதே... ஒங்களுக்கு வெக்கமா... வேதனையா இல்லையா? அந்தக் காலத்துல பாஞ்சாலிக, தன்மேல கையை வைச்சவன் ரத்தத்துல தலை முடிவேன்னு சபதம் செஞ்சாங்க... சபதத்தை ஆம்பளெங்க நிறைவேத்தி வைப்பாங்கங்கிற தைரியம் அவங்களுக்கு இருந்தது! ஆனா இந்தக் காலத்துப் பாஞ்சாலிக, ஒங்களைப் போல ஆம்பிளைங்களை நம்பி இன்னா சபதம் செய்ய முடியும்? மூலையில ஒக்காந்து ஆயுசு முச்சூடும் இப்பிடி அழுவத்தான் முடியும்! இதுல சிரிப்பு என்ன வேண்டிக் கிடக்கு?" என்றவள், "ஏண்டீ பொண்டுகளா... ஒங்களுக்குந்தான்... ஒங்களைப் போல ஒரு பொண்ணு அழிஞ்சி போயி நிக்கறதைப் பாத்தா, துளிக் கூடவா மனசு வேகாது? வாயெப் பொளந்து வேடிக்கை பாக்க வந்துட்டீங்களே...? நீங்கள்லாம் மனுச சன்மங்கதானா?" எனக் காறித் துப்பினாள்.

கடைசியாக —

"டேய் சரவணா... ஒன்னெப் பெத்துக்கு, படிக்க வைச்சு வேலையிலே வைச்சுட்டேன்... எப்படியோ பொழைச்சுக்க... இதெல்லாம்... இந்த வீடு வாசல் எல்லாம்... நானே ஒழச்சுச் சம்பாதிச்சது... ஒந் தப்பை ஒணந்து குடுத்தனம் பண்ண முடிஞ்சா... அதாவது அவ ஒன்னைப் புருசனா ஏத்துக்கிட்டா இரு... இல்லாட்டி நட"

என்றபடி, மருமகளின் முகவாய்க்கட்டையை ஏந்தி, கனிவாக எழுப்பினாள், பெரியாச்சி! "ஒம் மனசறிஞ்சு நீ எந்தத் தப்பும் பண்ணலை... ராசாத்தி... நிமிர்ந்து பார்... இதுவரைக்கும் ஒம்புருசனுக்காக உழைச்சேன்... இனிமே ஒனக்காக உழைப்பேன்... எந்திரிச்சு வந்து குளிச்சிட்டு விளக்கேத்து" என அணைத்தபடி, நம்பி வந்தவளுக்கு நியாயம் வழங்கிவிட்ட நிறைவுடன் தலைநிமிர்ந்து உள்ளே போனாள்!

கூட்டம் மௌனமாகக் கலைந்து, தலை குனிந்தபடி வெளியேறியது — பெரியாச்சியின் மகன் சரவணனைத் தவிர!



ஒட்டடையையும், தூசியையும் உறிஞ்சி எடுக்கும் Vacuum Cleaner என்ற கருவி இப்போது இந்தியாவிலும் பிரபலமாகிக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள வயல்வெளிகளில் ஒரு புதுவித Vacuum Cleaner ஐப் பயன்படுத்தி, பயிர்களிலிருந்து பூச்சி, புழு, வண்டுகளை உறிஞ்சி எடுத்து விடுகிறார்கள். உறிஞ்சப்படும் பூச்சிகள் இக்கருவிக்குள்ளேயே இறந்துவிட, அவற்றை மீண்டும் வயலிலேயே உரமாகத் தூவி விடுகிறது இக்கருவி! மேலும், ரசாயன பூச்சிக் கொல்லிகளால் ஏற்படும் தீய பின்விளைவுகள் இதனால் அறவே தவிர்க்கப்படுகின்றன. இதன் பெயர் Bug—Vac—(Bug—வண்டு, Vac—Vacuum என்பதின் சுருக்கம்.)

நன்றி: ஸ்பான்.



அத்தியாயம் 21

உயிர் ஊசலாடியது!

ஒரு கண நேரம் ஒரு யுகமாகத் தோன்றக் கூடிய சந்தர்ப்பங்கள் சில உண்டு. அவற்றில் ஒன்று இப்போது வானதிக்கு நேர்ந்தது. அவள் கண்ணை மூடிக் கொண்டு, துர்க்கா பரமேசுவரியைப் பிரார்த்தனை செய்து கொண்டு, ஓட்டுக் கூரை ஓடத்தில் சுழன்று சென்ற நேரம் சில வினாடிகள்தான் இருக்கும். ஆயினும் அவை சில யுகங்களாகவே அவளுக்குத் தோன்றியது. பின்னர் ஏற்பட்ட ஒரு பெரிய அதிர்ச்சி அவளுடைய தேகத்தையெல்லாம் குலுக்கிப் போட்டபோது அவளுடைய கண்களும் திறந்து கொண்டன. கூரை ஓடம் ஆற்றங்கரை மரத்தின் பேரில் மோதியதனால் அந்த அதிர்ச்சி உண்டாயிற்று என்பதை அவள் அறிந்தாள். அதனால் அந்தக் கூரை சுக்கல் ,சுக்கலானபோது அதிர்ஷ்டவசமாக வானதியின் பாதி உடம்பு, வளைந்திருந்த மரக் கிளையில் சிக்கிக் கொண்டிருந்தது. அதனால் அவள் மரத்தின் வேர்களில் மோதப்படாமல் தப்பினாள். தனது நிலையை ஒருவாறு உணர்ந்து மரக்கிளைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். வெள்ளத்தின் சுழல் அவளுடைய கால்களைப் பிடித்து அதி வேகமாக இழுத்துக் கொண்டிருந்தது. அந்த வேகத்தினால் கால்கள் பிய்த்துக் கொண்டு போய் விடும் போலிருந்தது. அவள் உடுத்தியிருந்த சேலையும் அவளை இழுத்து வெள்ளத்தில் விட்டு விட முயன்றதாகத் தோன்றியது.

வானதிக்கு அச்சமயம் அதிசயமான மனோதிடமும் தைரியமும் எங்கிருந்தோ வந்திருந்தன. பல்லைக் கடித்துக் கொண்டு தன் முழு பலத்தையும் கொண்டு எழும்பி மரக் கிளையின் மேலே தாவி ஏறினாள். வளைந்து ஊசலாடிய மெல்லிய கிளைகளுக்கு மேலே இரண்டு கவடுகளாகப் பிரிந்த ஒரு பெரிய கிளையில் வசதியான இடத்தில் கெட்டியாக உட்கார்ந்து கொண்டாள். சேலைத் தலைப்புகளை முறுக்கித் தண்ணீரைப் பிழிந்தாள்.

அப்போது சடபட வென்று தண்ணீர் அடிபடும் சத்தம் கேட்டது. சற்று முன்னால், அவள் கண்ணை மூடிக்கொள்வதற்கு முன்னால், பார்த்த முதலையின் நினைவு வந்தது.

அமரர் கல்கி

கீழே குனிந்து நாலு பக்கமும் உற்றுப் பார்த்தாள். முதலில், முதலையின் வால் தண்ணீரை அடிக்கும் காட்சி மட்டும் தென்பட்டது. முதலையின் உடம்பில் பெரும் பகுதியை அவள் ஏறி வந்த ஓட்டுக் கூரையின் உடைந்து சிதறிய பகுதிகள் மறைத்துக் கொண்டிருந்தன. சிறிது சிறிதாக முதலை தன் வாலின் உதவி கொண்டும் உடம்பை அசைத்து நெளித்தும் அந்தக் கூரைப் பகுதிகளிலிருந்து முழுதும் விடுவித்துக் கொண்டு வெளி வந்தது. அப்படி வெளிவந்த மகிழ்ச்சியைக் காட்டுவதற்காக முதலை தன் வாயை அகலப் பிளந்தது. வானதியைப் பார்த்து அது "வா! வா! எப்படியும் நீ என் வாயில் விழ வேண்டியதுதான்!" என்று சொல்வது போலிருந்தது.

வானதியும் தான் தப்பிப் பிழைத்த விதத்தை எண்ணிப் பார்த்து உற்சாகம் கொண்டிருந்தாள். "ஓகோ! அப்படியா சொல்கிறாய்? என்னை விழுங்கி விடுவேன் என்றா சொல்கிறாய்? முதலையே! உன்கை வரிசை, வால் வரிசை ஒன்றும் என்னிடம் பலியாது! நீ பல்லைக் காட்டுவதிலும் உபயோகமில்லை. உன் பசிக்கு என்னை நம்பியிராதே! வேறு யாரையாவது பார்த்துக் கொண்டு போ!" என்று வானதி முதலையிடம் பேசினாள். அந்தக் குரலைக் கேட்ட முதலை தன் இரண்டு பயங்கரமான கண்களாலும் அவளை உற்றுப் பார்க்கத் தொடங்கியது.

வானதி "ஓகோ! உன்னுடைய சபலம் உன்னை விடவில்லை போலிருக்கிறது!" என்று கூறி விட்டுச் சுற்று முற்றும் பார்த்தாள். அவளுடைய நிலைமை சற்றுப் பீதி அளிக்கக் கூடியதாகவே தோன்றியது. தண்ணீரின் பக்கம் அந்தப் பெரிய மரத்தின் கிளைகள் வளைந்து தொங்கின. ஆனால் கரையின் பக்கத்தில் அப்படித் தாழ்ந்திருந்த கிளைகளையே காணவில்லை. அடி மரத்தின் வழியாக இறங்கினால், அங்கே வேர்களோடு வேராக முதலை காத்துக் கொண்டிருந்தது. நதியின் பக்கம் வளைந்திருந்த கிளைகளிலிருந்து குதித்தால் மடுவின் சுழல் அவளைச் சுற்றிச் சுழற்றிப் பாதாளத்துக்கு இழுத்துக் கொண்டு போகக் காத்திருந்தது. அந்தப் பெரிய சுழலைச் சற்று நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தால் கூடத் தலை சுற்றும் போலத் தோன்றியது. "கரைப் பக்கம் கிளைகள் உயரமாக இருந்தாலும் பாதகமில்லை; எப்படியோ குதித்துச் சமாளிக்கலாம்" என்று எண்ணி, மரக்கிளைகளின் வழியாக நடந்து மறு பக்கம் போக யத்தனித்து எழுந்தாள்.

ஏற்னெவே வெகு நேரம் அவளுடைய உடம்பின் கீழ்ப் பகுதி முழுதும் தண்ணீரில் இருந்த படியால் கால்கள் சில்லிட்டுப் போயிருந்தன. எழுந்து நிற்க முயன்றபோது கால்கள் வெடவெட வென்று நடுங்கின. "சீச்சீ! கால்களே! உங்களுக்கு என்ன வந்து விட்டது?" என்று சொல்லிவிட்டு, வானதி மறுபடி உட்கார்ந்து கொண்டாள். யாருக்குப் பொறுமை அதிகம்? முதலைக்கா, தனக்கா? — என்று சோதித்துப் பார்க்க வேண்டியதுதான் போலும்!

இச்சமயம், கஜேந்திரனின் பிளிறல் சத்தம் கேட்டு வானதி திடுக்கிட்டாள். சற்று முன் நதியைக் குறுக்கே கடந்து கரை ஏறி மேற்கு நோக்கிச் சென்ற யானை திரும்பி வந்து கொண்டிருந்தது. அதே சமயத்தில் ஆற்றின் கரை ஓரமாகப் படகு ஒன்று வருவதையும் கவனித்தாள். அந்தப் படகில் இருவர் இருந்தார்கள். ஆம், ஆம்; அந்த இருவரில் ஒருவன் ஜோதிடரின் சீடன்; இன்னொருத்தி பூங்குழலிதான்! கடைசியில் தன்னைக் காப்பாற்றி அழைத்துப் போகப் பூங்குழலிதானா வரவேண்டும்?

படகு மரத்தின் அடியில் வந்தது. மரக் கிளைமேல் உட்கார்ந்திருந்த வானதியைப் பூங்குழலி பார்த்து விட்டாள். சிரித்துக் கொண்டே "இளவரசி! நல்ல இடம் பார்த்து ஒளிந்து கொண்டீர்கள். சீக்கிரம் இறங்கி வாருங்கள்! அதோ அந்த யானையின்மேல் வருகிறது யார் தெரியுமா?" என்று கேட்டாள்.

வானதியின் மனத்தில் சட்டென்று உண்மை உதயமாகி விட்டது. ஆனாலும் அதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, "தெரியாதே? யார்?" என்று கேட்டாள்.

"தாங்கள் யாரைத் தேடிக் கொண்டு புறப்பட்டீர்களோ, அவர்தான்! இளவரசர் தான்!" என்றாள் பூங்குழலி.

வானதி அடங்கா வியப்புடன் யானையின் மேல் வருகிறவரைச் சில கண நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். அவர் அருகில் வரும் சமயத்தில் தான் மரக் கிளையின் மேல் உட்கார்ந்திருப்பது மிக்க அசம்பாவிதம் என்று தோன்றியது. பூங்குழலியின் யோசனைப்படி அவளுடைய படகில் இறங்கி விட வேண்டியதுதான் என்று எண்ணிக் கீழே பார்த்தாள்.

அச்சமயம் படகு வெள்ளத்தின் வேகத்தினால் மரத்தடியில் நிற்க முடியாமல்

நகர்ந்து செல்வதைக் கண்டாள். படகுடன் போக விரும்பாமல் பூங்குழலி தாவிக் குதித்ததையும் பார்த்தாள்.

ஐயோ! இது என்ன? பக்கத்தில் பயங்கர முதலை கிடப்பதை இந்தப் பெண் கவனிக்க வில்லையா, என்ன?

ஒரு கணத்தில் ஒன்பதினாயிரம் எண்ணங்கள் வானதியின் உள்ளத்தில் எழுந்து கொந்தளித்தன!

அவள் வாயிலிருந்து ஏதோ உளறிக் குளறி வார்த்தைகள் வந்தன!

''முதலை!'' என்பது மட்டும் பூங்குழலியின் காதில் விழுந்தது. அவள் திரும்பிப் பார்த்தாள். ஆம்; அவளுக்கு வெகு சமீபத்தில் ஒரு பிரம்மாண்டமான முதலை அதன் வாயைப் பிளந்துகொண்டிருந்தது. பூங்குழலி திரும்பிப் பார்த்த சமயம் முதலை தன் வாலை ஓங்கித் தண்ணீரில் அடித்தது.

பூங்குழலி எவ்வளவோ தைரியசாலி தான்! எத்தனையோ அபாயங்களைச் சமாளித்திருக்கிறாள். ஆனால் பத்தடி தூரத்தில் வாயைப் பிளந்து கொண்டிருக்கும் முதலைக்கு முன்னால் மனோ தைரியத்தை மட்டும் வைத்துக் கொண்டு என்ன செய்ய? கரணம் தப்பினால் மரணம்! ஒரு வினாடியில் உயிர் தப்பா விட்டால், முதலையின் வாயில் போக வேண்டியதுதான்! எப்படி உயிர் தப்புவது? மறுபடியும் படகில் ஏறிக் கொள்ள வேண்டியதுதான்!

இவ்வாறு எண்ணிப் பூங்குழலி தண்ணீரில் பாய்ந்தாள். படகு அதற்குள் கொஞ்ச தூரம் போய் விட்டது. ஜோதிடரின் சீடன் படகை அவ்விடத்தில் நிறுத்த முடியாது என்று தீர்மானித்துச் சற்றுக் கீழ்ப்புறம் சென்று கரையோரமாக அதை ஒதுக்க எண்ணிக் கொண்டு போனான். பூங்குழலியின் ஆபத்தான நிலையை அவன் கவனிக்க வில்லை.

படகைப் பிடிக்கத் தாவி நீந்திச் சென்ற பூங்குழலி அலைமோதும் கடலைக் காட்டிலும் காவேரி வெள்ளத்தின் கரையோரச் சுழல் அபாயகரமானது என்று கண்டாள். சுழலின் வேகம் அவளைக் கீழ் நோக்கி இழுத்தது. முதலை அவள் பின்னால் அவளைப் பிடிப்பதற்காக நகரத் தொடங்கி விட்டதென்பதை உணர்ந்தாள். இந்த நிலையில் அவளுடைய சேலையின் தலைப்பு வளைந்திருந்த மரக் கிளைகளில் மாட்டிக் கொண்டு அவளுடைய நிலையை மேலும் அபாயகரமாக்கியது.



இதையெல்லாம் மேற் கிளை மீது அமர்ந்திருந்த வானதி கண்டாள். தன் மீது பூங்குழலி கொண்டிருந்த மனக்கசப்பும், சற்று முன்னால் அவளுடைய கொடூர வார்த்தை காரணமாகத் தான் செய்த சபதமும், அவள் தன்னைக் கை தூக்கிவிட வேண்டாம் என்று எண்ணிக் கையை உதறித் தண்ணீரில் விழுந்ததும் மின்னல் வேகத்தில் அவள் மனத்தில் தோன்றி மறைந்தன. கூடவே, அப்பெண் பொன்னியின் செல்வரைக் கடலிலிருந்து காப்பாற்றிச் சூடாமணி விஹாரத்தில் கொண்டு போய்ச் சேர்த்ததும் அதனால் சோழ நாடும் தானும் அவளுக்குப் பட்டிருந்த நன்றிக் கடனும் நினைவு வந்தன. அதோ, யானைமீது அவர் வந்து கொண்டிருக்கிறார். அவர் வருவதற்குள்ளே இவள் முதலை வாயில் அகப்பட்டுக் கொண்டு விட்டால், அவர் மனம் என்ன பாடுபடும்? தன்னைப் பற்றி அவர் என்ன எண்ணுவார்? பார்க்கப் போனால் தன்னைக் காப்பாற்றும் எண்ணத்துடன் அல்லவா இவள் தொடர்ந்து வந்து இந்த அபாயத்துக்கு உள்ளாகியிருக்கிறாள்?

இவ்வளவு எண்ணங்களும், இங்கே நேயர்கள் படிப்பதற்கு ஆன நேரத்தில் நூற்றில் ஒரு பங்கு நேரத்திற்குள்ளே, வானதியின் உள்ளத்தில் தோன்றின. ''வாயு வேகம் மனோவேகம்'' என்று சொல்வது வெறும் வார்த்தை அன்று. எல்லா வேகங்களுக்குள்ளும் சிந்தனையின் வேகம்தான் அதிக வேகமானது.

இவ்விதம் எண்ண மிட்ட நேரத்திலேயே தன்னுடைய கடமை இன்னதென்பதையும் வானதி நிச்சயித்து விட்டாள். மேற்கிளையிலிருந்து ஒரு கிளை கீழே இறங்கி, அதன் மீது படுத்த வண்ணம் கைகளைக் கீழே நீட்டினாள். பூங்குழலியின் தலைக் கூந்தலை வாரிப் பிடித்துக் கொண்டாள். பூங்குழலி மேல் நோக்கிப் பார்த்தாள். வானதியின் கைப் பிடியிலிருந்து அவள் தப்பிச் செல்ல முயலவில்லை. ஒரு கரத்தை மேலே நீட்டினாள். வானதி இப்போது அந்தக் கரத்தைப் பிடித்துக் கொண்டாள். பூங்குழலியை மேலே இழுக்கத் தொடங்கினாள். இன்னொரு கையினால் மரக்கிளை ஒன்றைப் பற்றிக் கொண்டு பூங்குழலி வெள்ளத்திலிருந்து மேலே எழும்பினாள். வானதி இருந்த கிளையிலேயே அவளும் தாவி ஏறினாள். இரண்டு பேரையும் தாங்க முடியாமல் அந்தக் கிளை வளைந்தது. பூங்குழலியின் ஒரு கையை விட்டு விடாமல் வானதி மேற்கிளைக்குத் தாவினாள். பூங்குழலியும் மேலே ஏற முயன்றாள். அந்த முயற்சியில் அவளுடைய கால்கள் தடுமாறின. மறு கணத்தில் அவள் மரக்கிளைக்கும் நதி வெள்ளத்துக்கும் இடையில் தொங்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய ஒரு கையை



மட்டும் வானதியின் இரு கரங்களும் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருந்தன.

மரத்தின் வேர்களுக்கு மத்தியில் கிடந்த முதலை வெளிப் புறப்படுவதற்குச் சிறிது நேரம் ஆயிற்று. இப்போது அது வெளி வந்து விட்டது.

மரக்கிளையிலிருந்து தொங்கிய உருவத்தைப் பார்த்து விட்டு, வாயை மறுபடியும் அகலமாகத் திறந்தது.

பூங்குழலியின் உடலும் உயிரும் ஊசலாடிக் கொண்டிருந்தன.

வானதியின் மெல்லிய கரங்கள்பூங்குழலியின் வைர உடலின் கனத்தினால் இற்று விழுந்து விடும் போலிருந்தன. அவளுடைய உள்ளமோ எந்தக் கணத்தில் பூங்குழலி தன் கையிலிருந்து நழுவி முதலையின் வாயில் விழுந்து விடுவாளோ என்ற எண்ணத்தினால் துடிதுடித்தது.



அத்தகைய விபத்து நேர்ந்துவிட்டால், பிறகு இளவரசரின் முகத்தை அவள் ஏறிட்டுப் பார்க்கவே முடியாது. பூங்குழலி விழும் போது அவளும் கூடவிழுந்து உயிரை விட்டு விடுவதே மேலானது. அப்படித்தான் செய்ய வேண்டும்.

அதோ யானை நெருங்கி வந்து விட்டது. இளவரசர் அதன்மேல் வருகிறார். அவர் வந்து காப்பாற்றும் வரையில், பூங்குழலியை விட்டு விடாமலிருக்க இந்தக் கரங்களில் சக்தி இருக்குமா....?

யானை ஆற்றங்கரையில் வந்து மரத்தடியில் நின்றது. மறுபடியும் ஒரு தடவை பிளிறியது. அந்தச் சத்தத்தைக் கேட்டு முதலை அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தது. என்னநினைத்துக்கொண்டதோ என்னமோ, மறுபடியும் மரத்தின் வேர்களுக்கு மத்தியில் சென்று படுத்துக் கொண்டது.

வானதியும் மரக்கிளையின் மீது குனிந்த வண்ணம் யானையை பார்த்தாள். அதன் மேலிருந்தவரையும் பார்த்தாள். ஆம்; அவர் இளவரசர்தான்! பொன்னியின் செல்வர் தான்!

"யானைப்பாகா! யானைப்பாகா! அன்றொரு நாள் பறவைக் குஞ்சுகளைக் காப்பாற்றியதுபோல் இன்றைக்கு இந்தப் பேதைப் பெண்களைக் காப்பாற்று!" என்று தனக்கு மட்டும் கேட்கக் கூடிய மெல்லிய குரலில் கூறிக் கொண்டாள்.

முடியாது; இனி இந்த ஓடக்காரப் பெண்ணைத் தாங்க முடியாது!

இனி ஒரு நிமிஷம் தாமதித்தாலும் தோள் பட்டைகளிலிருந்து கைகள் தனியாகப் பிய்ந்து விழுந்து விடும்!

அப்பப்பா! இவள் பெயர் பூங்குழலி! ஆனால் என்ன கனம் கனக்கிறாள்? இரும்பினால் செய்த உடம்பு போல அல்லவா இருக்கிறது!

யானைப்பாகா! யானைப்பாகா! சீக்கிரம் வர மாட்டாயா?.....

பூங்குழலி 'கிறீச்' என்று கத்தினாள். அதைக்கேட்ட வானதி அவளை முதலை பிடித்துக் கொண்டதாக எண்ணினாள்.

சொல்ல முடியாத பயங்கரம் அவள் மனத்தில் குடி கொண்டது. கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

அவளுடைய கைகளைப் பிடித்துக் கீழ் நோக்கி இழுத்துக் கொண்டிருந்த கனம் மேலும் அதிகமாயிற்று.

முதலைதான் பூங்குழலியைப் பிடித்து இழுப்பதாக எண்ணிக் கண்ணை மூடிய வண்ணம் அவளை இன்னும் கெட்டியாகப் பிடித்து மேலே தூக்க முயன்றாள்.

''கையை விடு! வானதி! கையை விடு!'' என்று செவியில் அமுதென ஒலித்த இளவரசரின் குரல் கேட்டது.

இன்னது செய்கிறோம்என்று தெரியாமல் கையை விட்டாள்.

அவளுடைய தோள்களைப் பிய்த்து இழுத்த பாரம் நீங்கியது.

கண்களைத் திறந்து பார்த்தாள்.


பூங்குழலியைக் கஜேந்திரன் துதிக்கையினால் சுழற்றிப் பற்றி எடுத்துக் கரையிலே இறக்கி விடுவதைக் கண்டாள்.

பூங்குழலியின் கண்கள் மூடியிருந்தன. யானைத் துதிக்கை அவள்மீது சுற்றிய போதுதான் அவள் அவ்வாறு 'கிறீச்' சிட்டுக் கத்தியிருக்க வேண்டும்.

அதேமாதிரி தானும் ஒரு தடவை கத்தி விட்டு மூர்ச்சையடைந்தது வானதிக்கு நினைவு வந்தது.

இப்போது அதைக் காட்டிலும் பன் மடங்கு அபாயகரமான நிலைமையாயிருந்தும், தான் பயப்படாமலும் பிரக்ஞை இழக்காமலும் இருப்பதை நினைக்க அவளுக்கே வியப்பாயிருந்தது.

தன்னுடைய தைரியத்தைப் பார்த்து மெச்சிப் பாராட்ட இளைய பிராட்டி இங்கே இல்லையே? ஆயினும் பாதக



மில்லை. எப்படியும் ஒருநாள் அவருக்குத் தெரியாமற் போகாது. இப்போது என்னுடைய கதி என்ன? பூங்குழலியை மட்டும் அழைத்துக்கொண்டு என்னை இந்த மரத்தின் மேலேயே விட்டு விட்டு இளவரசர் போய் விடுவாரா?

அவ்விதம் அவர் செய்தால் அது என்னுடைய அசட்டுத்தனத்துக்குச் சரியான தண்டனையாகத்தான் இருக்கும்!

இல்லை, இல்லை! கஜராஜனின் துதிக்கை மறுபடியும் அவளை நோக்கி நீண்டு கொண்டு வந்தது.

வானதி மீண்டும் ஒரு தடவை கண்களை மூடிக் கொண்டாள்.

மறுகணம் அவள் மரக்கிளையிலிருந்து தூக்கப்பட்டுக் கெட்டியான தரையில் விடப்பட்டதை உணர்ந்தாள்.

கண் விழித்துப் பார்த்த போது தான் நதிக் கரையில் பூங்குழலிக்கு அருகில் நிற்பதைக் கண்டாள்.

தன்னை அறியாமல் எழுந்த அன்புடனும் ஆர்வத்துடனும் அந்த ஓடக்காரப் பெண்ணைக் கட்டித் தழுவிக் கொண்டாள்.

பூங்குழலி கண்களில் நீர் ததும்ப, தழுதழுத்த குரலில், "இளவரசி! இன்று என் உயிரைக் காப்பாற்றினீர்கள். நான் உங்களை நதி வெள்ளத்தில் முழுகிப் போகாமல் காப்பாற்றி அழைத்துப் போக வந்தேன். அதற்கு மாறாக நீங்கள் என்னை முதலை வாயிலிருந்து காப்பாற்றினீர்கள். இந்த நன்றியை என்றும் மறக்க மாட்டேன்" என்றாள்.

"பூங்குழலி! நானா உன்னைக் காப்பாற்றினேன்? உன்னையும் என்னையும் அந்த யானைப்பாகன் அல்லவா காப்பாற்றினார்? அவரிடம் உன் நன்றியைக் கூறு!" என்றாள் வானதி.

"என் உயிர்மேல் எனக்கு அவ்வளவாக ஆசை ஒன்றுமில்லை. ஆனால் என் அத்தை அவளுடைய செல்வப் புதல்வரிடம் ஓர் அவசரச் செய்தி சொல்லும் படி என்னை அனுப்பினாள். அதைச் சொல்லுவதற்கு முன்னால் நான் செத்துப் போக விரும்பவில்லை!" என்றாள் பூங்குழலி.

யானையின் மேலிருந்தவரை வானதி நிமிர்ந்து பார்த்தாள். ஏதோ ஒரு விஷம குதூகலம் அவளை அச்சமயம் பற்றிக் கொண்டிருந்தது.

"யானைப் பாகா! யானைப் பாகா! எங்களை உன் யானைமேல் ஏற்றிக் கொண்டு போகிறாயா?" என்று கேட்டு விட்டுக் கலீர் என்று சிரித்தாள்.

அத்தியாயம் 22

மகிழ்ச்சியும் துயரமும்

வானதியின் சிரிப்பொலியுடன் கலந்த வார்த்தைகளைக் கேட்டு விட்டு, இளவரசரும் சிரித்துக் கொண்டே யானையின் மேலிருந்து கீழிறங்கினார்.

"ஆகா! யானை ஏற்றம் என்பது மிகவும் கடினமான காரியம். இராஜ்ய சிம்மாசனத்தில் ஏறுவது போலத்தான். யானைமேல் ஏறுவதும் கஷ்டம்; அதன் மேல் உட்கார்ந்திருப்பதும் கஷ்டம்; யானை மேலிருந்து இறங்குவது எல்லாவற்றையும் விடக் கஷ்டம். ஆயினும், அந்தக் கஷ்டங்களையும் சில சமயம் ஒருவன் அநுபவிக்க வேண்டியிருக்கிறது!" என்றார் பொன்னியின் செல்வர்.

"சிலர் அந்தக் கஷ்டத்தை மிக அற்பமான காரணங்களுக்காகக்கூட அநுபவிக்கிறார்கள். பறவைக் குஞ்சுகளைக் காப்பாற்றுவதற்காக யானை மேல் ஏறிக் கொண்டு ஓடி வருகிறவர்களும் உண்டு!" என்றாள் வானதி.

"அந்தச் சம்பவம் உனக்கு இன்னும் நினைவு இருக்கிறதா, வானதி! நீ அதைப் பற்றி இன்று வரை பேச்சே எடுக்காததினால் மறந்து விட்டாயோ என்று எண்ணினேன்!" என்றார் இளவரசர்.


"உலகெல்லாம் சுற்றி அலைந்து அநேக வீரச் செயல்களில் ஈடுபடுகிறவர்கள் மறந்து விடுவார்கள். அரண்மனையிலேயே இருக்கும் பேதைப் பெண்ணுக்கு அதை ஞாபகம் வைத்துக்கொள்வதை விட வேறு என்ன வேலை? தாங்கள் அன்றைக்கு யானை மேல் ஏறிக் கொண்டு வந்ததும் நினைவிலிருக்கிறது. நான் கொடும்பாளூர்ப் பெண் என்று சொன்னதும் தாங்கள் முகத்தைச் சுருக்கிக் கொண்டு திரும்பிப் போனதும் நினைவில் இருக்கிறது!"

"அதற்கு அப்போது காரணம் இருந்தது, வானதி!"

"அந்தக் காரணம் இப்போதும் இருக்கிறது, ஐயா! தாங்கள் உலகமாளும் சக்கரவர்த்தியின் புதல்வர்; சோழ வள நாட்டின் கண்ணின் மணி போன்ற பொன்னியின் செல்வர். நானோ பொட்டைக் காட்டுப் பிராந்தியத்தில் பிறந்து வளர்ந்தவள். சிற்றரசர் குலமகள்; அதிலும், போரில் இறந்து போனவருடைய அநாதை மகள்!..."

"வானதி! நீ எனக்கு அநீதி செய்கிறாய்!

கர்ப்பிணிகளுக்கு இனிப்பு பண்டங்கள் ஏன்?



"கர்ப்பிணிகளுக்கு மசக்கை என்பது உண்டு அப்பொழுது அவர்கள் மனதில் ஏற்படும் விருப்பங்களை நிறைவேற்றினால் பிறக்கும் குழந்தை பூரண வளர்ச்சியுடன் பிறக்கும்.

அவர்களுடைய ஆசைகள் நிறைவேறாவிடில் சிசுவின் வளர்ச்சி பாதிக்கப்படும்.

குறிப்பிட்ட ஆசை எந்த அளவுக்கு பூர்த்தி செய்யப்படவில்லையோ அந்த அளவுக்கு குழந்தைக்கு ஊனம் ஏற்படும்." "சரகர்"

கர்ப்பிணிகளின் அத்தகைய ஆசைகளில் இனிப்புகளும் ஒன்று. ஆதலின் எங்களுடைய ருசியான, தூய்மையான இனிப்புப் பண்டங்களை வாங்கி கர்ப்பிணிகளுக்கு கொடுங்கள்.



கல்யாண வைபவங்களுக்கு! சீர் முறுக்கு, சீர் முள்ளுத் தேன்குழல், சீர் அதிரசம், தேன்குழல், அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்து தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு.
காந்தி நகர், அடையாறு,
சென்னை-600 020.
போன்: 412557

நியாயம் அற்ற வார்த்தை கூறுகிறாய்! போனால் போகட்டும்! நான் தஞ்சைக்கு அவசரமாகப் போகவேண்டும்! சீக்கிரம் சொல்! நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்? தனியாக ஏன் வந்தாய்? ஓட்டுக் கூரைமேல் மிதந்து வந்தாயாமே? இந்தப் பெண் இங்கே எதற்காக வந்தாள்? எப்படி இத்தகைய பிராணாபத்தில் சிக்கிக் கொண்டாள்?...''

''நான் ஒருத்தி இங்கே நின்று கொண்டிருப்பது தங்களுக்கு ஞாபகம் வந்தது பற்றிச் சந்தோஷம். ஒரு நிமிஷம் தனியாகப் பேச அவகாசம் கொடுத்தால் நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டுப் போயே போய் விடுவேன்!'' என்றாள் பூங்குழலி.

இந்த இரண்டு பெண்களும் அச்சமயம் இளவரசரின் முன்னால் நேருக்கு நேர் நின்ற போது, எப்படியோ அவர்களுக்கு அசாதாரண தைரியமும் வாசாலகமும் ஏற்பட்டிருந்தன.

''சமுத்திர குமாரி! உன்னை மறந்து விட்டேன் என்றா நினைத்தாய்? அது எப்படி முடியும்? நீதான் நான் கூப்பிடக் கூப்பிட, நின்றுகூடப் பதில் சொல்லாமல் படகைச் செலுத்திக் கொண்டு வந்தாய்! அப்படி அவசரமாக வந்தவள் மரக் கிளைக்கும் முதலையின் திறந்த வாய்க்கும் நடுவில் நின்று ஊஞ்சலாடிக் கொண்டிருந்ததை என் ஆயுள் உள்ளளவும் மறக்க முடியாது!'' என்று சொல்லி விட்டு இளவரசர் சிரித்தார்.

''உன்னைத் தூக்கமுடியாமல் தூக்கிப் பிடித்துக் கொண்டு வானதி பட்டுக் கொண்டிருந்த அவஸ்தையையும் நான் மறக்க முடியாது. ஆனால் நீங்கள் இருவரும் இங்கே எப்படி வந்து சேர்ந்தீர்கள்? எதற்காக? யாராவது ஒருவர் சீக்கிரம் சொல்லுங்கள்!''

''பொன்னியின் செல்வ! நானும் தங்கள் திருத்தமக்கையாரும் தங்களை வழியில் கண்டு நிறுத்தித் தஞ்சாவூருக்குப் போவதைத் தடை செய்வதற்காக வந்தோம். தாங்கள் தற்சமயம் தஞ்சாவூர் வந்தால், அங்கே பெரிய யுத்தம் மூளும் என்று இளைய பிராட்டி அஞ்சுகிறார். அதற்கு முன்னால் தங்களைச் சந்தித்துப் பேச விரும்புகிறார்.....''

''இளையபிராட்டி இப்போது எங்கே?''

''குடந்தையில் இருக்கிறார்...''

''நீமட்டும் எப்படி இங்கே வந்தாய்?''

''வழியில் குடந்தை ஜோதிடர் வீட்டில் நானும் இளைய பிராட்டியும் சிறிது நேரம் தங்கினோம். அந்தச் சமயத்தில் காவேரி கரையை உடைத்துக் கொண்டு வந்து ஜோதிடர் வீட்டையே அடித்துக் கொண்டு வந்து விட்டது. இளவரசே! காவேரித் தாய் தங்களைக் குழந்தைப் பிராயத்தில் காப்பாற்றியதாகச் சொல்கிறார்கள். தங்களுக்கு இந்தப் பொன்னி நதியின் பேரில் எவ்வளவோ ஆசை உண்டு என்பதையும் அறிவேன். ஆனால் இன்று இந்த நதியினால் நாடு நகரங்களும் மக்கள் மிருகங்களும் பட்ட கஷ்டத்தை நினைப்பதற்கே பயங்கரமாயிருக்கிறது. காவேரித் தாய் மிகக் கொடுமையானவள் என்று சொல்லத் தோன்றுகிறது.....''

''வானதி! காவேரி அன்னையின் பேரில் அப்படிப் பழி சொல்லாதே! இந்த மாதரசிக்கு எங்கள் சோழ நாட்டின் பேரில் அவ்வளவு ஆசை. அந்த ஆசை வரம்பு மீறிப் போகும்போது கரையை உடைத்துக் கொண்டு கிளம்பி விடுகிறாள். இதை அறியாதவர்கள் அன்னையின் பேரில் வீண் பழி சொல்லுகிறார்கள்! ஏன்? கரையை மீறிக் கொண்டு வருவதற்காகச் சமுத்திர ராஜன் பேரில் கூடச் சிலர் குறை சொல்லுகிறார்கள். ஆனால் பூங்குழலி அப்படிக் கடலரசன் பேரில் குறை சொல்லமாட்டாள்!'' என்றார் இளவரசர்.

''மன்னியுங்கள்! நானும் இனிக் காவேரி அன்னையின் பேரில் குற்றம் சொல்லவில்லை. நானும் தங்கள் தமக்கையும் குடந்தை ஜோதிடர் வீட்டில் இருந்தபோது திடீரென்று காவேரியின் ஆசை பொங்கிப் பெருகி விட்டது. தங்கள் தமக்கை முதலியவர்கள் ஓடிப் போய்க் கோவில் மண்டபத்தின் பேரில் ஏறிக் கொண்டார்கள். நான் என் அசட்டுத்தனத்தினால் மண்டபத்தின் பேரில் ஏறத் தவறிவிட்டேன். ஜோதிடர் வீட்டு ஓட்டுக் கூரையைப் பிடித்துக் கொண்டு மிதந்து வந்தேன்...''

''உன்னைக் காப்பாற்றுவதற்காகப் பூங்குழலி படகில் ஏறிக்கொண்டு வந்தாளாக்கும். அழகாய்த்தானிருக்கிறது! உங்கள் இருவரையும் சேர்த்து இந்தக் கஜேந்திரன் காப்பாற்ற வேண்டியதாயிற்று. இந்த யானையின் அறிவே அறிவு! உங்கள் இருவரையும் அதன் துதிக்கையில் பூமாலையை எடுப்பது போல் அசங்காமல் கசங்காமல் எடுத்துச் சற்று முன் கரையில் விட்டது! இன்று காலையில் இதே யானை கையில் அங்குசத்துடன் நேரங் கழித்து ஓடி வந்த யானைப் பாகனைத் தூக்கிச் சுழற்றி வெகு தூரத்தில் போய் விழும்படி எறிந்தது! அவன் உயிர் பிழைத்திருப்பதே துர்லபம்!''

''ஐயோ! அது என்ன? நானே தங்களிடத்தில் அதைப் பற்றிக் கேட்க வேண்டும் என்றிருந்தேன்.....''

''என்னை நீ என்ன கேட்க வேண்டுமென்றிருந்தாய்?''

''யானைப் பாகனாலும் அங்குசத்தினாலும் தங்களுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்ததா என்று கேட்க விரும்பினேன்.''

''தீங்கு நேர இருந்தது என்பது உண்மைதான்; அது உனக்கு எப்படித் தெரிந்தது? ஜோதிடர் சொன்னாரா, என்ன? அந்தப்



ஜேசுதாஸின் பெரிய மனம்



அண்மையில் மதுரை சென்றிருந்த போது நீரஜாவைச் சந்தித்தேன். ஜேசுதாஸ் பாடி அவரே வெளியிட்ட ஐயப்ப பக்திப் பாடல் காஸெட் ஒன்றைத் தந்தார். அதில் இவரது படத்துடன், "பாடல்கள்: நீரஜா" என்று குறிப்பிட்டிருந்ததைக் கண்டு அசந்து போனேன். என் திகைப்பின் காரணத்தை உணர்ந்து நீரஜா சொன்னார்:

"பாருங்கள், என் படமும் பெயரும் பெரிசாக வந்திருக்கின்றன. கீழே ஜேசுதாஸ் பெயர் சின்னதாக. இதைப் பார்த்ததும் பிரஸ்காரர் செய்த கோளாறோ என்று நினைத்து ஓடிப் போய், 'ஏன் இப்படிச் செய்து விட்டீர்கள்?' என்று கேட்டேன்.

"பிரஸ்காரர் சொன்னார்: 'இப்படிப் போடச் சொன்னதே ஜேசுதாஸ் சார்தான். நான் வளர்ந்து விட்டவன். நீரஜா வளர வேண்டியவர். அவர் படம், பெயர் எல்லாம் பெரியதாய்ப் போடுங்கள்.' என்றார்."

இப்படியொரு பெரிய மனசு இருக்க முடியுமா? நெகிழ்ந்து போய்விட்டேன்.

— பி. எஸ். எஸ்.

பித்து இளையபிராட்டிக்கு இன்னும் போகவில்லையா?"

"ஜோதிடர் சொல்லவில்லை! சொன்னாலும் நாங்கள் நம்பியிருக்கமாட்டோம். பெரிய பழுவேட்டரையர் சொன்னார்!"

"என்ன? என்ன? யார் சொன்னார்?"

"ஆம். இளவரசே! தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர்தான் சொன்னார். நாங்கள் ஜோதிடர் வீட்டில் இருந்தபோது திடும் பிரவேசமாக அவர் உள்ளே நுழைந்து வந்தார். தங்களுக்கு வரக் கூடிய ஆபத்தைப் பற்றிச் சொன்னார். விஷந் தடவிய அங்குசத்தைப் பற்றியும் சொன்னார்.....!"

"ஆகா! இது பெரிய அதிசயந்தான்! அவருக்கு எவ்விதம் தெரிந்தது? அவரும் ஜோதிடர் ஆகிவிட்டாரா? அல்லது ஒரு வேளை... எல்லாரும் சொல்லுவது போல் அவரே இந்த ஏற்பாடு செய்தாரா?"

"இல்லை, இளவரசே! அவர் செய்த ஏற்பாடல்ல. பாண்டிய நாட்டுச் சதிகாரர்கள் இரகசியமாகப் பேசிக் கொண்டிருந்ததை ஒட்டுக் கேட்டதினால் அறிந்து கொண்டாராம்.....!"

"ஓகோ! இன்னும் ஏதாவது அவர் சொன்னாரா?"

"நினைப்பதற்கும் சொல்வதற்கும் பயங்கரமாயிருக்கிறது. தங்களையும் தங்கள் தந்தையையும் மூத்த இளவரசரான ஆதித்த கரிகாலரையும் ஒரே நாளில் யமனுலகம் அனுப்ப அந்தச் சதிகாரர்கள் திட்டமிட்டிருப்பதாகச் சொன்னார். அவர் ஆதித்த கரிகாலரைக் காப்பாற்றுவதற்காகக் கடம்பூருக்கு விரைந்து போய் விட்டார். தங்களுக்கும் சக்கரவர்த்திக்கும் இளைய பிராட்டி எச்சரிக்கை செய்ய வேண்டும் என்பதாகச் சொல்லிவிட்டுப் போனார்......"

"ஆகா! அவருடைய எச்சரிக்கை என் ஒருவன் விஷயத்தில் உண்மையாயிருந்தபடியால் மற்றவர்கள் விஷயத்திலும் உண்மையாகத்தானிருக்க வேண்டும்!... சமுத்திர குமாரி! நீ ஏதோ சொல்ல வேண்டும் என்றாயே?"

"ஆம், இளவரசே! ஈழத்து ஊமை ராணி தங்களை உடனே தஞ்சைக்கு அழைத்து வரும்படி என்னை அனுப்பி வைத்தார்......"

"ஆகா! அதைப் பற்றி உன்னிடம் கேட்க மறந்தே போனேன். ஈழத்து ராணிக்காகவே நான் இவ்வளவு அவசரமாகப் புறப்பட்டு வந்தேன். அவரைத் தஞ்சாவூருக்கு யாரோ பலவந்தமாகக் கட்டி இழுத்து வந்தார்களாமே? அது உண்மையா?"

"உண்மைதான், ஐயா! ஆனால் முதன் மந்திரி அநிருத்தர் நல்ல நோக்கத்துடனேதான் அவ்விதம் செய்தார்..."

"ஓகோ! அநிருத்தர் வேலையா? என் தந்தையிடம் சேர்ப்பிப்பதற்காக அழைத்துச் சென்றிருக்க வேண்டும். பூங்குழலி! முதன் மந்திரியின் நோக்கம் வெற்றி பெற்றதா? அவர்கள்... சக்கரவர்த்தியும் ஈழத்து ராணியும் சந்தித்தார்களா?"

"ஆம், சந்தித்தார்கள்!"

"என் வாழ்க்கை மனோரதம் நிறைவேறி விட்டது. இதைக் காட்டிலும் சந்தோஷமான செய்தி எனக்கு வேறு எதுவும் இல்லை. என் பெரியன்னை அருகில் இருக்கும் வரையில் என் தந்தையின் உயிருக்கு அபாயமும் இல்லை. அந்த மாதரசிக்கு அபூர்வமான வருங்கால திருஷ்டி உண்டு என்பது உனக்குத் தெரியுமே, பூங்குழலி!"


"ஆம், எனக்கு அது தெரியும்! ஈழத்து ராணி இருக்கும் வரையில் சக்கரவர்த்திக்கு அபாயம் இல்லை. ஆனால்...!"

"ஆனால் என்ன? ஏன் தயங்கி நிற்கிறாய், சமுத்திர குமாரி!"

"சொல்லத் தயக்கமாகவே இருக்கிறது. நா எழவில்லை. ஈழத்து ராணி தம்முடைய இறுதிக் காலம் நெருங்கி விட்டதாக எண்ணுகிறார். கடைசியாகக் கண் மூடுவதற்கு முன்னால் தங்களை ஒரு முறை பார்க்க விரும்புகிறார்!" என்றாள்.

"தெய்வமே! இது என்ன சொல்லுகிறாய்? சந்தோஷமான செய்தியைச் சொல்லி விட்டு உடனே இந்தப் பேரிடி போன்ற செய்தியையும் சொல்லுகிறாயே! இனி நான் ஒரு கணமும் தாமதிப்பதற்கில்லை, வானதி! இளைய பிராட்டியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாகச் சொல்லு!" என்றார் இளவரசர் அருள்மொழி வர்மர்.

(தொடரும்)



கவிஞரின்
நெஞ்சக் கற்பனை
காகித மீது;
டிசைன் கலைஞரின்
நெசவுக கற்பனை
நிகரிலா நேர்த்திப்
பருத்தித்
துணிமீது.
பருத்தி
பேண்ட்டீஸ்
மாதர் ஜட்டி
படைப்பு:விஜபி
Avenues HH 867 81

ஒற்றை மாட்டு வண்டியில் ஓர் அருமையான இயக்கம்!

"வாராங்க... வாராங்க, காந்தி மன்றத்துக்காரங்க வாராங்க! ஒற்றை மாட்டு வண்டியிலே... வளர்ப்பட்ட இளைஞர் கும்பலோட வாராங்க...! கடையிலே தொங்குறது அவுக கண்ணுலே படாம விழிச்சிருங்க...." பொள்ளாச்சியில் உள்ள வாரப்புத்தகக் கடைகளில் உள்ள பையன்கள் அவ்வப்போது பயக்குரலில் முணுமுணுக்கும் வாசகம் இது.



* செப்பனிடக் காத்திருக்கும் சாலை.

முணுமுணுப்புக்குக் காரணம் — வக்கீல் ரங்கநாதன்! ஆனைமலை என்ற கிராமத்தில் காந்திய மன்றம் நிறுவி, அதன் மூலம் காந்தியக் கொள்கைகளைப் பரப்பி வருகின்றார். அத்துடன் ஓர் ஒற்றை மாட்டு வண்டியும் வைத்துள்ளார். கல்லூரி மாணவர்கள் சிலருடன் சென்று, கடைகளில் உள்ள ஆபாசப் புத்தகங்கள் மற்றும் வார இதழ்களில் வருகின்ற ஆபாசப் படங்களை எல்லாம் 'தீ'க்குத் தின்னக் கொடுக்கின்றார். ஆபாசப் புத்தகங்களால் ஏற்படும் தீமைகளையும் மனப்பாதிப்புகளையும் தெருத் தெருவாகச் சென்று விளக்கிக் கூறி நடு ரோட்டில் அந்தப் புத்தகங்களையெல்லாம் எரித்து விடுகின்றார்கள் காந்தி மன்ற இளைஞர்கள்.

மிக எளிமையாகக் கதர் உடுத்தி, நம்முடன் பேசிக் கொண்டிருந்த வக்கீல் ரங்கநாதனைச் சுற்றிப் பத்துப் பதினைந்து சிறு குழந்தைகள் 'அண்ணா அண்ணா'' என்று வளைய வந்தன.

''இந்தக் குழந்தைங்க எல்லாம் ஆதரவு இல்லாதவங்க. காந்தி மன்றத்தின் பாதுகாப்பில் வளர்க்கின்றோம். மொத்தம் இருபதுக்கு மேற்பட்டக் குழந்தைகள் இருக்கின்றனர். பக்கத்துப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டிருக்கின்றோம். இது தவிர தொழு நோயாளிங்க சிலருக்குச் சாப்பாடு, மருத்துவச் செலவுக்கும் உதவிட்டு வர்றோம்'' என்றார்.

''நிதிக்கு என்ன பண்றீங்க....?''



* ஒற்றை மாட்டு வண்டியுடன் ரங்கநாதன்.

"ஆரம்பத்துல ஹைதராபாத் காந்தி பீஸ் சென்டர்லெ இருந்து 'கிராண்ட்' வாங்கிச் செய்தோம். ஆனால் அது எனக்குத் தப்பிதமாகப் பட்டது. அடுத்த இடத்துல பணம் வாங்கிப் பண்றது பெரிய சேவையா சார்? அதனால நாங்க யாரிடமும் பணம் வாங்குவதில்லை. ஆனால் பிரியப்பட்டுக் கொடுக்க முன்வந்தால் அரிசி, பருப்பு, இப்படிச் சமையல் சாமான்களா வாங்கிக்கிடுவோம். இதற்குப் பொள்ளாச்சி ந.மா. கல்லூரி மாணவ, மாணவியர் மிகவும் உதவிகரமாக இருக்கின்றார்கள்" என்று பெருமிதத்துடன் கூறினார் ரங்கநாதன்.



கவிஞர் 'ஈரம்' *

நான்கு கிராமத்துப் பெண்கள் கூடினால் பக்கத்துவீட்டுப் புரளியும், அடுப்புச் சமையலுக்கு அடுத்தவீட்டுக் கோழியும் அறுப்புக்கு ஆள் தேடுவதுமாகத்தான் பேச்சு இருக்கும் என்பதை உடைத்தெறிந்து விட்டு, முடியாதவர்களைக் கரையேற்ற வீதியிறங்கிக் கை நீட்டுகின்றார்கள் ஆனைமலை சாரதா மகளிர் மன்றத்தினர். "ராகி, சோளம், கம்பு, கோதுமை ஆகியவற்றைக் கொண்டு ஒரு சத்துணவு தயாரித்து ஏழைக் குழந்தைகளுக்குத் தினசரி வழங்கி வருகின்றோம். பிரசவம் ஆன தாய்மார்களுக்குச் சில மாதங்களுக்கு இலவசமாகப் பால் வழங்கி வருகின்றோம். மற்றபடி இந்தப் பகுதியில் உள்ள குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் இலவசமாக மருந்து மாத்திரைகள் வாங்கிக் கொடுத்து உதவுகின்றோம். எத்தனை உதவமுடியுமோ அத்தனையும் செய்து வருகின்றோம்," என்று கூறுகின்றார்கள் சாரதா மகளிர் மன்றத்தினரான கலாவும் ராதாவும்.

எந்த விதமான பெயர்ப் பலகையோ விளம்பரமோ இல்லாது, இயல்பாய்ச் செயல்பட்டு வருகின்றது சாரதா மகளிர் மன்றம்.

ஆனைமலை கிராமத்திலிருந்து சுமார் ஆயிரம் அடி உயரத்தில் விலங்குகளின் சரணாலயம் — டாப்ஸ்லிப்! அது ஒரு சுற்றுலா மையம் என்றாலும் காட்டின் இயற்கைத் தன்மை கெடாமல் உள்ளது. காற்றில் அசைகின்ற மரங்களின் முனகலும் வெகு தூரத்தில் விலங்குகளின் கூவலும் தவிர மற்றபடி மகா



* எருமைப்பாறை ஆதிவாசிகள்.

அமைதி! மரங்களின் மீது முட்டி மோதி வரும் ஈரம் பூசிய இளம் காற்றும் கண்களுக்குக் கவசமிடுகின்ற பசுமையும் மனத்திற்கு இனிமையாக இருக்கின்றன!

சுமார் நூற்றி முப்பத்தி இரண்டு ரகப் பறவைகள் பறக்கின்றன, யானை, புலி, சிறுத்தை, மான், கடாமான், புள்ளிமான், பாம்பு வகையறாக்கள் எல்லாம் மானாவாரியாகத் திரிகின்றன என்றார்கள். நாம் பார்க்கப் போன போது ஒரு மாடு மட்டும் தான் சுவாரசியமாக மேய்ந்து கொண்டிருந்தது!

"காலையிலெ இந்தரை மணிக்கெல்லாம் வந்திடணும் அப்பத்தான் விலங்குகளைப் பார்க்க முடியும். இல்லை மாலை ஆறு மணிக்கு வரவேண்டும்'' என்றார் வன அதிகாரி ஒருவர். ஆனால் பஸ் வசதி மிகவும் குறைவு. காலையில் ஒரு பஸ்; விட்டால் மாலையில் ஒரு பஸ். அவ்வளவே! சொந்தமாகக் கார் எடுத்துப் போகின்றவர்கள் தான் அனுபவிக்க முடியுமோ? அல்லது ஒரு நாள் தங்கும் உத்தேசத்துடன் செல்ல வேண்டும். (தங்கும் விடுதி வசதி உண்டு)

சற்றுத் துணிந்த ஆசாமிகளைக் கூடப் பாதுகாப்பான 'கைடு' இல்லாமல் சரணாலயத்தின் உள்ளே செல்ல அ னு ம தி ப் ப தில்லை. விலங்குகளுக்குச் செயற்கை உணவும் கொடுக்கின்றார்கள். ஆழமாகக் குழி பறித்து அதில் உப்பை நிரப்பி மூடி விடுகின்றார்கள். உப்பைக் குழி தோண்டித் தின்பதற்கு யானைகளும் மான்களும் ஆலாய்ப் பறக்கின்றனவாம். பாம்பேயிலிருந்து இதற்காக உப்பு மூட்டைகள் வரவழைக்கப் படுகின்றன!

டாப் ஸ்லிப்பில் உள்ளே தள்ளிச் சென்றால் 'எருமைப் பாறை என்ற இடம்! இந்தப் பகுதிகளில் ஆதிவாசிகள் கணிசமாக வசிக்கின்றார்கள். காமிராவும் கையுமாகச் சென்ற நம்மை ஆதிவாசிகள் சூழ்ந்து விட்டார்கள். ''யோவ், சாமியோவ்....! நாங்க பாவப்பட்டவங்க! என்ற பொழப்பு நாசம் — சீக்கு பாக்க நாதியில்லை... காட்டைத் தோண்டிக் கஞ்சி குடிக்கிறோம்.." என்று நெஞ்சுக் கூடு மேலும் கீ ழு ம் அலையப் பேசினார்கள். இவர்களுக்கு மருத்துவ வசதியே இல்லை என்பது தான் பரிதாபமான செய்தி!

பொள்ளாச்சி நகரை இரண்டு நாட்கள் முழுக்க வலம் வந்த போது ஒரு விஷயம் தெளிவாயிற்று. பாளம் பாளமாய்த் தோலுரிந்து கிடக்கின்ற தார்ச் சாலைகளைச் செப்பனிடுவதும், சில பகுதிகளில் குடிநீர் தாகத்தைத் தீர்த்து வைப்பதும் உடனடியாகச் செய்ய வேண்டியவை. இதற்கு நகராட்சியினர் என்ன முயற்சிகள் எடுத்துள்ளார்கள் என்று நகரசபைத் துணைத் தலைவர் வி. எஸ். மணியிடம் கேட்டோம்.

''ஒரு விஷயத்தை முதல்ல தெளிவு படுத்திடுறேங்க. நகராட்சியில போதுமான பண வசதி இல்லை. முடிஞ்ச மட்டும் பண்ணிட்டு வர்றோம். மோசமான சாலைகளைச் செப்பனிட்டு வர்றோம். நீங்க கூட வர்ற வழியில பார்த்திருப்பீங்களே? (''ஆமாம் பார்த்தோம்'') ஆச்சுங்களா! அடுத்துக் குடி தண்ணீர்ப் பிரச்னை சொன்னீங்க இல்ல! அம்ராம்பாளையம் என்ற ஊரிலிருந்து ஓவர் டாங் கட்டித் தண்ணீர் கொண்டு வருவதற்கு 3 கோடியே 60 லட்ச ரூபாய் செலவில் மூன்றாவது திட்டம் போட்டுள்ளோம். விரைவில் செயல் படுத்தி விடுவோம். அது வரை தண்ணீர் இல்லாத பகுதிகளுக்கு ஐந்து லாரிகள் மூலம் தண்ணீர் சப்ளை செய்திட்டு வர்றோம்'' என்று கூறினார்.

துணைத் தலைவர் இவ்வாறு தமது தரப்பு நியாயத்தை எடுத்துச் சொன்னாலும் மாரிமுத்து போன்ற நகர மன்ற உறுப்பினர்கள் சிலர் இன்றைய நகரசபைத் தலைவரின் நிர்வாகம் 'கோமாளித்தனமானது' என்று கொதிக்கிறார்கள். லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களையும் தாராளமாக அள்ளி விடுகிறார்கள். இவை பெரும்பாலும் தண்ணீர்ப் பற்றாக்குறையின் அடிப்படையில் எழுவது தான். எனவே 'தமிழகத்தின் குடிநீர் பிரச்னையைத் துரிதமாகத் தீர்த்து வைப்பேன்'

* சாரதா மகளிர் மன்ற உறுப்பினர்கள் ராதா, கலா.



* சப் கலெக்டர் நிரஞ்சன் மார்டி.



* நகரசபைத் துணைத் தலைவர் வி. எஸ். மணி.



என்ற முதல்வரின் வாக்குறுதி நிறைவேறினால்தான் பொள்ளாச்சிக்கு மட்டுமென்ன, எல்லா ஊருக்குமே விமோசனம்! அதுவரை காலைப்பிடி மென்னியைப்பிடி கதைதான்!

சண்டை மற்றும் சந்தை தவிர வேறு ஒரு சிறப்பும் (!) பொள்ளாச்சி நகருக்கு உண்டு தெரியுமா? ''அது என்ன சிறப்பு!'' என்று நீங்கள் புருவத்தை உயர்த்திக் கேட்பது தெரிகின்றது சரி சொல்லி விடுகின்றோம். காந்தி சிலையைச் சுற்றிலும் ஊர்ப்பட்ட மதுக்கடைகள்! ஆச்சுங்களா! இந்த இடத்தில் பொள்ளாச்சி சப்-கலெக்டர் நிரஞ்சன் மார்டி பற்றி இரண்டு வரிகள் சொல்லி விடுவது உத்தமம். சப்-கலெக்டர் வளாகத்தில் இருந்த ஆபீஸர்ஸ் கிளப்பில் 'பலான விஷயங்கள்' நடந்து கொண்டிருந்ததாகப் புகார் வந்ததன் பேரில் மகா துணிவாய் அதை இழுத்து மூடி சீல் போட்டு விட்டுப் பொள்ளாச்சி பொது மக்களின் மனசில் நாற்காலி போட்டு உயர்வாய் உட்கார்ந்திருக்கின்றார்.

நாற்காலி என்றவுடன் தான் ஒரு விஷயம் ஞாபகம் வருகின்றது. நகராட்சி பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் நாற்காலி... டேபிள்..... பெஞ்சு,கூரை... போன்ற அடிப்படை வசதிகளே இல்லை! முன்பு கல்கியில் எழுதிய அதே நிலையில்தான் இன்னமும் இருக்கின்றது. இந்தப் பரிதாபமான நிலையிலும் பள்ளிக் கூடம் நல்ல ரிசல்ட் வாங்கிக் கொண்டே வருகின்றது என்பதுதான் ஆறுதலான செய்தி!

பொள்ளாச்சி ந. மா. கல்லூரியில் கடந்த முப்பது ஆண்டுகளாக இலக்கியச் சேவை புரிந்து வருகின்றார் கவிஞர் சிற்பி! கவிதை எழுதும் முறை பற்றியும் மரபுக் கவிதைகள் எழுதுவதற்கு இலக்கணத்தையும் மாணவர்களுக்குத் தனியாகப் பாடமாய்க் கற்றுக் கொடுக்கின்றார். மாணவர்களை ஊக்கப் படுத்தும் வகையில் அவர்கள் எழுதிய சிறப்பான கவிதைகளை 'அன்னம் பதிப்பகத்தின் மூலம் நூல் வடிவில் வெளியிட்டு உதவி வருகின்றார். இது தவிர, பொள்ளாச்சி இலக்கியக் கழகத்தின் செயலாளராகவும் இருந்து வருகிறார் வானம் பாடிகளுள் ஒருவரான கவிஞர் 'சிற்பி' பாலசுப்பிரமணியம்!

கவிஞரைச் சந்தித்து விட்டு, கல்லூரியை விட்டு வெளியே வருகையில் ஒரு விஷயம் மட்டும் தெளிவாயிற்று. பொள்ளாச்சி நகருக்கு நெற்றிப் பொட்டாய் இருப்பது 'பொள்ளாச்சி மகாலிங்கத்தின் பெயர்தான்'. ஒவ்வொரு நல்ல காரியத்திற்குப் பின்னாலும் அவரின் பெயர் அடக்கமாகக் கை கட்டி நிற்கின்றது!

— பாரதிபாலன்

படங்கள்: ஸ்ரீஹரி



அருள்வாக்கு

'ஸுமநஸ்' என்றால் நேர் அர்த்தம் நல்லமனம். நல்ல மனவிசேஷம்தான் தேவ சக்தி. துஷ்ட மனஸ்தான் அஸுர சக்தி. புஷ்பத்துக்கும் ஸுமநஸ் என்று பேர் உண்டு. ஒரு செடி அல்லது கொடியின் நல்ல மனம் மாதிரி இருப்பது அதன் புஷ்பம்.நல்ல மனஸுக்கு அடையாளம் என்ன? அதில் அன்பு ஊறிக் கொண்டிருப்பதுதான். இம்மாதிரி ஒரு செடியிலோ, கொடியிலோ மாதுர்யத்தின் ஸாரமான தேன் ஊறிக் கொண்டிருப்பது அதன் புஷ்பத்தில்தானே? அதன் பழத்தை விடவும் தித்திப்பு தேன்தான். கசப்பாகக் கசக்கும் காய், பழம் கொண்ட தாவர வகைகள் எத்தனையோ உண்டு. ஆனால் அவற்றிலும் புஷ்பத்திலே ஊறுகிற தேன் கசப்பாக இருப்பதாக எங்குமே கிடையாது. ஒரு செடி அல்லது கொடியில் பார்க்கவும் ரொம்ப அழகானது, ஸ்பர்சத்துக்கும் ரொம்ப மென்மையானது, வாசனையும் அதிகம் கொண்டது, எல்லாவற்றுக்கும் மேலாக அதனுடைய பரம மாதுர்ய ஸாரத்தைத் தருவது அதன் புஷ்பந்தான். இப்படிச் சொன்னதால் ஐம்புலன்களில் கண், சர்மம், மூக்கு, நாக்கு ஆகிய நான்குக்கும் ஒரு புஷ்பம் இன்பம் ஊட்டுவதாகத் தெரிகிறது. கண்ணுக்கு ரொம்பவும் அழகான ரூபம் பூவுக்கு இருக்கிறது. சர்மத்துக்கு ஸுகமாக அதன் மார்தவம் (ம்ருதுத் தன்மை). மூக்குக்கு நல்ல ஸுகந்தம். நாக்குக்கு ருசியான தேன். பாக்கி இருப்பது காது. அந்தக் காதுக்கு இன்பமான வண்டுகளின் ரீங்காரத்தையும் ஒரு புஷ்பம் தன் தேனைக் கொண்டு வரவழைத்து விடுகிறது.

ஸுமநஸ் என்றால் அழகானது என்றும் அர்த்தம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

இரண்டாவது சூரியன்

4

குக்கரில் அரிசி களைந்து போட்டு, அழுத்தி மூடி, காஸ் ஸ்டவ் பற்ற வைத்து நீலச்சுடர் நடுவே வைத்த போது மணி பார்த்துக் கொண்டாள். பருப்பு தனியே கொதிக்க வைத்து ரசத்துக்கு ஏற்பாடு செய்தால் இன்று வெறும் ரசம் சாதம் போதும். அப்பளம் சுட்டுக் கொள்ளலாம்.

நாளையிலிருந்து இன்னும் சீராகச் செயல்பட வேண்டும்.

''நான் வேணா கொஞ்ச நாள் உன்னோட வந்து இருக்கட்டுமா?'' — அப்பா தாழ்ந்த குரலில் கேட்ட போது சரி என்று சொல்லி விடலாம் என்று தோன்றியது. ஆனால் அப்பாவும் ஜாக்கிரதையாகக் கொஞ்ச நாள் என்று பேசுகிறார். கொஞ்ச நாள் என்றால் ஒரு வாரமா ஒரு மாதமா... பிறகு தனியாகத்தானே இருக்க வேண்டும். ஆரம்ப முதலே தனியாக இருந்தால் போயிற்று.

யார் துணை அவசியம்...? எதற்குத் துணை வேண்டும்?

வீடு பெருக்கும் போது குழந்தைகள் தங்கள் புத்தகங்களை மர அலமாரியில் அடுக்கிக் கொண்டிருந்தார்கள்.

பிள்ளை ராஜேந்திரன் சட்டென்று திரும்பிக் கேட்டான்.

''ஏம்மா இனிமே நாங்க இங்கேதானே இருக்கப் போறோம்?''

''ஆமாம்டி கண்ணா.''

''இங்கேயே இருந்துடலாம்மா. யார் வீட்டுக்கும் போகாதே.''

''ஏன் ராசு?''

''யார் எனக்கு ஃப்ரண்ட்ஸ்னே தெரியலை. அந்த வீட்டுக்கிட்டே இருக்கிற பசங்க, இந்த வீட்டுக்கிட்டே இருக்கிற பசங்க இரண்டு குரூப்புமே என்னை எதுலயும் சேர்க்க மாட்டேங்கறாங்க.''

''இனிமே இங்கதான். இந்த க்ரூப் பசங்களோட விளையாடு.''

அவனுக்குள்ள பிரச்னையே அவளுக்கும் இருந்தது. இந்த வீட்டின் இடது பக்கம் மூன்றடுக்கு ஃப்ளாட் இருந்தது. வலது பக்கம் தேவகோட்டை லேவாதேவிக்காரர் பங்களா இருந்தது. நேர் பின்பக்கம் மதிலுக்குப் பிறகு ஒரு முட்டுத் தெரு இருந்தது. எதிரே இரண்டு லாரி போகக்கூடிய அகலமான தெரு. அவளைப் பொறுத்தவரை இதுவரை சுற்றியிருப்பவை எல்லாம் கட்டடங்கள்தான். இனிமேல்தான் மனிதர்களோடு பழக வேண்டும். பேச வேண்டும்.

எவ்விதம் பேச முடியும் என்று தோன்றவில்லை. பேசிப் பழகுவது அவசியமா என்று தெரியவில்லை. அடுக்குமாடி வாசலில் பிற்பகல் வெற்றிலை வாயும் தவிட்டுச் சிவப்புமாய் மூன்று நான்கு பெண்கள் நிற்கிறார்கள். கடந்து போகும் வரை திரும்பிப் பார்க்கிறார்கள். எல்லார் முகத்திலும் ஒரு பூரிப்பு இருக்கிறது. கர்வப்பட்டுக் கர்வப்பட்டு வந்த பூரிப்பு அது. கர்வப்பட நிறைய விஷயங்கள் வைத்திருப்பார்கள் என்று தோன்றிற்று. பட்டுப் புடைவை, வைரத் தோடு, வீடியோ, கலர் டீவி, புருஷன் என்று நிறைய கம்பீரப்பட்டுக் கொள்ள முடியும். கம்பீரம் என்பது ஒரு பறையறிவிப்பு. எக்காளம். 'வழி விடு, வழி விடு' என்கிற அதட்டல். உங்க பெயர் என்ன மேடம்? விமலா சுரேஷ்குமார். நான் உங்கள் பெயர் தானே கேட்டேன். யார் அது சுரேஷ்குமார்? என் புருஷன். உங்கள் புருஷன் பெயரென்ன? சுரேஷ் குமார். ஏன் சுரேஷ் குமார் விமலா என்று சொல்லவில்லை. உனக்கு மட்டும் அவன் கம்பீரம் அவனுக்கு நீ கம்பீரமில்லையா? ஆக உன் கம்பீரம் ஒரு தலைபட்சம். உன் முயற்சியா கலர் டீவி? உன் உழைப்பா பட்டுப் புடைவை? உன் சம்பாதிப்பா உன் கணவன்?

'நான் எம்.எஸ்.ஸி. கெமிஸ்ட்ரி...' சட்டென்று பானுமதி யோசிப்பதை நிறுத்தினாள். தவறாக யோசிக்கிறேனோ? பொறாமைப்படுகிறேனா? வக்கீல் சொன்னது போல் சுயபரிதாபமோ?

நல்ல புருஷன் பூரிப்புத்தான். 'சரியான அசடு! நாலு



பேர் குடித்தனத்துக்கு இரண்டு கிலோ கத்தரிக்காயா வாங்குவா? ஈஸ்வரா!' — அவள் பொரும, அவன் விழிக்க, பூரிப்புத் தான்.

அவள் உழைப்புத்தான் இது. 'இதுக்குப் போய் அசடுன்னுல்ல நீ... எனக்குக் கத்தரிக்காய் கறி வேண்டாம்'— அவன் சிணுங்க, 'ஒரு விளையாட்டுக்குத்தானேப்பா... உங்களுக்குத் தெரியாதது நான் கத்துத் தர வேண்டாமா? சமர்த்து இல்லை. நான் பிசைஞ்சு போடறேன்...?' புருஷனை நெருங்கி, தலைமுடி கோதி, அவன் உடம்பெல்லாம் தொட விட்டு, கத்தரிக்காய் சாதம் ஊட்டுவது உழைப்புத்தான். அரைக் கிலோவை அவனுக்கே ஊட்டித் தீர்த்த அடிப்பது சாமர்த்தியம்தான்.

என்னிடம் இல்லையோ?

திருமணம் முடிந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு சாந்தி முகூர்த்த அறைக்குள் நுழைந்த போது போட்டோ ஆல்பம் பார்த்துக் கொண்டிருந்தான். தன் முகத்தைத் தானே வியந்து கொண்டிருந்தான். ''இந்த போட்டோல தலைவரு என் தோள்ல கை போட்டுக்கிட்டு இருக்காரு பார்த்தியா. நம்ம தமிழுக்கு அப்படியே சொக்கிடுவாரு. புலமைக் கதிரே வா. பொங்கும் கவிதை தான்னு ஒரு கவியரங்கத்துல கூப்பிட்டாரு. மத்த கவிஞனுங்க செத்துட்டானுங்க. அத்தினி உரிமையா அங்கு யாரையும் கூப்பிட்டதில்லை. கவியரங்கம் போயிருக்கியா?'' — ஆவலுடன் கேட்டான்.

இல்லையென்று சொன்னதும் சூம்பிப் போனான்.

''தமிழர்களே தமிழ்க் கவிதையைப் புறக்கணிப்பது தவறு.''

''வாய்ப்பு இல்லீங்க. இனிமே விடாது வருவேன்.''


''பார்த்துத்தான் கூட்டிக்கிட்டுப் போவனும். நமக்குச் சில எதிர் பார்ட்டி கவிஞருங்க உண்டு. பொண்டாட்டியைக் கூட்டிக்கிட்டுக் கவியரங்கத்துக்கு வந்தா கேலி பண்ணுவாங்க.''

''அவங்க வரமாட்டாங்களா அவங்க மனைவியைக் கூட்டிக்கிட்டு?''

''பாதி கவிஞனுக்குப் பொண்டாட்டி தற்குறி. 'த்தே இரண்டு காப்பி எடுத்தா'ன்னு தான் கூப்பிடறான்.''

''யாருங்க?''

பாலகுமாரன்



''பேர் என்னத்துக்கு... நீயே தெரிஞ்சுக்குவே. இதோ நிக்கறானே, இவனும் ஒரு கவிஞன். நமக்கு எதிரணி. எலுமிச்சம் பழம் கொண்டாந்து தரான் கல்யாணத்துல. இவன் கல்யாணத்துக்கு ஆறு புத்தகம் கொடுத்தேன்.''

''பாவம். காசு இல்லாத ஆளா இருக்கலாம்.''

''தரித்திரம்தான். ஆனா கில்லாடி. காலேஜ் பொண்ணுங்களைக் கவிதை எழுதித் தரேன்னு வளைச்சுப் போட்டுருக்கான்.''

''உங்களைத் தேடி காலேஜ் பொண்ணுங்க வராதா?''

''வரும். நான் அதிகம் வச்சுக்கற இல்லை.''

''வச்சுக்கறதில்லைன்னா...''

''என்னான்னா என்னன்னு அனுப்பிடுவேன். நமக்குன்னு ஒரு மதிப்பு இருக்கு. கெடுத்துக்கக் கூடாது. எப்பனா தண்ணி கூடப் போட்டுறலாம். லேடீஸ் தொடர்பு வச்சுக்கக் கூடாது.''

''தண்ணி போடுவீங்களா?''

''ஒரு தடவை போட்டேன். புடிக்கலை.''

''லவ் பண்ணதில்லையா?''

''இல்லை. ஏன் நீ பண்ணியிருக்கியா?'' சட்டென்று நிமிர்ந்து உறுத்துப் பார்த்தான். கண்ணில் பலத்த சந்தேகம், கலவரம் நின்றது.

''யப்பா... என்ன கோபம் வருது!



○○ கெட்ட பழக்கம் யாத்திரீகனைப் போல் வரும். பிறகு விருந்தாளியாக ஆகி, பின்னர், அதுவே முதலாளியாகி விடும்.

— அமெரிக்கப் பழமொழி.
— சுமதி மணி

இனிமேதான் லவ்வுன்னா என்னன்னே கத்துக்கணும்'' — பதில் சொல்ல, பார்வை தாழ்த்தி மறுபடி சுயநிலைக்கு வந்தான்.

''என்னை மாதிரி ஆளுக்கு ஒழுக்கமுள்ள மனைவி முக்கியம்.''

''ஏங்க?''

''பப்ளிக் ஃபிகர். உனக்குத் தெரியலை நான் யாருன்னு. அதனால ஏங்கன்னு கேட்டுட்டே. ஒரு கூட்டம் வந்து பாரு. சபைல நுழைஞ்ச உடனே எழுந்து நின்னு கை தட்டுவாங்க. அப்புறம் முக்கியமான விஷயம் மெல்லிசு டிரஸ் போடக் கூடாது. எனக்குப் பிடிக்காது. நாலு பேர் கேலி பண்ற மாதிரி நடந்துக்கக் கூடாது. யாரும் பார்க்க வந்தால் நீ வெளியே வராதே. வேலைக்காரப் பொண்ணை அனுப்பு. நான் கூப்பிட்டா வந்தால் போதும்.''

''ஏங்க வேலைக்குப் போகலாமா?''

''என்ன வேலை?''

''டீச்சர் வேலை. இல்லை... காலேஜ் புரொபசர்.''

''பார்க்கலாம். உடனே என்னா அதுக்கு? உனக்கு வேலைக்குப் போய்த்தான் ஆவணுமா?''

''கூட இரண்டாயிரம், மூவாயிரம் வருமே... எம்.எஸ்.ஸி. படிச்சுட்டு எதுக்கு வேஸ்டா?''

''அதுக்குத்தான் நான் வேகுளைத் தமிழ் படிங்க, வீட்ல உட்கார்ந்து கவிதை எழுதலாம். கட்டுரை எழுதலாம்ன்றது. இப்ப எம்.எஸ்.ஸி. கெமிஸ்ட்ரி படிச்சுட்டு வூட்ல உட்கார முடியலை பார்.''

ஆளுமை அதிகம் உள்ளவன். தன்னுடையது என்று இறுக்கிக் கொள்பவன் என்றுதான் முதலில் தோன்றியது.

தன் சுயபுராணம் தனக்கே அலுப்பான வேளையில் அவளைக் கவனித்தான். ''இத்தினி நகை போட்டிருக்கியே இடைஞ்சலா இருக்காது.''

''ஒரு இடைஞ்சலும் இல்லையே.''

''உனக்கில்லடி எனக்கு... கர்சுமாலையைப் பின்னால போட்டுக்க....''

சிவந்தாள். அவள் வெட்கம் அவனுக்கு வெறியேற்றியது.

இருட்டு கண்ணுக்குப் பரிச்சயமாவதற்குள் ஏகத்துக்கு ஹிம்ஸைகள் செய்தான்.

'கொஞ்சம் பொறுமையாக இருங்களேன்.' பேச்சு காதில் ஏறவில்லை. உன்மத்தம் கொண்டவன் போல் நடந்து கொண்டான். தெளிவில்லாமல் இயங்கினான்.

உடம்பெல்லாம் நகக்குடியும், பல் குடியும் விழுந்ததில் துடித்துப் போனாள்.

''ச்சி விடுங்க. கழுத்துல ரத்தம் வருது.''

''ச்சியா... நம்மக்கிட்ட இதெல்லாம் வேணாம். மரியாதை குறைஞ்சுது நான் மனுஷனாவே இருக்க மாட்டேன். எனக்கு முக்கியம் மரியாதை. இது முதல் தடவைங்கறதால வுடறேன். இந்த ச்சி த்தூவெல்லாம் வேறெங்கயாவது வச்சுக்க.''

'என்ன செய்வது... விடியாதா, கடவுளே! என்று பேசாமல் கிடந்தாள். இடுப்பும், முதுகும் பிழிந்து போட்டாற் போல் வலித்தன. எழுந்து பாத்ரூமுக்குப் போய்ப் பிடரியைப் பார்த்தாள். ஜலம் பட்டதும் தீயாய்க் கழுத்து எரிந்தது.

இவனுக்குத் தெரியவில்லை. பெண் பழக்கமில்லை. எப்படி மாற்ற இவனை...

''அப்படித்தான் இருக்கும் பானுமதி.'' அம்மா விடியலில் கழுத்துக்கு எண்ணெய் தடவினாள்.''

''பக்குவமா நாம சொல்லித்தான் வசப் படுத்தணும்.''

கவிஞன் கதிரேசனுக்குப் பாராட்டு விழா. இரண்டாவது வாரமே நடந்தது. வட சென்னை முத்தமிழ் மன்றம் முன்னின்று நடத்தியது. கவிப் பேரொளி என்கிற பட்டம் நீல நிறப் பின்னணியில் சிவப்பு நிறம், ஆரஞ்சு நிறம், தங்க நிறம் என்று எழுத்துக்கள் வரையப்பட்டு மெல்லிய சட்டமிடப்பட்டுத் தயாராகியிருந்தது. முத்தமிழ் மன்றம் பாராட்டு விழா நடத்த பட்டம் வேறு யாரோ தருகிறார்கள் போலிருக்கிறது.

பட்டம் தருகிறவர் அந்தக் கண்ணாடிச் சட்டத்தை எடுத்துக் கொண்டு குறுக்கும் நெடுக்கும் அலைந்தார். வற்றல் உடம்பும், நரைத்த தலையுமாய்த் தோளில் துண்டு போட்டு எல்லோரிடமும் வலியப் போய்ப் பேசினார். கதிரேசனோடு இருநூற்றிப் பதினேழு பேருக்குப் பட்டங்கள் கொடுத்திருப்பதாகவும் பலர் வீட்டில் அவர் அளித்த பட்டங்கள் இருக்கிறதென்றும் அடுத்து உட்கார்ந்த பெண்மணியிடம், பானுமதி காதுக்குக் கேட்கிற மாதிரி தகவல் சொன்னார்.

''நல்ல தமிழ் சேவைங்க.. தொடர்ந்து செய்யணும்'' என்று அந்த அம்மணி பாராட்ட, பானுமதிக்குக் கும்பிடு போட்டார். அவைத் தலைவர் பேசத் துவங்கினார்.

''கதிரைப் பேரொளி என்று இனி பட்டம் கொடுத்துக் கூப்பிடப் போகிறார்

களாம். கதிர் பேரொளியில்லாமல் மத்தாப்புக் குச்சிகளா பேரொளியாகும்? சில புஸ்வாணங்களையா பேரொளி என்று அழைக்க முடியும்? புதுக் கவிதை தீக்குச்சிகள் வந்து விட்ட நாளிலே கதிரவனைப் பேரொளி என்று கூப்பிட வேண்டியிருக்கிறது. நேற்று ஒரு கவிதை படித்தேன். ஒரு பீடிக் கவிஞன் கவிதை என்று ஒன்று எழுதியிருக்கிறான்.

விரலுக்குள் அக்னிக் குஞ்சு
விசிடக் கண்ணில் நிற்கும்
கண்களை அழுத்தி மூட
நெற்றிக்குள் சுடராய் மின்னும்
விரலுக்குள் அக்னிக்குஞ்சு. என்
நெற்றிக்கு எப்படி போச்சு.

இதுதான் கவிதை. நெற்றிக்கு எப்படி போச்சுன்னு முழிக்கிறானாம் கவிஞன். சிவபெருமானா எடுத்து வச்சாரு?'' — கூட்டம் சிரித்தது.

''தம்பி, நீ குனிந்து சிகரெட் பற்ற வைத்த போது உன் நீண்ட சிகை நெருப்புல பட்டு எரிஞ்சு போச்சுடா... அணைடா அதை முதல்ல...''

கூட்டம் வாய் விட்டுச் சிரித்தது. ஊளை யிட்டுச் சிரித்தது.

''ஆக நண்பர்களே, இப்படி தீக்குச்சி கவிதைகள் பெருகி வரும் இக் காலத்தில் கவிப்பேரொளி போன்றவர்கள் இலக்கியத் தரம் வாய்ந்த இலக்கணம் வழுவாத கவிதைகளை, தமிழர் பெருமையைத் தமிழின் பெருமையென திசையெங்கும் பரப்பிட வேண்டும் என்று கூறி...''

கூட்டம் விடாது கை தட்டிற்று.

கதிரேசன் பட்டம் வாங்கிச் சூளுரைத்தான்:

''என் தமிழால் இந்தத் தீக்குச்சி கவிஞர்களை எரிப்பேன். என் தாய் தடுத்தாலும் விடேன். தமிழை இழிவுபடுத்துபவனை என் தலைவன் தடுத்தாலும் விடேன். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் வளர என் கவிதைகள் வழிகாட்டும்.''

''ஏங்க ஒரு கேள்வி?''

''கேளுங்க'' — கதிரேசன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

''ராக்கெட் பத்தி, சாடிலைட் பத்தி தமிழ்ல கவிதை இலக்கண சுத்தமா எழுதுவீங்களா?''

''ஏன் முடியாது? சந்திரனில் கால் வைத்தது பற்றி எழுதியிருக்கிறேனே.

தேய்ந்து வளரும் சந்திரனில்
காலடி வை — மனிதா
என் செந்தமிழில் ஒருபோதும்
கை வைக்காதே.
செங் காந்தள் விரல் போல
ரதம் செய்து எரியூட்டி
செவ்வாய்க்குப் போ மனிதா
என் தமிழ்த் தாயை மறிக்காதே.

எழுதியிருக்கிறேன்...''

மறுபடி கூட்டம் கைதட்டிற்று.

''ராக்கெட் விடறதைப் பாராட்டறீங்களா? எதிர்க்கறீங்களா?'' மறுபடியும் கேள்வி கேட்கப்பட்டது.

''எதுவும் செய்யவில்லை. பார்வையாளனாக நிற்கிறேன். என் எழுத்தில் உங்கள் திறனைப் பதித்து வைக்கிறேன். அதே நேரம் நீங்க எது செய்தாலும் தமிழுக்குத் தீங்கு வராது காத்து நிற்கிறேன்.''

''மனுஷனைப் பாராட்டாமல் தமிழையே பாராட்டறீங்களே?''

''நான் இன உணர்வுக் கவிஞன்''

''என்ன இனம்?''

''தமிழினம்.''

''குறுகின வட்டமில்லீங்களா, இது?''

''வீட்டைத் துறந்து காட்டை நேசிக்கிற போலித் துறவியல்ல நான். என் உலகம், என் வீடு, என் மக்கள், என் மொழி. என் வீட்டைக் கொளுத்தி விட்டு நாட்டைக் காப்பாற்றும் நயவஞ்சகம் என்னிடம் இல்லை. எனக்கு என் மொழி முக்கியம். தமிழ்த் துரோகம் செய்யும் சண்டாளர்களுக்குப் புரியாது.''

அவன் ஆவேசம் கண்டு கூட்டம் அஞ்சியது. பானுமதி கலவரமானாள். தலைவர் அமைதிப்படுத்த கூட்டம் முடிந்து, பட்டம் தூக்கிக் கொண்டு வந்தார்கள்.

பானுமதி அடுப்பு மூட்டி பால் கொதிக்க வைத்தாள். அடுப்பு மூட்டுகையில் விரலிடுக்கில் தீச்சுடர் சிரித்தது. எரிய விட்டு, வீசி அணைத்த பிறகு கண் மூட, அந்தச் சுடர் கண்ணுள் நின்றது. கண் மூட மனசுள் நின்றது. அட... நெருப்பு அணைந்த பிறகும் உள்ளே நினைவு நிற்கிறது. அதே சுடர் தெரிகிறது. பார்வை; வேறு. நினைவு வேறு. பார்வை போன பிறகும் நினைவு அழியவில்லை. பார்வை, பார்த்த பொருள் எப்படி மூளையில் பதிந்து விட்டது! எதனால்? இல்லாத பிறகும் சுடர் இருக்கிறதே... என்ன வித்தை இது?

ஏங்க... அது நல்ல கவிதையில்லையா?'' இரவு கேட்டாள்.

அவன் உலுக்கி அவளைப் பிரித்தான்.


''செருப்படி படுவே...'' என்று கத்தினான். அது முதல் வசவு.


(தொடரும்)

''நம்ம தலைவர் கூட, அவருக்கு ரொம்ப ஒட்டுதல்னு எதை வெச்சுச் சொல்றீங்க?''

''தலைவர் பேசிக் கொண்டிருக்கும் போது அவர் இடையிடையே எழுந்து சோடா குடிக்கிறாரே!''

— இடையகோட்டை ஆசாத்.





பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி.

டீ.வி. மீது ஓர் உண்டியல்!



‘அக்கம் பக்கம் பார்க்காதே’

oo ‘நீதிக்குப் பின் பாசம்’ பட வீடியோ கேசட் போட்டுப் பார்த்தோம். அன்று மாலையே மூன்று வயது நிரம்பிய என் மகனுடன் கடைத் தெரு சென்றேன். அப்போது அவன், ‘அக்கம் பக்கம் பார்க்காதே’ என்ற பாடலை சத்தமாகப் பாடினான். நான், ‘‘தெருவில் இந்த மாதிரி சத்தம் போட்டுப் பாடக் கூடாது’’ எனக் கண்டித்தேன். அதற்கு அவன், ‘‘ஏம்மா? படத்தில் ரோட்டில்தானே எம்.ஜி.ஆர். மாமா இந்தப் பாட்டைச் சத்தம் போட்டுப் பாடுகிறார்? நான் மட்டும் பாடக் கூடாதா?’’ என்று கேள்வி கேட்டு என்னை விழிக்க வைத்து விட்டான்.

— ஜெயந்தி கணேஷ், சீர்காழி.

‘‘கரண்ட் பில்லுக்கு உதவும்!’’

oo என் நண்பர் தமது டீ.வி. பெட்டி மீது ஓர் உண்டியல் வைத்துள்ளார். ‘‘படம் பார்க்க வருகிறவர்கள் ஒரு ரூபாய் உண்டியலில் போடவும். கரண்ட் பில்லுக்கு உதவும்’’ என்று எழுதி வைத்துள்ளார்! மாதம் நூறு ரூபாய்க்கு மேல் வசூலாகிறது!

— எஸ். பார்த்தசாரதி, சீர்காழி



‘‘இரண்டு பேரும் அவுட்டா?’’

oo டீ.வி.யில் ஒரு கிரிக்கெட் மாட்சின் ஒளிபரப்பைப் பார்த்துக்கொண்டிருந்தோம். ஒரு பாட்ஸ்மன் காட்ச் கொடுத்து அவுட் ஆனார். அப்பொழுது அம்பயர் வலது கையைத் தலைக்கு மேல் தூக்கிக் காண்பித்ததைப் பார்த்த என் ஐந்து வயதுப் பெண் அகிலா, ‘‘அவர் எதற்குக் கையைத் தூக்கிக் காண்பித்தார்?’’ என்று கேட்டாள். ‘‘பாட்ஸ்மன் அவுட் ஆகி விட்டார்’’ என்று விளக்கினேன். சிறிது நேரம் சென்ற பின், ஒரு பாட்ஸ்மன் ‘ஸிக்ஸர்’ அடிக்க, ‘அம்பயர்’ தமது இரண்டு கைகளையும் தலைக்கு மேல் தூக்கிக் காண்பித்தார். அதைப் பார்த்த என் பெண், ‘‘அடடே, இரண்டு பாட்ஸ்மன்களும் சேர்ந்தாற் போல் ‘அவுட்’ ஆகி விட்டார்களா?’’

என்று கேட்க, சிரிப்பை அடக்க முடியாத தால் பதில் கூறத் திணறிப் போனோம்!

— லக்ஷ்மி வைத்தியநாதன், புது டில்லி — 23.

"தெருத் தெருவாய் அலைய..."

00 மகாபாரதம் பார்ப்பதற்காக அனைவரும் டி.வி. எதிரில் அமர்ந்திருந்தோம். அதற்கு முன் விடியோகான் டிவி விளம்பரம் வந்தது. அதில் இரண்டு நிகழ்ச்சிகளையும் நீங்கள் ஒரே சமயத்தில் பார்க்கலாம் என்று கூறுகிறார்கள். இதை கேட்ட எங்கள் தாத்தா, "ஆமாம், ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கும்போதே தலையைப் பிய்த்துக் கொள்கிறோம். இதில் இன்னொரு நிகழ்ச்சி வேறா? அப்புறம் தெருத் தெருவாய் அலைய வேண்டியதுதான்!" என்றார்.

— பா. அமுதா, சென்னை — 95.

மூட் அவுட் பெண்மணி

00 என் நண்பர் ஒருவர் வீட்டில் டி.வி. யின் பிக்சர் ட்யூப் அவுட் ஆகி விட்டது. புதுசு வாங்க, மெகானிக்குடன் கடைக்குச் சென்றோம். சேல்ஸ் கவுண்டரில் இருந்த பெண்மணிக்கு அன்று 'மூட்' அவுட் போலும். என் நண்பர் பிக்சர் ட்யூப் பற்றிச் சரமாரியாகக் கேட்ட கேள்விகளுக்கு எரிந்து விழுந்தபடியே பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

கடைசியில், ட்யூபை டெஸ்ட் பண்ணியில் போட்ட பிறகு, நண்பர் கேட்டார்: "ஏங்க, இந்தப் பிக்சர் ட்யூபுக்கு எத்தனை வருஷம் காரண்டி?" அவ்வளவுதான் அந்தப் பெண்மணிக்கு அசாத்தியக் கோபம் வந்து விட்டது. பிக்சர் ட்யூப் இருந்த அட்டைப் பெட்டியைத் தூக்கி நண்பரின் கைகளில் வைத்து விட்டுச் சொன்னார். "இந்தக் கணத்திலிருந்து, அதாவது இந்தக் கடையை விட்டு வெளியில் போவதற்குள் ட்யூபுக்கு ஏதாவது ஆனால் கூட நீங்கள்தான் பொறுப்பு!"

— ஐ.ஓ.சி. சிவாஜி, சென்னை — 83.

கப்பல் மூழ்காத கவலை!

00 இளந்தென்றல் நிகழ்ச்சியில் நாடகம் ஒன்று. ஒருவர் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு பார்க்கில் அமர்ந்து இருக்கிறார். அவரிடம் அவரது நண்பன், "என்னப்பா கன்னத்தில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே? கப்பல் மூழ்கி விட்டதா?" என வினவுகிறார்.

அதற்கு முன்னவர், "கப்பல் மூழ்கவில்லையே என்றுதான் உட்கார்ந்திருக்கிறேன்" என்கிறார். நண்பர் ஒன்றும் புரியாமல் "நீ என்ன சொல்கிறாய்?" என்று மீண்டும் கேட்க, முன்னவர், "நான் வாங்கி இருப்பது நீர்மூழ்கிக் கப்பல் ஆயிற்றே!" என்கிறார்!

— வி. ஸ்ரீனிவாசன், அரக்கோணம்.

இட்லி ஆயாவின் வாழ்த்து!

சென்னை மேற்கு மாம்பலத்தைச் சேர்ந்த பாலிடெக்னிக் மாணவர் சீனிவாசனின் பிறந்தநாளன்று 18,500 பேர் வாழ்த்து அனுப்பினார்கள்! கின்னஸில் இடம்பெற வேண்டும் என்ற ஆர்வத்தில் ஜீனியஸ் கல்லூரி முதல்வர் அருள்மணி உதவியுடன் நடந்த 'செட்—அப்' தான் இது. வழக்கமான வாழ்த்துக்கள் தவிர, சில சுவாரசியமான வாசகங்களையும் தபால் கார்டுகளில் காண முடிந்தது. சாம்பிள்களைச் சுவையுங்கள்:

○○ உன் பெயர் கின்னஸில் வந்தால், உனக்குத் திருப்பதியில் மொட்டை போடுவதாய் நான் வேண்டிக் கொண்டிருக்கிறேன்.

— மணி குமார்.

○○ நீ மகா கஞ்சனாயிற்றே! பிறந்தநாள் செலவை எப்படிச் சமாளிக்கப் போகிறாய்?

— குலாம் நபி.

○○ போடா மடையா! 19 வயசுக் கழுதைக்குப் பிறந்தநாள் கொண்டாட்டமா?

— ரவி.



• வாழ்த்துக் குவியலுக்கிடையில் சீனிவாசன், அருள்மணி.

○○ உன் 'கிளி'யைப் பார்த்தேன்! விசாரித்தாள்.

— பெஞ்சமின்

○○ சீனிக்கு! இட்லி ஆயாவின் பிறந்தநாள் வாழ்த்து! மவராசனா இரு. இட்லி பாக்கி மூணரை ரூவாயை சீக்கிரம் தீர்த்துடு!

— லட்சுமி ஆயா.

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி.



— சீர்காழி ஸ்ரீராம்.

தபால்காரர்: ஊருக்குப் போன உங்க மாமியார்கிட்டே இருந்து உங்களுக்கு அடிக்கடி கேஸட் வருது. நீங்களும் அவங்களுக்குப் பதிலுக்கு அடிக்கடி கேஸட் அனுப்பறீங்களே!

பெண்: ஆமாம்... நேரில் சண்டை போட முடியாத குறையை, கேஸட் மூலமாத் தீர்த்துக்கிறோம்!

— இரா. சாந்தகுமார்.




"அமைச்சர் ஏன் 'திமர்'னு ஜப்பானுக்கு விஜயம் செய்கிறார்...?"

"சாணைக்கல் வாங்க...!"

"சாணைக்கல் எதற்கு...?"

"பல புதிய திட்டங்கள் தீட்டத்தான்...!"

— புன்னகை மன்னன்.



அத்தியாயம் 19

அடிபட்ட புலி!

குயில் குப்பத்திலிருந்து கிளம்பிய மூன்று ஆட்டோக்களில் தருமனும் அவனது சகாக்களுமாக மொத்தம் பதினைந்து பேர் இருந்தனர். சரியாக நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு மூன்று ஆட்டோக்களும் 'கொய்யாத் தோப்பு' பகுதியின் வெளியே சப்தமின்றி நிறுத்தப்பட்டன.

வண்டியிலிருந்து இறங்கினான் தருமன்..

''டேய் சிலா.. இங்க வா. நேரா சைலண்டா குப்பத்துள்ள போ.. இந் நேரத்துக்கு அநேகமா அவன் அந்த தேவி வூட்டாண்ட தான் இருப்பான். முடிஞ்சவரைக்கும் அவனைத் தனியா உசார் பண்ணிக் கூட்டியாரப் பாரு. அப்படி அவன் எதனாச்சும் டௌட்டாயி உதார் காட்டுனானா அங் கிருந்தே ஒரு பிகில் வுடு. அப்பாலே ஆவ வேண்டியதை நாங்க கண்டுக்கறோம். இன்னா புரியுதா...?

கைலே எதனாச்சும் சாமான் வெச்சுக் கிறியா?''

தருமனின் கேள்விக்குச் சிலன் லுங்கியினுள் கைவிட்டு, வெளியே எடுத்த வேகத்தில் ஒரு பட்டனைத் தட்ட, சீறிக் கொண்டு வெளியில் தலைநீட்டியது ஏழு அங்குல நீளமுள்ள ஒரு கூரிய கத்தி.

''சபாஷ்டா கண்ணு! அத்தை அப்படியே உள்ள வை, நேரா போ, இன்னா.''

தருமன் முடிக்குமுன் குப்பத்தினுள் நுழைந்திருந்தான் சிலன்.

தருமன் ஒரு படைத் தளபதியாய் மாறித் தனது வீரர்களுக்குத் திட்டத்தை விளக்கிக் கொண்டிருந்தான்,

''தே... இங்க பாருங்கடா சிலன் பையன் டில்லியைத் தனியா வலிச்சிகினு வந்துட்டான்னா அவன் மூஞ்சிலே கப்புனு நாலு கோடு போட்டுட்டு போய்க்கினே இருப்போம். அப்டியில்லாம எதனாச்சும் தகராறாயி சிலன் கொரலு வுட்டான்னா மொதல்ல தெருவுல எரியற எல்லா லைட்டையும் காலி பண்ணிடுங்க... ஏதாச்சும் ஏடாகூடமா ஆனாலோ கைலே கெடைச்சவனையெல்லாம் போடாதீங்க. டில்லியைச் சுத்தி நிக்கிற பார்ட்டிங்களை மட்டும் கணக்கா போட்டுக் கழுட்டிக்குங்க. அனாவசியமா பொம்மனாட்டிங்களையோ இல்ல கொழந்தைங்களையோ கலாயாதீங்க...''

குப்பத்தில், குடிசைகளுக்கு நடுவே கட்டப்பட்டிருந்த அந்தக் கான்கிரீட்டு வீட்டின் முன் வட்டமாய் அமர்ந்து சிம்லி வலித்துக் கொண்டு 'மங்காத்தா' ஆடிக் கொண்டிருந்த கும்பலில் ஒருவனை அணுகி, ''அண்ணே டில்லி அண்ணன் கீறாரு?'' என்றான் சிலன்.

''இன்னா விஷயம். இந் நேரத்துலே அவரைத் தேடிக்கினு வந்துக்கிறே?''

''இல்லே அவரு கைல மேட்டரு பேசணும். வெளிலே ஆட்டோவுலே ரெண்டு பேரு வெயிட்டிங். எதனாச்சும் பார்ட்டி கீதான்னு கேட்கணும் அதான்.''

''அத்த எங்க கைல கேட்டா ஆவாதா? நேரா உங்களுக்கு மொதலாளியே வந்து பதில் சொல்லணுமா...? மொதல்ல ஆட்டோல இருக்கவனுங்களை நாங்க பார்க்கணும். அப்பாலேதான் நாங்க பார்ட்டியை அனுப்ப முடியும். வா போகலாம்.''

''அய்யே அண்ணாத்தே பார்ட்டியெல்லாம் ரீஜன்டான பார்ட்டிங்கதான்.''

''அப்ப மொதல்ல ஆயிரத்து ஐந்நூறு வெட்டு; ஃபிகரைக் கூப்பிடறோம்.''

''இது இன்னா பார்ட்டியை இட்னு வந்து வுடச் சொல்லத்தான மாலு வெட்டுவோம். நீ இன்னா இப்பவே கேக்கறே? இதுக்குத்தான் சொன்னேன். டில்லியைக் கூப்பிடு அவன் கைலே பேசறேன்னு.''

சிலன் முடிக்குமுன் டில்லியின் கைக்கூலி ஒருவன் ரோஷம் பொத்துக் கொள்ளக் கிளம்பினான். ''த்தா... நானும் அப்போ புடிச்சிப் பாத்துகினேகிறேன் இன்னா நீ டில்லி.. அவன் இவன்றே?'' என்றவாறே கையை ஓங்க, சிலன் அவனை மாரிலே எட்டி உதைத்து விட்டுக் கையில் கத்தியை சரேலென்று உருவிக் கொண்டு சுழன்று சுழன்று விடு கட்டியவாறே தருமனுக்கும் அவனது கோஷ்டிக்கும் கேட்கும் வகையில் வாயில் விரல் விட்டு ஒரு பிகிலடித்தான்.

சிலனின் விசில் காதில் விழுந்த மறு நிமிடம் தருமன் தன் படை சூழக் 'கொய்யாத் தோப்புள்' 'தபதப'வென நுழைந்தான். அவர்கள் நுழைவதற்கு முன்னேயே சாலை விளக்குகள் உடைந்து தெறித்து விழும் 'சுலீர்', 'சலீங்' போன்ற சப்தங்கள் கொய்யாத் தோப்பு குடியிருப்பினரை எட்டின. ஏதோ தகராறு என்று யூகித்துப் பயந்து அலறி, குப்பமே தலை கீழாய்ப் புரட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

தேவியை உதறி விட்டு அவசர அவசரமாய் எழுந்த டில்லி, பேருக்கு எதையோ போர்த்திக் கொண்டு லேசாகக் கதவைத் திறந்து வெளியே பார்க்க, அங்கே அவனது அடியாட்களை யாரோ அடித்துக்

பாரதிராஜா

உயிர்த் தோழன்

கொண்டும், அடி வாங்கிக் கொண்டும் இருப்பது அந்த இருட்டிலும் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. ஒரு நிமிடம் வெளியே வர யத்தனித்தவன் அவன் வீட்டை நோக்கித் 'திமுதிமு'வென்று ஒரு படையே வருவதைக் கண்டு பதறலுடன் அவசரமாகப் பின்வாங்கிக் கதவை அடைத்து, அவசர அவசரமாய் மூச்சு வாங்கினான். தொலைபேசியை அடைந்து போலீஸுக்கு ஃபோன் செய்து பதிலுக்குக் காத்திருந்தான்.

''ஹலோ E-3 போலீஸ் ஸ்டேஷன்.''

''ஹலோ... ஹலோ... யாரு பேசறது? நான் இங்க கொய்யாத்தோப்புலேந்து டில்லி பேசறேன். இன்ஸ்பெக்டரு பெருமாளு இறாரா?''

டில்லியின் பெயர் உச்சரிக்கப்பட்டதுமே சுறுசுறுப்பானார் ஏட்டு அழகேசு.



"அண்ணே நான் ஏட்டு அளகேசு பேச றன்னே. இன்ஸ்பெக்டர் இப்பத்தான் ஊட்டுக்குக் கௌம்பிப் போறாரு. இன்னா மேட்டரு அண்ணே?"

"யோவ் இங்க என்னை அடிக்கறதுக்கு ஒரு கும்பலே ஊட்டைச் சுத்தி நிக்குது. கொய்யாத் தோப்பு குப்பமே கதிகலங் கிட்டிருக்குது. நீ இன்ஸ்பெக்டரு விட்டுக்குப் போய் அவராண்ட மேட்டரைச் சொல்லி ஒரு வேன்ல ஃபுல்லா நம்ம போலீஸுங் களைக் கூட்டிக்கினு உடனே வரச் சொல்லு."

— டில்லி செய்தி சொல்லிக் கொண் டிருக்கும்போதே கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தான் தருமன். அந்த நேரத்தில் அதுவும் அந்த இடத்தில் தருமனைச் சற்றும் எதிர்பார்க்காத டில்லி, பயத்தில் 'ஐயோ' என்று அலறினான். பின் தன் நிலை உணர்ந்து தன் இடுப்பில் சுற்றி யிருந்த ஏதோ ஒன்றை இடுப்பைச் சுற்றி ஒழுங்காக இறுகக் கட்டிக் கொண்டு சுதாரித்தவாறே நின்றான்.

"உன் தெனாவட்டைப் பொம்மனாட் டிங்களாண்டையாடா காட்டறே பேமானி...!" என்று கத்தியவாறே டில்லி யின் மீது பாய்ந்தான் தருமன்.

வலி தாங்க முடியாது ஏதோ அரற்றிய வாறே கண் மூடினான் டில்லி.

அதற்கும் திருப்தி அடையாத தருமன் தன் கண்களை டில்லியின் வீட்டினுள் சுழற் றிக் கையில் கிடைத்த பொருட்களையெல் லாம் பொடியாக்கி விட்டு வெளியேறி னான்.

மறுநாள் காலை, தலை முதல் கால் வரை மாவினால் கட்டப்பட்டு முக்கால் மறைக்கப்பட்டிருந்த ஓர் உருவம் தள்ளாடிய வாறே 'E-3' ஸ்டேஷனுக்குள் நுழைய, புதிய கம்ப்ளெயின்ட் ஒன்றைப் பதிவு செய் யத் தயாரானார் E-3 காவல் நிலைய இன்ஸ்பெக்டர் பெருமாள்.

மெல்ல நடந்து வந்த உருவத்தை அமரச் சொன்ன இன்ஸ்பெக்டர், "யெஸ் கேன் ஐ பி ஆஃப் சம் ஹெல்ப் டு யூ?" எனக் கேட்க,

"இன்ஸ்பெக்டரு! நீ ஏன் பேச மாட்டே. அடி வுயுந்தது எனக்கில்லே.. அதான் நீ பேசறே. ஐயோ... இன்னா அடி.. பொளந்து தள்ளிட்டானே!"

கட்டுக்குள்ளிருந்து வந்த முனகலான குரல் மட்டுமே அந்த உருவத்தை 'டில்லி பாபு' என இன்ஸ்பெக்டருக்கு அடையாளம் காட்டியது.

"அட டில்லியா? இது என்னாயா கோலம்?"

"ஆங். 'ரங்கோலி' கோலம்!" இன்னா பண்ணித் தொலையறது, எல்லாம் இதோ இந்த வாயாலே வந்த வெனை. நமக்குச் சனி நாக்குலேயே இருக்குது!"

"இப்ப என்ன ஆய்டிச்சின்னு இப்படி புலம்பறே ...?

...நடந்தது நடந்து போச்சு. இனியும் அதப் பத்தி ஃபீல் பண்ணி என்ன ஆவப் போவுது வுடு. நான் நேத்தே Proper Action எடுத்துட்டேன். கும்பலேருந்த அத்தனை ரவுடிங்களையும் லாக்—அப்லே தள்ளிப் பெரட்டிட்டேன்."

"எல்லாத்தையும் அடிச்சியா? இன்னா இன்ஸ்பெக்டரு நீ! சுத்த சொதப்பலா கீறியே. நீ புடிச்சிகினு வந்து அடச்சி வெச்சிகிறதுல பாதி பேருக்கு மேலே நம்ம ஆளுங்க. அத்தான் உன் கைலே சொல்லி அவங்களை இட்னு போலாம்னு வந்தா நீ அதுங்காட்டியும் அத்தினி பேத்தையும் பொளந்துட்டுக்கறே. சர்தான் போன வரைக்கும் போவட்டும் வுடு. நம்ம பசங் களை மட்டும் அடையாளம் காட்டுறேன் வெளிய வுடு. மிச்ச நாய்ங்களையெல்லாம் இன்னும் ஒரு வாரத்துக்கு உள்ளேயே வெச்சி முட்டிக்கு முட்டி தட்டிட்டு அப்பாலே வுடு."

"டில்லி இத நீ முன்னாலேயே சொல் லித் தொலைச்சிருந்தா நான் எவன் மேலேயும் F.R.I. ஃபைல் பண்ணியிருக்க மாட்டேன். இப்ப யாரையும் ரிலீஸ் பண்ண முடியாது. அதுவும் இல்லாம தகராறுக்குக் காரணம் என்னன்னு கௌறுனா தருமன் பேட்டைல இருந்து யாரோ ஒருத்தன் உன்கிட்டேயிருந்து ஒரு 'Call girl'ஐ கூட்டிக் கிட்டுப் போக வர, உங்க ஆளுங்க எக்கு தப்பா பேச, பேச்சு முத்தித் தகராறுலே முடிஞ்சிருக்கு. நான் இதையெல்லாம் அப் படியே அமுக்கிட்டு சும்மா குடிச்சிட்டு ரெண்டு 'gang'க்குள்ள சண்டைன்னு கேஸ் ஃபைல் பண்ணியிருக்கேன். உண்மையா நடந்ததை வைச்சி கேஸ் ஃபைல் பண்ணா அந்த தருமன் நீ... நான்னு பாக்காம துருவித் தோண்டி, பெரிய லெவல்ல இருக் கறவங்க வரைக்கும் பிரச்னை போய் அப்புறம் பெரிய தர்மசங்கடத்துல முடிஞ் சிடும். இவனுங்களை மிஞ்சிப் போனா இன்னைக்கு நைட் வரை லாக்—அப்லே வெச்சிருந்துட்டு ரிலீஸ் பண்ணிடுவேன். அது வரைக்கும் கொஞ்சம் பொறுமையா இரு டில்லி."

"அப்ப நானும் அந்த ரிக்ஷாக்காரப் பயலும் ஒரே லெவலா! பார்ட்டி கூட்டிகினு போற மூஞ்சியா அவன், இன்னா சொல் றீங்கன்னு புரியலையே. புச்சா எங்கை லேயே இன்னாவோ F.I.R. பெரிய எடம்.

இண்டர்வியூவில்:

"இவ்வளவு ஒல்லியா இருக்கிற நீ எதை நம்பிப் போலீஸ் வேலைக்கு வந் திருக்கே?"

"மாமூலை நம்பித்தான் சார்!"

— சீர்காழி ஸ்ரீராம்.



உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை ஸெரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது; பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்.

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து

6 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

RK SWAMY/TSL/5112/TAM

அப்படி இப்படிங்கறே. சர்தான் வுடு. என் பவுரை நான் காட்டத் தேவையில்லையா? நான் ஸ்டெயிட்டா ஏ.சி.யான்டயே மேட்டரை டீல் பண்ணிக்கறேன்.''

ஏ.சி.யின் வீட்டினுள் சர்வ உரிமையுடன் நுழைந்தான் டில்லி. நேரே வரவேற்பறையில் நுழைந்தவனைக் கண்டு திடுக்கிட்டார் ஏ.சி. திவ்யநாதன். ''யார் அது? என்ன வேணும்? ஏன் மிஸ்டர் நீங்க பாட்டுக்குக் கதவு தொறந்திருந்தா நேரே உள்ளே நுழைஞ்சிடுறதா?''

''அண்ணே நான்தான் டில்லி வந்திருக்கேன் அண்ணே'' — ஒப்பாரி வைக்காத தோஷமாய், நடந்தவற்றைச் சொன்னான் டெல்லி.

ஏ.சி. திவ்யநாதன் உண்மையிலேயே ஒரு நிமிடம் அதிர்ந்தார். பின், ''டில்லி.. நானும் கேள்விப்பட்டேன் ஆனா இவ்வளவு மோசமா நடந்திருக்கும் தகராறுன்னு எனக்கு இப்பத்தான் தெரியுது. சரி இப்ப நான் உனக்கு எந்த விதத்துலே ஹெல்ப் பண்ணணும்னு சொல்லு, என்னால முடிஞ்சதை நான் செய்யறேன்.''

''அட நான் இன்னா சார் பெரிசா கேட்கப் போறேன். தகராறு நடந்தப்ப புடிச்சிகினு போனவங்க, கும்பலோட கும்பலா நம்ம புள்ளிங்க ஒரு பதினஞ்சு பேத்தையும் சேத்து அள்ளிகினு பூட்டாங்க. அட அவங்களையெல்லாம் வெளில வுடு பெருமாளு, நான் சைலன்டா தள்ளிக்கினு பூடறேன்னா. அவரு ஒரேடியா நம்மளான்டேயே பெரிய எடம். பெரச்சனை வரும், FIR, அப்டி இப்டிங்கறாரு. அதான் ஸ்டெயிட்டா உன்னாண்ட மேட்டரைச் சொல்லிடலாம்னு...''

''டில்லி! நீ என்ன இன்னும் புரியாத ஆளா இருக்கே. இப்ப உங்க ஆளுங்களை மட்டும் நீ வெளியே கூட்டிக்கிட்டுப் போகணும்னா அதுக்கு நீ கோர்ட்டுக்குப் போய் ஒரு வக்கீலை வெச்சி Bail Order வாங்கிட்டு வரணும். அப்டியில்லாம நாங்க பாட்டுக்குத் தொறந்து வுட்டா அப்புறம் உனக்கே தெரியும் அந்த தருமனைப் பத்தி. இதை அப்படியே அவன் கட்சித் தலைவன்கிட்டே சொல்லுவான். அவனுங்களும் இதான் சாக்குன்னு பத்திரிகைலே 'ஆளுங்கட்சியில் போலீஸ் இலாகாவின் அலங்கோலம்'னு பத்து காலத்துக்குப் போட்டுக் கிழிச்சிறுவாங்க. ஏதாவது புதுப் பிரச்னை கௌம்புச்சுன்னா அப்புறம் நீ, நான், உன் பிசினஸ்னு எல்லாம் க்ளோஸ் ஆயி, கூண்டோட கைலாசம் போவ வேண்டியதுதான். அதனால கொஞ்சம் பொறுமையா இரு.''

ஏ.ஸி. பேசிக் கொண்டே போக டில்லிக்கு அடிபட்டதால் ஏற்பட்ட வலியை விடத் தன் வார்த்தைகளுக்கு இழைக்கப்படும் அவமரியாதையைக் கண்டு அதிகம் ஆத்திரம் உண்டாயிற்று.

''சரிதான் நிறுத்து சார்...! இன்னா சார் எல்லோருமே திமீர்னு நம்மளாண்டையே கமால் காட்டறீங்க. சொம்மாவா தொழில் செய்யறேன் நான்? முப்பது தேதியானா முள்ளங்கி பத்தையாட்டம் துட்டை அள்ளி ஏழு டிவிசனுக்கு மாமூல் அழுவுறேன். ஏன் அப்ப சொல்றதுதான இந்தக் கதையை...! பொங்கலு தீவாளின்னு ஒரு பண்டிகை வுடாம கரைக்டா வேட்டிய மடிச்சிக் கட்டிக்கினு டில்லிக்கு ஃபோன் பண்றீங்களே, 'இன்னிக்கு ஒரு சின்ன பார்ட்டி அத்தால அனிதாவையும் கனிதாவையும் அனுப்பு'னு பேரெல்லாம் சொல்லி உரிமையா கூப்பிட றீங்களே, அப்ப மட்டும் டில்லி வோணுமா உங்களுக்கு? சர்தான் வுடு சார்...! இன்னாதான் இருந்தாலும் போலீஸ்காரன் சிநேகிதம் கூடாதுன்னுவாங்க. அது கரைக்டுதான். எல்லாம் என் புத்தியைச் சொல்லணும். ஒண்ணா, ரெண்டா ஏழு! ஏழு டிவிசனுக்கு அழுவுறேன், நான் வர்றேன் சார்.''

டில்லி சென்ற பின்னும் சில மணி நேரங்கள் அவனது வார்த்தைகள் மட்டும் ஏ.சி.யின் காதில் தங்கி அவரைச் சுட்டுக் கொண்டிருந்தன.

வண்டியில் எரிச்சலுடன் ஏறிய டில்லி டிரைவரிடம், ''யோவ் இன்னிக்கி ஆவறதைப் பார்த்துடறேன். நேரா வண்டியை ஐ.ஜி. வூட்டுக்கு வுடு சொல்றேன்'' என்றவாறே வண்டியில் சாய்ந்து அமர்ந்தான்.

(தொடரும்)

'கல்கி' 6.8.89 இதழில் 'பாமெல்லாவின் சாகசங்கள்' படத்தில் நடிக்க அமெரிக்காவிலிருந்து நிகிடா வந்திருப்பதாகச் 'சண்டே' பத்திரிகையின் ஆதாரத்துடன் பிரசுரமாகியிருக்கிறது.

இதற்கிடையில் துரதிர்ஷ்டவசமாக 25 வயதான நிகிடா தேஜ்பாலி, பம்பாயில் தீவிபத்தில் காலமான செய்தியை 'சண்டே அப்ஸர்வர்' ஜூலை 30-ந்தேதி அன்று வெளியிட்டது.

பம்பாயில் அவர் தங்கியிருந்த இடத்தில் மின்சாரசப்ளை இல்லாததால், அவரும் அவருடைய உறவினர் கருணா என்ற பெண்ணும் மெழுகுவர்த்தி ஏற்றிய பொழுது, கால் அடுப்பு வெடித்து, தீவிர காயம் ஏற்பட்டு நானாவதி ஆஸ்பத்திரியில் ஆறு நாட்கள் சிகிச்சைக்குப் பின் காலமானார். கருணா உயிர் பிழைத்து, குணமடைந்து வருகி றாள்.

— ரிக்கமணி.



சிவாஜி எந்தக் கட்சியில் சேரப்போகிறார்?



* எந்தக் கட்சியில்...?



* துணிச்சல்!

* வெற்றிப் பேரொளி, திருக்குவளை.

? ஒரு நூல் வெளியீட்டு விழாவில் வலம்புரி ஜான், "தந்தையார் சரித்திரக் கதைகளில் கற்பனை கலந்து எழுதினார்; மகனோ அரசியல் செய்திகளில் கற்பனை கலந்து எழுதுகிறார்" என்று பேசியிருக்கிறாரே?

! "நான் ஒன்றும் தி. மு. க. வில் சேருவதாக இல்லை; அந்த எண்ணத்தைத் தராக உண்டாக்கியது தவறு" என்று கண்டித்து விட்டுப் போனால் ஆயிற்று. எனக்கும் உள்ளத்தில் உறைக்கும். அதை விட்டு விட்டு யாரிடம் என்ன ஏமாற்றமோ, என்ன கோபமோ தேவையில்லாத வார்த்தைகளைக் கொட்டியிருக்கிறார். சரித்திரத்தில் கற்பனை கலந்து எழுதுவதும் அரசியலில் கற்பனை கலந்து எழுதுவதும் உலகெங்கும் அங்கீகரிக்கப்பட்ட இலக்கிய வடிவங்கள். கல்கியே அரசியலில் கற்பனை கலந்து எத்தனையோ எழுதியிருக்கிறார். "நீங்கள் ஐம்பது வருஷங்களில் சாதிக்காததை நாங்கள் ஐந்து வருஷங்களில் சாதித்திருக்கிறோம்" என்றும் மார்தட்டியிருக்கிறார் வலம்புரியார். உண்மைதான்; நூறு வருஷமானாலும் அவர் நடத்தியது போன்ற தரக்குறைவான அம்சங்களுடன் கூடிய பத்திரிகையை எங்களால் நடத்த முடியாதுதான்! அதுவும் 'தாய்' என்ற புனிதமான பெயரில்!

* புனிதவல்லி இளங்கோ, கடலூர்.

? இன்றைய நிலையில் மிகவும் மலிவானது எது? கிராக்கியானது எது?

! மலிவானது சவால் விடுதல்; கிராக்கியானது ஜகா வாங்குதல்! அதுவும் போஃபோர்ஸ் விவாதத்துக்கு முதலில் சவால் விட்டு விட்டுப் பின்னர் ஜகா வாங்கியது ரொம்ப ரொம்ப கிராக்கியான தவறாகவே முடியும். ஏற்கெனவே பாழாகியுள்ள இமேஜ் பாதாளத்துக்குச் சரியும்.

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'காங்கிரஸுக்கு நான் எதிரியல்ல, உண்மையான நண்பன்' என்று ஆர். எம். வீ. கூறியிருப்பது பற்றி?

! 'விரோதிக்கு விரோதி எனது நண்பன்' என்று ஒரு வழக்கு உண்டு. அதனை மெய்ப்பிக்கிறார்.

* கே. ஆர். அசோகன், கிட்டம்பட்டி.

? "கருணாநிதி அ. தி. மு. க. வில் யாருக்கும் பயப்படவில்லை. இரட்டை இலை ஒன்றுக்குத்தான் பயப்படுகிறார்" என்று கே. கே. எஸ். எஸ். ஆர். கூறியுள்ளாரே?

! ஆக, 'மக்களுக்கு இரட்டை இலையிடமும் அதனைக் கட்சிச் சின்னமாக அளித்த எம்.ஜி.ஆரிடமும்தான் மதிப்பு; எங்களிடம் இல்லை' என ஒப்புக் கொண்டவராகிறார்.

* முருகேசன், தேனி.

? எழுத்தாளர் கி. ராஜநாராயணனைப் புதுவைப் பல்கலைக் கழகப் பேராசிரியராக (சிறப்பு) நியமனம் செய்திருப்பது பற்றி...?

! புதுமைப் பல்கலைக் கழகம்தான் அது!

* வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சை.

? எதிர்க்கட்சிகள் இல்லாத மக்களவையில் மசோதாக்களைச் சமர்ப்பிப்பது ராஜீவுக்குச் சந்தோஷமாக இருக்குமா? சங்கடமாக இருக்குமா?

! கலபமாக இருக்கும்.

* ஆர். ரத்தினசாமி, புன்செய்புளியம்பட்டி.

? இலங்கை வானொலியிலும் ம. வி. யிலும் திருமதி சிரிமாவோ பண்டார நாயகாவின் அறிக்கை முழுமையாகக் கூறப்பட்டது குறித்து?

! ஏதோ அண்டை நாட்டிலாவது எதிர்க் கட்சிக் குரலுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறதே!



* வாடியா வெல்வாரா?

* இதயத்தைத் திருடியவர்!



நீங்கள் கேட்டவை — தராசு



* எதிர்ப்புக் குரல்...



* ஜகா வாங்கினார்!

* நகைச்சுவைப் பிரியன், திருச்சி.

? 'எம். ஜி. ஆரிடம் நேரில் சென்று அவருடைய குறைகளையும், தவறுகளையும் சுட்டிக் காட்டும் தைரியமும் துணிச்சலும் எனக்கு மட்டும்தான் உண்டு' என்று மார் தட்டுகிறாரே, வீரப்பன்?

! இதை எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பின் கூறி மார் தட்டுகிற வீரமும் அவருக்கு மட்டுமே உண்டு!

* கோ. சு. சுரேஷ், கோவை.

? 'இதயத்தைத் திருடாதே' மணிரத்தினம் எப்படி?

! நம் இதயத்தைத் திருடியவர் காமிரா மேன் ஸ்ரீராம்தான்!

* பி. ராமலெட்சுமி, சென்னை.

? வேர்க்கடலை வறுத்தால், வேக வைத்தால் — எது பிடிக்கும்?

! வறுத்தால் கொஞ்சம் வெல்லச் சீவல் கலக்க வேண்டும்; வேக வைத்தால் உப்பு சற்றுத் தூக்கலாகவும் சூடாகவும் இருக்க வேண்டும். பிறகென்ன, வாய் அரவை இயந்திரமாக மாறி விட வேண்டியது தானே!

* ரவிச்சந்திரன், திருச்சி.

? சிவாஜி எந்தக் கட்சியில் சேரப் போகிறார்?

! அவர் எதில் சேருகிறாரோ இல்லையோ, அவருக்காகக் காத்திராமல் அவர் கட்சியினர் பலர் போய்ச் சேர வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்கள்!

* பாக்கியமுத்து, திருச்சி.

? இந்த வருடம் வெளிவந்துள்ள புது பாடப் புத்தகங்களின் தரம் எப்படி?

! ஏழாம் வகுப்பு தமிழ்ப் பாட நூலில் எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் பற்றிய பகுதியைப் பார்த்து அடைந்த ஏமாற்றத்தை ஒதுக்கி விட்டு, பதினோராம் வகுப்பு ஆங்கிலப் பாட நூலை எடுத்துப் புரட்டினால்... 'அட, மிகவும் புதுமையாகவும் பயனுள்ளதாகவும் இருக்கிறதே!' என்று வியக்கத் தோன்றியது.

* கே. இந்து குமரப்பன், விழுப்புரம்.

? சமீபத்தில் நீங்கள் பெருமைப்பட்டுக் கொண்ட நிகழ்ச்சி நடந்திருக்கிறதா?

! 'வி.ஏ.ஜிக்கு உள்நோக்கம் கற்பித்தும் அந்தப் பதவியை இழித்துரைத்தும் தாறுமாறாகப் பேசிய நாடாளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களின் பேச்சுக்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும்' என்ற தர்ம நியாயமான கோரிக்கை ஏற்கப்பட்டிருந்தால், ஜனநாயகப் பண்புகள் இன்னமும் இந் நாட்டில் உயிர் வாழ்வதாகப் பெருமைப்பட்டிருக்கலாம். ஆனால் அதற்குக் கூட வழியில்லாமல் போய் விட்டது. போங்கள்!

* மேகதூதன், ஸ்ரீரங்கம். *

? வரப் போகும் தேர்தலில் வெற்றி பெறப் போவது அம்பானியா? வாடியாவா? மன்னிக்கவும், ராஜீவ் காந்தியா? வி. பி. சிங்கா?

! போட்டீரே ஒரு போடு! உங்கள் கேள்வியைப் படித்ததும் அண்மையில் கேட்ட ஓர் உரையாடல் நினைவுக்கு வருகிறது. தொழிலதிபர்கள் சிலர் பேசிக் கொண்டிருந்தனர். ஒருவர் சொன்னார், "இப்போது அம்பானி ராஜீவ் காந்தியின் 'குட்புக்'ஸில் (கருணா கடாட்சத்தில்) இருக்கிறார்" என்று. உடனே இன்னொருவர் கூறினார்: தப்பு! தப்பு! இப்போது ராஜீவ் காந்தி அம்பானியின் 'குட்புக்'ஸில் இருக்கிறார் என்று சொல்லுங்கள்!"

* லீலா இராம், தக்கலை.

? இந்திய அரசியலில் என்ன மாற்றம் நிகழ வேண்டும் என விரும்புகிறீர்கள்?

! 'காங்கிரஸ்காரர்களே! முடிந்தால் தனித்து நில்லுங்கள்; இல்லாவிட்டால் அரசியல்வாதி கருணாநிதியோடு கூட்டுச் சேருங்கள்' என்று சென்னைச் சுவர்களில் இப்போது ஏராள போஸ்டர்கள் காணப்படுகின்றன. இதன் முதல் பகுதி மட்டும் நிறைவேற வேண்டும் என்று விரும்புகிறேன்.

* நல்லான் இராமசாமி, குறிக்காரன்வலசு.

? முன்பு நமது எம். ஜி. ஆர். நாளிதழில் ஜெயலலிதாவை பாரதியின் புதுமைப் பெண்ணோடு ஒப்பிட்ட பி. சி. கணேசன், சமீபத்திய ஜூ. வி. கட்டுரை ஒன்றில் அபிப்பிராயம் மாறுபட்டிருக்கிறாரே?

! அவருக்கு மட்டும் காலத்தின் கட்டாயம் ஏற்படக் கூடாதா என்ன!

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

மேகதூதன்,
29, வடக்கு அடைய வளஞ்சான்,
ஸ்ரீரங்கம் — 620 006.

குட்டி அரசாங்கத்தில் பெரிய அநீதி!

* அடிப்படை நிர்வாகத்தைக் கவனிக்க ஒவ்வோர் ஊராட்சியிலும் பகுதிநேர ஊராட்சி எழுத்தரால் நாற்பதுக்கும் மேலான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் பெயர்தான் பகுதிநேர எழுத்தர்; ஆனால் வேலையோ முழு நேரம். தற்சமயம் அமலாக்கப்பட்டுள்ள ஜவாஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு எனத் தனியாகப் பதிவேடுகள். எப்போதும் போல உள்ள நிர்வாகத்திற்குத் தனியாக வரவு — செலவுக் கணக்குகள். இப்படி இரு வகையான தணிக்கைக்குத் தயார் நிலையில் கணக்குகளைப் பராமரிக்க வேண்டும். ஆனால், எங்களுக்கு மாத ஊதியமோ ரூ. 37.50 தொடங்கி 75/- வரைதான். ஓர் ஊராட்சி எழுத்தர் நான்கு அல்லது ஐந்து ஊராட்சிகளில் பணிபுரிந்தால் கூடக் குறைந்தபட்சம் ரூ. 200/—ல் இருந்து 300/- வரையில்தான் ஊதியம் பெற முடியும்!

இவ்வளவு குறைந்த ஊதியம் பெற்று நிறைந்த வேலை செய்யும் எங்களை எந்த அரசும் கவனிக்கவில்லை. ஊதியக் குழுக்களும் சிபாரிசு ஏதும் செய்யவில்லை. மத்திய அரசும், மாநில அரசும் ஊராட்சிக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்து ஒரு குட்டி அரசாங்கம் போல ஆக்கி விட முயற்சிக்கும் இவ்வேளையில் அதன் அடிப்படைப் பணியாளர்களான ஊராட்சி எழுத்தர்களைக் கவனத்தில் கொண்டு சம்பள உயர்வு அளித்துப் பணி நிரந்தரம் செய்யுமா?

செம்பனார்கோவில், ஆர். நாகராஜன்
(மாவட்டப் பொருளாளர்)
தமிழ்நாடு ஊராட்சி எழுத்தர்கள் சங்கம்.

* கல்கியின் கார்ட்டூன்கள் என்றாலே அதில் கருத்துக்கள் செறிந்திருக்கும் என்பதை மெய்ப்பித்தன இவ்வாரக் கார்ட்டூன்கள். மூன்றும் ஏ கிளாஸ் சார்!

தோட்டக்குறிச்சி, இரா. வளையாபதி.

* ஏதோ விடியோவில் மேனகா காந்தி பேட்டியைப் பார்ப்பது போல, கேட்பது போல, கல்கியின் பேட்டியும் படங்களும் உயிரோட்டமாக அமைந்து விட்டன. அதுவும் அட்டை வண்ணப்படம் மேனகா காந்தியை நேரில் பார்ப்பதைப் போல அவ்வளவு தத்ரூபமாக இருந்தது!

முடிகண்டநல்லூர், க. ராஜேந்திரன்.

ஸி. ஏ. ஜி. பதவியின் சிறப்புகள், தனித் தன்மைகள் பற்றிய வழக்கறிஞர் வானமாமலையின் பேட்டியும், இன்றைய ஸி. ஏ. ஜி., டி. என். சதுர்வேதியின் எளிய வாழ்க்கைக் குறிப்பும் நன்றாக இருந்தன.

திருச்சி — 2, கி. ரமேஷ்.

* "உயிர்க் குருவிகள்" சிறுகதை, உயிரோட்டமுள்ள ஒன்று. என் வாழ்விலும் இதுபோல் பல உயர்வுகள் தேடித் தந்த ஒரு சைக்கிள் உள்ளது. 1972 — இல் 450 ரூபாய்க்கு வாங்கிய அந்த உயிரற்ற ஜீவன், உண்மையான நண்பனைப் போல் என்னைச் சுமந்து கொண்டிருக்கிறது. இக்கதையைப் படித்ததும் எனது சைக்கிள் உயிருள்ள ஜீவனாக என் கண்ணுக்குத் தெரிகிறது.

கோவை, த. கமலக்கண்ணன்.

* ராகவானந்தமும், அந்த சைக்கிளும் என் நெஞ்சில் நிறைந்து விட்டனர். இந்த அருமையான சிறுகதை என் மனத்தைக் கனக்கச் செய்து விட்டது. கதையின் முடிவில், கண்ணின் ஓரத்தில் ஈரம்...

அனுபவ எழுத்தாளரைப் போல முத்திரை பதித்திருக்கும் முருகேஷுக்குப் பாராட்டுக்கள்!

நிம்மேலி, நிலா இளங்கோ.

* ராஜ்கோகுலின் 'கொடியேற்றம்' சிறுகதை அருமை. சுதந்திர தினத்தன்று கொடியேற்ற 'என்னோட முயற்சியாலே உன் (பிழுன் சாம்பசிவம்) ஒருத்தனையாவது மனசளவிலே மாத்த முடிஞ்சதே! அதுவே எனக்குப் பெரிய உற்சாகத்தைக் கொடுக்குது...' என்று சந்தோஷப்படும் மானேஜர் சேதுராமனின் உள்ளத்தைக் கண்டு நெகிழ்ந்து போனேன்!

சீர்காழி, ஜெயப்ரியா.

* 'பெரிய பாளையத்து உற்சவ அன்னையின் படம் நேரில் தரிசித்தது போன்று இருந்தது. கட்டுரையும் அருமை. நிறைகளையும் குறைகளையும் ஒருங்கே கூறும் கல்கியின் பாணி தனிதான்!

கடலூர், சாந்தன்.

* 'இந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்கு விஜயம் செய்யுங்கள்' என்பதைப் படித்ததும் நெஞ்சு நிறைந்தது. புகார் கொடுக்க வரும் மக்களை நம்மூர் போலீஸார் அதுபோல வரவேற்க முடியாவிட்டாலும் முகம் கனிக்காமல் இருந்தாலே போதும்.

மடம், (வ. ஆ. மா.), வ. அரங்கநாதன்.

* "நான் உயிரைக் கொடுத்து நடத்துறேன். உங்க மர மண்டைக்கு ஒண்ணும் ஏறாதே" என வாத்தியார் சொல்லுவார். அவராலேயே புரிய வைக்க முடியாத அனலாக், டிஜிடலை எளிதாக ஒரு ராஜா கதை மூலம் புரிய வைக்க "சுஜாதா"வால் மட்டுமே முடியும்!

மதுரை — 2, சுகா ராஜ்.

* 'வீரேந்திர சிங்கின் தீரம்' தலையங்கம் கண்டேன். மனச்சாட்சியுடன் இவர் நடந்து கொண்டது பாராட்டப்பட வேண்டிய செயல். இவரின் இந்த முடிவு, இ. காங்கிரஸில் சரிவு ஆரம்பமாகியுள்ளதையே காட்டுகிறது.

கும்பகோணம், — 1, எல். ராம்பிரபு.

* "வீரேந்திர சிங்கின் தீரம்" என்ற தலையங்கம் ஒவ்வொருவரும் படிக்கத் தக்கதாகும். இது பிரதமருக்கு ஒரு நண்பன் சொல்வது போல உள்ளது.

சென்னை — 44, எஸ். குருசாமி.

* 'பிரதமருக்கு எல்லாமே விளையாட்டாக உள்ளது' எனப் பேட்டி கொடுத்துள்ளார் மேனகா காந்தி. முன்பு சஞ்சய் காந்தி உயிருடன் இருந்தபோது எமர்ஜென்சியைப் பயன்படுத்தி, தில்லியில் துர்க் மான் கேட் என்னும் இடத்தில், நானூறு குடியிருப்புக்களை அநியாயமாய் இடித்துத் தரைமட்டமாக்கித் தொழிற்சாலை துவங்க நினைத்தது விளையாட்டா அல்லது வினையா? அதைத் தொடர்ந்து பொதுத் தேர்தலில் காங்கிரஸ் தோற்றது — அது எதனால்? எல்லாமே அவருக்குத் தெரியாமல் நடந்தது என மேனகா அர்த்தமில்லாமல் கூறுவது விளையாட்டுத்தானா? பழசை யாரும் மறக்கவில்லை என்பதை மேனகா உணர வேண்டும்.

செம்பனார்கோவில், ராஜன்.



சுவையான சம்பவங்கள் !

காவேரி நதி பிறந்து குழந்தைபோல் தவழ்ந்து, துள்ளும் சிறுமியாய் சிரித்துச் சிவசமுத்திரத்தில் துள்ளிக் குதித்து, அழகிய இளம் பெண்ணாய் வளர்ந்து, மணப் பருவ மங்கையாகி அகண்ட காவேரியாகி, தஞ்சை தரணியில் குடும்பத் தலைவியாகி, பல கிளைகளுடன் தாயாகி லட்சக்கணக்கான மக்களை வாழவைக்கும் நதியாகி இருக்கிறது.

அதுபோல நமது *ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்* 1974-ல் காவிரிபோல் சிறிய நதியாக தொடங்கப்பட்டு, வளர்ந்து, வளர்க்கப்பட்டு இன்று 1,60,000 அங்கத்தினர்கள் கொண்ட ஸ்தாபனமாக இயங்குகிறது.

இது இன்று மகத்தான மக்கள் இயக்கமாக ஆகி உள்ளது.

நாணயம், உழைப்பும் உள்ள பொருளாதார, வியாபார வல்லுனர்களால் நேர்மையுடன் இயக்கப்படுகிறது.

கால மாறுதலுக்கு ஏற்ப மக்களின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்து அவர்களின் பேரன்பையும், ஆதரவையும் பெற்றுள்ளது. அதுவே *ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்* வெற்றியின் அஸ்திவாரம்.

1974 முதல் 1989 வரை சுமார் ரூ. 400 கோடியை மக்களின் உதவிக்கு அளித்துள்ளது *ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்.*

அங்கத்தினர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட பல கல்யாணங்கள், உயர்கல்வி வீடுகட்ட, வாங்க, வியாபாரத்தை வளர்க்க போன்ற பலவித தேவைகளுக்கு உதவிக்கரம் நீட்டி அவர்களின் இதய வாழ்த்துக்களைப் பெற்றுள்ளது.

எனவே இந்த இயக்கத்தினால் பயனடைந்த அங்கத்தினர்கள் வாழ்க்கையில் *ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்* தக்க சமயத்தில் அளித்துள்ள உதவிகளின் பின்னணியில் அநேக உணர்ச்சி பூர்வமான நிகழ்ச்சிகள் உண்டாகி இருக்கலாம். அப்படிப்பட்ட அனுபவங்களை 500 வார்த்தைகளுக்கு மேற்படாமல், (2 பக்கங்களில்) கதைபோன்று, உணர்ச்சி ததும்பும் சம்பவமாக எழுதி அனுப்பக் கேட்டுக் கொள்கிறோம்.

நீங்கள் அனுப்பும் ''சுவையான சம்பவங்களை'' நாங்கள் அமைத்துள்ள தேர்வுக்குழு தேர்ந்தெடுத்து, உங்கள் அனுமதியுடனும், புகைப்படத்துடனும் பத்திரிக்கைகளில் வெளியிட ஆசைப்படுகிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட அனுபவங்களுக்கு பரிசுகள் பல உண்டு.

முதல் பரிசு ரூ. 1000/- (2 நபர்களுக்கு)
இரண்டாவது பரிசு ரூ. 500/- (4 நபர்களுக்கு)
ஆறுதல் பரிசு ரூ. 100/- (10 நபர்களுக்கு)

காலதாமதம் இல்லாமல் உடனே எழுதி அனுப்புங்கள். தமிழிலோ, ஆங்கிலத்திலோ எழுதி அனுப்பலாம். உங்கள் அனுபவங்கள் எங்களுக்கு கிடைக்கும் கடைசி தேதி : 7.9.89.

''சுவையான சம்பவங்கள்'' என தலைப்பிட்டு உறையின் மீது குறிப்பிடல் வேண்டும்.

SHRIRAM GROUP COMPANIES
MADRAS


அனுப்ப வேண்டிய முகவரி :

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி. லிமிடெட்.

1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை-2. போன் : 474451/475536/470400/473932.

ADWAVE SCI 3861

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



உங்களுக்கும் உங்களது முன்னேற்றத்திற்கும் இடையில் இப்பொழுது உள்ள தூரம் ஒரு போஸ்ட் கார்டு தான் என்று நாங்கள் கூறினால் அது சற்று மிகையாகத் தோன்றும். ஆனால் உண்மை அதுதான்.

நீங்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஆங்கில மொழியில் போதிய பயிற்சியின்மை ஒரு தடையாக இருந்திருந்தால்........

மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசும் போது அதை ஓரளவு புரிந்து கொண்டும், அதற்கு ஆங்கிலத்திலேயே பதிலளிக்க முடியவில்லையே என்ற குறை உங்களிடம் குடி கொண்டிருந்தால்,

பல புத்தகங்களைப் படித்தும் ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என்ற சலிப்பு உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்,

நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை இப்பொழுது அடைய ஒரே ஒரு போஸ்ட்கார்டுபோதும்...ஆமாம்!

ஆங்கிலத்தில் இலக்கணப் பிழையின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுத வேண்டும், தயக்க மின்றி சரளமாகப் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்று போற்றப்படும் விவேகானந்தா கல்வி நிலையத்திற்கு இன்றே அனுப்புங்கள்.

நீங்கள் மேற்கொள்ள வேண்டிய பயிற்சியைப் பற்றியும் மற்ற தகவல்களையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள்.

வீட்டிலிருந்த படியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இந்த எளிய பயிற்சி முறையை நீங்கள் மேற்கொள்ளலாம்.

"நேர்முகப்பயிற்சியும் உண்டு."

என்ன?.....எங்கே கிளம்பி விட்டீர்கள்? போஸ்ட் கார்டு வாங்கத்தானே?

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி துவங்கிவிட்டது.

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி

விவேகானந்தா கல்வி நிலையம்
9, மேட்லி ரோடு,
தி. நகர், சென்னை - 17.

NAGA

ராஜ்மோகன் காந்தி

ஷேக் அப்துல்லாவும் நேருவின் மனச்சாட்சியும்!



• ''அப்துல்லாவுக்கு அநீதி இழைத்து விட்டேன்...''

ஜனவரி 1964. நேருவுக்கு ஒரு ஹார்ட் அட்டாக் வந்தது. ஸி. ஆர். அனுப்பிய தந்திக்கு இந்திரா காந்தி பதில் எழுதியிருந்தார். ''தந்தியும் தந்தியின் வாசகமும் உங்கள் தனித் தன்மையை எடுத்துக்காட்டுவதாக உள்ளன. எங்கள் இருவரையுமே அது உற்சாகப்படுத்தியது. அப்பா ஏற்கெனவே குணமடைந்து வருகிறார். ஆனால் அவர் இன்னும் கொஞ்ச காலம் ஓய்வாக இருக்க வேண்டும். டாக்டர்கள் சொல்வதைக் கேட்டு நடந்து கொள்வதில் இன்னும் அதிகமான சிரத்தை காட்ட வேண்டும்.''

மொரார்ஜிக்குப் பிறகு டி.டி.கே. நிதி அமைச்சராகி இருந்தார். நேருவின் உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்த போது அவருடன் நெருக்கமாக இருந்து வந்தார். இந்தக் காலகட்டத்தில் ராஜாஜியைப் பற்றி நேரு அடிக்கடி நினைத்தார் என்று கிருஷ்ணமாச்சாரி கூறுகிறார். ஹார்ட் அட்டாக்குக்குப் பிறகு நேருவின் எண்ணத்தில் அடிக்கடி இடம் பெற்ற இன்னொரு நபர் ஷேக் அப்துல்லா. காஷ்மீரின் மிகப் பிரபலமான புள்ளியும் பல ஆண்டுகளுக்கு நேருவின் நெருங்கிய தோழராகவும் விளங்கிய ஷேக் அப்துல்லா, 1953ல் முதல்வர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டிருந்தார். இந்தியாவுடன் காஷ்மீர் இணைவதை முன்பு பலமாக ஆதரித்திருந்த ஷேக் அப்துல்லா, இப்போது அந்த இணைப்பைத் துண்டித்து விட எண்ணுகிறார் என்பதாகச் சந்தேகம் தோன்றியதின் விளைவுதான் அவர் கைதாகி, கொடைக்கானல் 'கோஹினூர்' பங்களாவில் சிறை வைக்கப்பட்டதற்குக் காரணம். இது நடந்து பதினோரு ஆண்டுகள் ஆகி விட்டன. அப்துல்லா இன்னமும் சிறையில்தான் இருந்தார். லால் பகதூர் சாஸ்திரியை அழைத்துப் பேசினார் நேரு. ''காமராஜ் திட்டத்தின்'' படி ராஜினாமா செய்திருந்த சாஸ்திரி, நேருவின் உடல்நலக் குறைவு காரணமாக மீண்டும் அமைச்சரவையில் சேர்ந்திருந்தார். இலாகா இல்லாத மந்திரியாக அனைவருக்கும் ஆலோசனைகள் வழங்கும் நிலையில் இருந்தார் அவர். அவரிடம் நேரு சொன்னார்: ''நான் அப்துல்லாவுக்கு அநீதி இழைத்து விட்டேன். அவரை நாம் விடுவித்து விட வேண்டும்.''

ஷேக் அப்துல்லா விடுவிக்கப்பட்டார். காஷ்மீர மக்கள் ஒரு மாபெரும் வீரருக்கு உரிய வரவேற்பு அளித்து அவரைக் கௌரவித்தனர். ஜவாஹர்லால் அவரைப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்தார். பிரதமரின் மாளிகையிலேயே தங்கி இருக்கச் செய்தார். இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீர மக்களும் ஏற்கக் கூடியதான ஒரு தீர்வு உண்டா என்பது பற்றி அவர்கள் விவாதித்தார்கள். பகை உணர்வு நீங்கி நேசக் கரம் நீட்டப்படுகிற இந்த நடவடிக்கையை ராஜாஜி மனப்பூர்வமாக வரவேற்றார். ராஜாஜியைச் சந்திக்க ஷேக் அப்துல்லா சென்னைக்கு வந்தார்.

மூன்று மணி நேரம் அவர்கள் பேசினார்கள். 'ஜம்மு காஷ்மீர் முழுமையிலும் மக்களின் விருப்பத்தை அறிய அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்த வேண்டும்' என்று கூறினார் அப்துல்லா. 'இந்த வாக்கெடுப்பு



• மூன்று மணிநேரப் பேச்சு...

அடுத்த இதழில்...



மலையாளத்தில் அவார்டு; தமிழில் அலட்சியம்!

— ஒரு நடிகையின் ஆதங்கம்

பாகிஸ்தான் வசமிருந்த ஆஸாத் காஷ்மீரிலும் நடக்க வேண்டும்.' ஆனால் மாற்றுத் திட்டங்களை யோசிக்கவும் அப்துல்லா தயாராக இருந்தார். ராஜாஜியின் யோசனை, 'இந்தியா, பாகிஸ்தான், ஐ.நா. சபை ஆகிய மூத்தரப்பினரும் அங்கீகரித்துக் கையெழுத்திடும் வகையில் அப் பகுதியை மூன்றாகப் பிரித்து விடலாம்' என்பது. இதன்படி ஏற்கெனவே பாகிஸ்தான் வசமிருக்கும் ஆஸாத் காஷ்மீர் பாகிஸ்தானுக்கு வழங்கப்படும். ஜம்முவும் லடாக் பகுதியும் இந்தியாவைச் சேரும். காஷ்மீர் ஷேக் அப்துல்லாவின் தலைமையில் சுதந்திர நாடாகும். ராஜாஜியும் ஷேக் அப்துல்லாவும் தங்கள் பேச்சு வார்த்தைகளில் திருப்தி அடைந்ததாகத் தெரிவித்தனர். தமது கருத்தை சுயராஜ்யாவில் விளக்கினார் ஸி. ஆர்:

''ஷேக் அப்துல்லாவும் காஷ்மீர மக்களும் மீண்டும் நமது கவனத்தைக் கவர்கின்றனர். ஒரு புதிய ஆரம்பம் ஏற்பட வேண்டும்; பிரச்னைக்குத் தீர்வு காணும் போது எந்தத் தரப்பினருக்கும் அவமானம் உண்டாகக் கூடாது; கண்ணியம் காக்கப்பட வேண்டும் என அவர்கள் கருதுகின்றனர்.

''காஷ்மீர மக்கள் இந்தியாவுடன்தான் இணைந்திருக்க விரும்புகிறார்கள் என்பதை நாம் சந்தேகத்துக்கு இடமின்றி பாகிஸ்தானுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும். இதைச் செய்வதுதான் நியாயம். அப்போது தான் பாகிஸ்தான் வாயை மூடிக் கொண்டு இருக்கும். இதைச் செய்யாமல் நாம் பின்வாங்கினோமானால், காஷ்மீர மக்கள் இரு பக்கமும் சேராமல் தனித்திருந்து-அணி சேராமல் ஆனால் நட்புறவுடன் — வாழ விரும்புகிறார்கள் என்பது ஒருவேளை உறுதிப்பட்டு விடுமோ என்ற அச்சம் நமக்கிருப்பதாகக் கருதப்படும்.'' (16.5.64).

ராஜாஜி எதிர்பார்த்த அளவுக்கு நேருஜி விட்டுக் கொடுப்பாரா? காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்ததை மறுபரிசீலனை செய்ய — ஓரளவுக்குத்தான் என்றாலும் கூட — அவர் தயாராவாரா? அதற்கு அவர் தயாராக இருந்தது போலத்தான் தோன்றியது. ஏனெனில் ஷேக் அப்துல்லாவின் உள்ளக் கருத்துக்களை நேரு முழுமையாக உணர்ந்து அறிந்திருந்தபோதிலும் அவரைப் பாகிஸ்தானுக்கு ஜனாதிபதி அயூப்கானுடன் பேச்சு வார்த்தை நடத்த அனுப்பி வைத்தார். ஆனால் காங்கிரஸ் கட்சிக்கு நேருவின் மனமாற்றம் பிடிக்கவில்லை. வழக்கத்துக்கு மாறாகப் பலர் வெளிப்படையாகவே தங்கள் அதிருப்தியை வெளியிட்டனர். ''காஷ்மீர் விஷயத்தில் பிரதமர் இந்தியாவைக் கைவிட்டு விட மாட்டார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்'' என்று மொரார்ஜி கூறியது ஓர் எச்சரிக்கை போலவே அமைந்தது.

இது இவ்வாறாயினும் அப்துல்லா பாகிஸ்தானுக்குப் போகவே செய்தார். அயூப்கானுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். அதில் முன்னேற்றம் இருப்பதாக நேருவுக்கு ஃபோனில் தெரியப்படுத்தவும் செய்தார். ''அயூப் டெல்லிக்கு வர முடியுமா?'' என்று நேரு கேட்டார். பாகிஸ்தான் அதிபர் அதற்குத் தயாராக இருப்பதாகப் பதில் கிடைத்தது. ஆனால் அடுத்த ஏழு நாட்களுக்குள்ளாகவே நேரு, பக்கவாத நோய் தாக்கி மே மாதம் 27 ஆம் தேதி டில்லியில் காலமாகி விட்டார். திடுக்கிட்டார் ஸி. ஆர். உடன்பாட்டுக்குரிய வாய்ப்பும் மரணமடைந்து விட்டது என்பது அவருக்கு உடனே புரிந்து போயிற்று. காஷ்மீர் விஷயத்தில் ஒரு மாறுதலை இந்திய மக்கள் ஒப்புக் கொள்ளுமாறு செய்வதெனில் அது நேரு ஒருவரால்தான் முடியும். வேறு யாருடைய முயற்சியும் பலிக்காது. நாட்டின் ஒரு பகுதியை விட்டுக் கொடுத்து இழப்பதற்கு எந்த இந்தியனுக்குத்தான் மனம் வரும்?

(தொடரும்)

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: டி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.


பாலின் சத்து
ட்ரூவின் அன்பு
புதிய
ட்ரூ
ப்யூர்
மில்க் பிஸ்கட்
Milk Biscuits
Milk Biscuits
சிறந்த பொருட்களைக் கொண்டு அன்புடனும்
அக்கறையுடனும் தயாரிக்கப்படுவது

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka